
Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga
416.321.6969 / 905.712.2666


16 வது வருடத்தில்
# விளம்பரம்
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
OPEN 7 DAYS
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

நதி 16 | பாலம் 06 | சமூக முன்னேற்றப் பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MARCH 15, 2006



சிறுவர் நாடகம் 08



முற்பிறவி 08



காப்புறுதியில் மக்களின் மோசடிகள் 09

# தமிழீழ விளையாட்டுத்துறை

உலகில் உள்ள நாடுகள் ஒரு காலகட்டத்தில் அரசியல், இராணுவரீதியாக தங்களிடையே போட்டியிட்டன. பின்னர் பொருளாதார ரீதியில் போட்டியிட்டன. இன்று ஒவ்வொரு நாடும் தங்களிடையே விளையாட்டு ரீதியாக போட்டியிடுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அந்தளவிற்கு விளையாட்டு செயற்பாடானது உலகில் முக்கியத்துவம் பெறுகின்றது. ஒருகாலகட்டத்தில் பொழுது போக்காகவும் உடல் உள ஆரோக்கியத்திற்கும் மட்டும் விளையாடப்பட்ட விளையாட்டானது இன்று மிகப்பெரிய வேலை வாய்ப்புக்களையும், மிகப்பெரிய பொருளாதா வளங்களையும் அள்ளி வழங்குகின்ற ஒரு பெரிய துறையாக வளர்ச்சி கண்டுள்ளது. ஒவ்வொரு நாடுகளும், மக்களும் தங்களை பிரபல்யப்படுத்துகின்ற ஒரு கருவியாக விளையாட்டு செயற்பாட்டினை பயன்படுத்துவதோடு தங்களிடையே சமாதானத்தையும், பரஸ்பர புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு ஏற்படுத்துகின்ற கருவிகளாக பயன்படுத்துவதை கண்கூடாக காணக்கூடியதாக உள்ளது என்றால் மிகையாகாது!.

"வீரம் செறிந்த எமது தமிழ் இனத்தின் அடையாளங்களை சர்வதேச ரீதியில் வெளிப்படுத்துவதற்கு விளையாட்டுத்துறை ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது" என்று கூறியுள்ளார் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன்.

எந்தவொரு தேச விடுதலையிலும் காணப்படாத பெருமை எமது தேச விடுதலைப் போராட்டத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது. அதாவது போராடுகின்ற சக்தியானது தனது போராடுகின்ற காலத்தில் அரசியல் இராணுவரீதியான கட்டமைப்புகளை மட்டுமே கொண்டிருக்கும். ஆனால் எமது தேசிய தலைவர் அவர்கள் அரசியல், இராணுவரீதியான முனைப்புகளுக்கு மத்தியில் விளையாட்டு செயற்பாடுகளையும் ஊக்குவிக்கின்ற நடவடிக்கையானது

தொடர்ச்சி 06ம் பக்கம்

# அமெரிக்காவும் கண்டிக்கின்றது

## இலங்கை இராணுவத்துடன் தமிழ் துணைப்படைகள் இயங்குகின்றன



'இலங்கை இராணுவத்துடன் கைகோர்த்து இயங்கும் தமிழ் துணைப்படைகள், பல சந்தர்ப்பங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஆயுதத் தாக்குதலில் ஈடுபட்டன' என்று அமெரிக்கா அறிக்கை விடுத்துள்ளது.

'புலிகளின் மட்டுநகர் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌ-சிகன் உட்பட புலிகளின் உறுப்பினர்கள் 27 பேரை இத்துணைப்படையினர் கொன்றொழித்துள்ளனர்' என்றும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை காவல் துறையின் காவல் நிலையங்களில் சித்திரவதைகளும், கொலைகளும் நடைபெறுவதையும் அமெரிக்கா இந்த அறிக்கையில் மிக வன்மையாக கண்டித்துள்ளது.

கடந்த ஆண்டு காவல் நிலையங்களில் 25 மரணங்கள் நடந்துள்ளன. இதில் 20 பேர் சித்திரவதையினால் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


வடக்கு - கிழக்குக்கு வெளியே தென்னிலங்கையில் மட்டும் காவல் துறையினரின் சித்திரவதைகள் தொடர்பாக 634 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதான அறிக்கை விவரிக்கின்றது.

16 பக்கம் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், 'தமிழீழ விடுதலைப் புலிகள் தங்கள் நிர்வாகப் பகுதியில் தங்களது நீதித்துறையை ஏற்குமாறு மக்களை வற்புறுத்துகின்றனர். விடுதலைப் புலிகளின் நீதித்துறையில் உள்ளவர்கள் சட்டப் பயிற்சி பெறாதவர்கள். கடந்த ஆண்டு 68 படையினர் மற்றும் காவல் துறையினர், துணைப்படையினர் உட்பட 106 பேர் தமிழீழ விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டுள்ளனர்' என்றும் அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

HOLMAN
Insurance Brokers LTD.
Balan Kanapathipillai, R.I.B. (ON)
Associate Broker


• Auto • Commercial • RESP
• Home • Life • RRSP
416.321.1515 • 416.452.6975
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

Singapore Communication
Since 1991
$40/350 min + Unlimited incoming local calling
$50/500 min + Unlimited incoming local calling
$75/750 min + Unlimited incoming local calling
**Option E & W calling , Free phone $20, $30 Packages also available
For More Info Please Visit to the Store
*** Offer Ends Without Notice*****
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC
(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

"Making Dreams Reality"

HomeLife GTA Realty Inc.
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416-817-8479
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER


RAJ
A. Rasaratnam
B.Com(Hons) - Sales Rep
416-726-8055
HomeLife/GTA Realty Inc.

THINKING OF BUYING / SELLING

HomeLife GTA Realty Inc.
Jeyanthi Sritharan
Sales Representative
416-918-5872
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி

DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd.
Suite #206, Toronto

# "தொடர்கிறது கனவு இல்லம்"

வீட்டில் முதலீடு செய்து இலாபம் அடைந்தவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ நான்கு அடிப்படை விதிகளைக் கடைப்பிடித்தனர் என்று சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தோம். அந்த நான்கு விதிகள் என்னென்ன? சென்ற இதழைப் படித்தவர்க்கு நினைவு கூர்வதற்காகவும், சென்ற இதழைப் பார்க்க வாய்ப்பில்லாமல் போனவர்களும் தெரிந்து கொள்ளவும் மீண்டும் ஒருமுறை அவ்விதிகளை இங்கே குறிப்பிடுகின்றோம்.

## வாழ்வில் வெற்றி பெற

- மற்றவர் (வங்கி) பணத்தைப் பயன்படுத்தி சொத்து வாங்குதல்.
- வருமானம் (வாடகை) தரக்கூடிய இடம் "Location" அல்லது விலையேறக்கூடிய இடத்தில் சொத்து வாங்குவது அல்லது வாடகையை மிச்சப்படுத்தி சொந்த வீட்டில் இருப்பது.
- வரிச் சலுகைகள் (கனடாவில் முதன்மை வீட்டை விற்பதனால் கிடைக்கும் இலாபத்திற்கு வரிகட்டத் தேவையில்லை).
- பொதுவில் தானே விலை உயரக் கூடிய சூழ்நிலைகள். (பொருளாதாரச் சூழ்நிலைகள்) வங்கிக் கடனைப் பயன்படுத்தி இலாபம் அடை-வதைப் பற்றி விரிவாகச் சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தோம். இப்போது மற்றவற்றின் விரிவைப் பார்போம்.

### சொத்து அமைந்திருக்கும் இடம் அல்லது "லொகேஷன்"

- ஒரு இடம் நல்ல இடமா இல்லையா என்று எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றது? அது தரக்கூடிய வருமானத்தைப் பொறுத்தே. வருமானம் என்பது வாடகையை வைத்து தீர்மானிக்கப்படுகின்றது. இல்லையேல் சொந்தவீடு என்றால் கிடைக்கும் சௌகரியங்களின் அடிப்படையில், அந்தச் சௌகரியத்தைப் பெற வெளியில் வாடகையாகச் செலவிடுவதற்குப் பதிலாகத் தரப்படும் பணத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. இன்றைக்கு நிதி நிறுவனங்கள் கனடாவில் வாடகைக்கு விட இரண்டாவது வீட்டை விலைக்கு வாங்கினால் அதற்கும் கடன் தரத் தயாராக உள்ளன. அந்தக் கடனைப்பெற நீங்கள் நிரூபிக்க வேண்டியது சென்ற வாரம் குறிப்பிட்டதைப் போன்று இரண்டு விடயங்கள். ஒன்று மேல் ஓங்கிய உங்கள் கடன் சரிதம் மற்றது மாதங்தோறும் உங்களுக்கு வரக்கூடிய ரொக்க வரவு. குறிப்பாக வாடகைக்கு விடும் வீட்டில், கிடைக்கும் பணம், செலவு நீக்கி நிகர வாத வரவு உங்களுக்குச் சாதகமாக உள்ளதா? பாதகமாக உள்ளதா? பாதகம் என்றால் அதை ஈடுகட்டக் கூடிய அளவுக்கு உங்களின் மாத வருமானம் செய்யும் வேலை அல்லது தொழில் போன்றவற்றிலிருந்து வருகின்றதா? எல்லாவற்றிற்கும் மேலாக பொதுவில் அந்த இடம் விலை ஏறிக் கொண்டு வருகின்றதா? அல்லது ஏறக் கூடிய வாய்ப்புக்கள் தென்படுகின்றனவா?

ஓர் உதாரணம் இங்கே தருவோம். உங்களின் இரண்டாவது வீட்டை வாடகைக்குக் கொடுத்திருக்கிறீர்கள். அதிலிருந்து கிடைக்கும் மாத வருமானம் 1800 டொலர் ஆகும். வீட்டுக் கடனுக்குக் கட்ட வேண்டிய மாதத் தொகையும் மற்றச் செலவுகளும் 1500 டொலர் ஆகும். அப்படியானால் அந்த வீட்டிலிருந்து கிடைக்கும் ரொக்க நிகர மாத வரவு 300 டொலர் ஆகும். மேலும் அது உங்களுக்குச் சாதகமாக உள்ளது. இல்லையா? அதாவது உங்கள் குடித்தனக்காரர் உங்கள் வீட்டுக்கடனுக்குப் பணத்தைக் கொடுத்து உங்களை பணக்காரர் ஆக்கிக் கொண்டிருக்கிறார் என்று அர்த்தம் இல்லையா?

**பெரி. முத்துராமன்**

வரிச் சலுகைகள் - அமெரிக்கா, உள்ளிட்ட பல நாடுகளின் வீட்டுக்கடனுக்குக் கட்டும் வட்டியை, வருமான வரியில் கழித்துக் கொள்வதாக உள்ளது. அத்தகைய ஒரு நிலைப்பாடு கனடாவில் இல்லை. எனினும் சொத்து ஆதாயவரியோ (Capital Gain Tax) அல்லது மற்றபடி வருமானவரியோ முதன்மை வீட்டைச் விற்பதானால் கிடைக்கும் இலாபத்திற்குக் கட்டத் தேவையில்லை. கனடா தந்துள்ள இந்த வரிச் சலுகையை பல நாடுகள் தருவதில்லை.

மேலும் நீங்கள் வாடகைக்கு என வீட்டுக்கடன் எடுத்திருந்தால், கட்டிடத்தின் தேய்மானத்தையும் (Depreciation) வரியைக் குறைக்கப் பயன்படுத்திக் கொள்ளலாம். நிலத்திற்குத் தேய்மானம் இல்லை என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். ஆக நீங்கள் தூங்கிக் கொண்டிருக்கும் போது உங்கள் வாடகை வீடு சற்றே வரிக்குட்படாத பணத்தையும் தரக்கூடிய வாய்ப்புள்ளது.

**விலைஉயர்வு -** விலை ஏற்ற இறக்கங்கள் எல்லாத்துறைகளிலும் உள்ளது. வீடும் இதற்கு விதி விலக்கல்ல. சில புள்ளி விவரங்களைப் பார்ப்போம். 1993இலிருந்து 2003 க்கு இடைப்பட்ட பத்து ஆண்டுகளில் கனடாவில் வீட்டு விலைகள் சராசரியாக வருடத்துக்கு 4.8 சதவீதம் கூடி வந்துள்ளது. ஆனால் அமெரிக்காவிலோ இதே காலகட்டத்தில் வீட்டு விலைகள் வருடத்துக்கு 10.5 சதவீதம் கூடி வந்துள்ளது. இதே காலகட்டத்தில் ரொறோன்ரோ பங்குச் சந்தையில் விலை ஏற்றம் ஆண்டுக்குச் சராசரியாக 9.1 சதவீதமாக இருந்து வந்துள்ளது. ஆனால் முன்னர் குறிப்பிட்டதைப் போன்று பங்குச் சந்தையில் முதலீடு செய்ய யாரும் 90 அல்லது 95 சதவீதம் கடன்தரமாட்டார்கள்.

எந்த ஊரிலும், எந்த நாட்டிலும் நீங்கள் வசிக்கும் இடத்தைச் சுற்றியுள்ள பத்துமைல் அளவில் பார்த்தால் விற்பனைக்குப் பலவீடுகள் வருவது தெரியவரும். ஆனால் உங்களுக்கு விலைக்கு வாங்கத் தேவை ஒரே ஒரு வீடுதான். எனவே வீடு பணக்காரர் ஆவதற்கு ஏற்ற ஒரு வழி என்று நீங்கள் முடிவுக்கு வந்தால், அந்த வீட்டைக் கவனமாகத் தெரிவு செய்து வங்கியை அணுகுங்கள். கனடாவில் 2004 இல் வீட்டுக்கடனைக் கட்டாது விட்டு வங்கிகள் எடுத்து விற்பனை செய்த வீட்டின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? ஒரு சதவீதத்திற்கும் குறைவே. அதாவது 0.4% சதவீதம் மட்டுமே. அதாவது நூறுபேர் கனடாவில் வீட்டுக்கடன் வாங்கினால் 99பேர் ஒழுங்காகக் கட்டி விடுகின்றனர். வங்கிகள் தொன் கணக்கில் வீட்டுக்குக் கடன் கொடுக்க ஆசைப்பட இதுவும் ஒரு காரணமே. மேலும் வீட்டுக் கடனில் வங்கிகள் பணத்தை இழப்பது இல்லை. பெரும்பாலான கடன்கள் சி.எம்.எச்.சி (CMHC) அல்லது ஜி.இ (GE) யால் திரும்பச் செலுத்தப்படுவதற்கு உறுதி செய்யப்பட்டிருக்கும். வங்கிக்குக் கடன் பெறச் செல்லும் போது வேலைக்கு மனுச் செய்வதைப்போல் கருதிக் கொள்ளுங்கள். இரண்டு இடத்திலுமே ஒரு நல்ல அபிப்பிராயத்தை நீங்கள் உருவாக்க வேண்டும். இல்லையேல் இரண்டுமே கிடைக்காது. முதலில் ஒரு நல்ல அபிப்பிராயத்தை உருவாக்க இரண்டாவது சந்தர்ப்பம் கிடைக்காது. எனவே முதல் சந்தர்ப்பத்தையே சிந்தித்து செயல் படுத்திப் பயன் அடையுங்கள்.




# தமிழில் இலவச கருத்தரங்கு

## எவ்வாறு வீடு வாங்குவதும், அடமானம் ஒழுங்கு செய்வதும்

வீடு வாங்குதல், அடமானக் கடன் ஒழுங்கு செய்தல், வாழும் வீட்டிற்கு திரும்ப கடன் ஒழுங்கு செய்தல் போன்றவற்றை அறிந்து கொள்ள சிறந்த அனுபவசாலிகளின் கருத்துக்களை, அனுபவங்களைப் பெற இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுங்கள்

இடம் - ஸ்கோஸியா பாங்
Scotiabank, Cedarbrae Mall,
3475 Lawrence Ave. East,
Scarborough, ON M1H 1B2

காலம் - ஏப்பிரல் 19, 2006, புதன்கிழமை

நேரம் - மாலை 6:30 முதல் 8:00 மணி வரை

வரையறுக்கப்பட்ட ஆசனங்களே.
இன்றே அழையுங்கள்
பெரி முத்துராமன்
416.439.3040 Ext. 2008

Scotiabank
Life, Money, Balance both.


## காப்புறுதி நட்ட ஈடுகள் பெறுவதில் மக்களின் மோசடிகள்

09 ஆம் பக்கத் தொடர்ச்சி

இவ்வழிகளில் மோசடி நட்டஈடு பெற்று பிடிபடாமல் இருப்பவர்கள் பலர் என இப்புலனாய்வு நிறுவனத்திற்கு தெரிந்த போதும் ஆதாரம் இல்லாமையால் நடவடிக்கை எடுக்க முடியவில்லையே என அறிவித்துள்ளார்கள். ஏனெனில் பல சந்தர்ப்பங்களில் பனிகட்டி சறுக்கலில் அல்லது வீட்டுபடிகளில் விழுந்து விட்டு, அன்று மாலை தெரிந்தவர் ஒருவரின் காருக்கு பின்னால் இன்னொரு அப்பாவி மோதியிருந்தால் அதில் சேர்ந்து போய் காயப்பட்டவர் என குறிப்பிட்டு நட்டஈடு பெறுவது ஒருவகை மோசடி.

### 7. TOO GOOD TO BE TRUE

ஒரு வாகன விற்பனை நிலையம் குறைந்த விலையில் காப்புறுதி செய்து தரும் ஒரு முகவரை அறிமுகபடுத்தி விடுவதற்கு $500 டொலர் அறவிட்டு வந்தது. முகவர் என குறிப்பிடப்பட்டவர் போல காப்புறுதி பத்திரங்களை வழங்குவார். காப்புறுதி மாத கட்டுபணம் தனி நபர் ஒருவரிடம் போய் சேர்ந்தது. இப்புலனாய்வு நிறுவனத்திற்கு தகவல் கிடைத்ததும் சுமார் நூறுக்கு மேற்பட்ட ஏமாந்த அப்பாவிகளை மீட்டு எடுத்தனர்.

### 8. PERSISTENCE DOESN'T PAY

விபத்துகளை உருவாக்கி நட்டஈடு பெறும் ஒரு கூட்டம், தங்கள் கூட்டத்தினை இக்காப்புறுதி மோசடி வர்த்தகத்திற்காக விரிவு படுத்தும் போது பிடிபட்டது. ஆனால் இரகசியமாக தொலைபேசி உரையாடல்கள் பதிவு செய்யப்பட்டு பிடிபட்டது.

### 9. THE INVISIBLE WORKERS

ஒரு கம்பனியில் தொழில் புரியாதோர், இக்கம்பனி பற்றிய தகவல் தெரிந்த சட்ட உதவியாளரின் உதவியுடன் தொழிற்சாலை விபத்தில் காயப்பட்டார் என குறிப்பிட்டு நட்ட ஈடு பெற்று பிடிபட்டனர்.

### 10. VERY BAD ADVICE

சட்ட உதவியாளர்கள் சிறு விபத்துகளை பெரிதாக்கி பாதிக்கப்பட்டவர்களுக்கு போகும் நட்ட ஈடுகளை மோசடியில் மடக்கும் ஓர் அநியாயம்.


விளம்பரம் VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.



**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com



HOME INSPECTION

- வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள...
- வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

ந. தயாபரன்
Certified Inspection Specialist
Expert Building Inspections LTD.
• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report
24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

# ரொறொன்ரோ கல்விச் சபைத் தமிழ்ப் பாடநூல்கள்

'வடமொழி இல்லாமல் தமிழ் தனித்து இயங்குவது கடினம்' கொம்பறை 2006 ஆண்டுமலரில் அதிபர் பொ.கனகசபாபதி கட்டுரை எழுதியுள்ளார்.

'சமய சம்பிரதாயங்கள்:

நிறையவே நல்ல பல அம்சங்கள் உள்ளன. ஆனால் அனாவசிய சம்பிரதாயங்கள் அறவே ஒழிக்கப்படுதல் அவசியம். நேரவிரயம், பக்தர்களின் பங்களிப்பு, தமிழில் பூசை செய்தல், உபந்நியாயங்கள் போன்றவை பற்றி நிறையவே மற்றவர்களைக் கவரக்கூடிய முறையிலே மாற்றங்கள் ஏற்படுத்தல் வேண்டும். தமிழில் பூசை செய்ய வேண்டும் என்றவுடன் நான் சமிஸ்கிருதத்துக்கு விரோதி எனக் கருதாதீர்கள். இது ஓர் அற்புதமான மொழி. இம்மொழி இல்லாமல் தமிழ் தனித்து இயங்குவது கடினம். ஆனால் என்ன செய்யப்படுகிறது என்பதை எல்லோரும் விளங்கிக் கொள்ளவேண்டும் என்பதால் தமிழில் பூசை நடைபெற வேண்டும் என்கிறேன். இதனால் நேரத்தையும் மிச்சம் பிடிக்கலாம்.'

மேலே கொடுக்கப்பட்ட பந்தி அதிபரால் கொம்பறை ஆண்டுமலர் 2006 இன் கட்டுரையில் சிறுபகுதியை அப்படியே தந்துள்ளேன். ஆண்டுமலர் 2006 (பக்கம் 96) வெளியீட்டினருக்கு நன்றி.

எமது மதிப்புக்கும் அன்புக்கும் உரியவர் அதிபர் பொ. கனகசபாபதி அவர்கள், பல நல்ல மாணவர்களை உருவாக்கியவர். தமிழ்க் குமுகாயத்திற்கு கல்வி யடிப்படையில் பல பணிகளைத் தாயக மண்ணில் செய்து நன்மதிப்பைப் பெற்றவர். புலம்பெயர்ந்த மண்ணிலும் பல நல்ல பணிகளைச் செய்திருக்கிறார். கல்வியில் நிறைவான பட்டறிவைப் பெற்றவரில் இவரும் ஒருவர். அவர் ஆசிரியர், அதிபர், எழுத்தாளர், கருத்துப்பகிர்பவர், மற்றும் வானொலிக் கலைஞர் என பல்வேறு வடிவங்களில் தன்னுடைய திறமைகளை ஆற்றல்களை வெளிப்படுத்திக் கொண்டு வருகின்றார். அன்பாக நடப்பவர்களோடு பண்போடு நடப்பவர். எங்களுக்கெல்லாம் மூத்தவர் உயர்ந்தவர்.

கொம்பறையில் அதிபர் வழங்கிய கூற்றுப்படி, இவர் ஏன் இப்படி வடமொழி இல்லாமல் தமிழ் தனித்து இயங்க ஏலாது என்று கூறுகிறார்? தனித் தமிழ் சார்ந்த புத்தகங்களைப் படிக்கவில்லையா? வேற்றுமொழியை இவ்வாறு தமிழில் சேர்ப்பதால் என்ன நன்மையைக் காண்கிறார்? தமிழ்மொழியின் ஆளுமையைப் புரிந்த பின்பும் அதைத் தமிழர் மத்தியில் துணிவோடு சொல்ல பின்வாங்குகிறாரா?

பல வேற்று மொழிகளைக் கற்றுக் கொள்வதால் அறிவை மேலும் வளர்க்க முடியும். பலர் பல மொழிகளைக் கற்றுக் கொண்டாலும் தாய்மொழி தான் உயிர் மூச்சாக இருக்கும். 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்ற பழமொழிக்கு அமைவாக தாய்மொழி தான் சிறந்ததாக இருப்பது எல்லா மொழியினருக்கும் இயல்பாகும். அத்தோடு வேறு மொழிகளைச் சிறந்தது என்றும் சொல்லலாம்.

ஆனால் நாம் தமிழைத் தூக்கியெறிந்து விட்டு வேற்றுமொழிகளை தலையிலே தூக்கி வைத்து ஆடுகின்றோம். நாமும் மொழியை இழந்து வாழுகின்ற பிசி, கரபியன் தீவு, மொறிசியசு, கயானா, மற்றும் ஆபிரிக்காவில் வாழும் தமிழர்களோடு எங்களையும் சேர்க்கவேண்டியதாகும். தமிழை படிக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு வேற்றுமொழியை ஐயம் திரிவு பெற கற்றுக் கொண்டிருக்கிறோம்.

அப்படி என்றால் கல்விச்சபை எதற்காக தமிழைப் படிப்பிக்காமல் தமிழ்ப்பாடம் என்று நடத்த வேண்டும். கல்விச் சபையில் தமிழ்ப்பாடத்தை உருவாக்கியவர்கள் தங்கள் உழைப்பைக் கருதியே செயல்படுகிறார்கள். தமிழ் மொழியை அழிப்பதில் இவ்வளவு இன்பமா? கடந்து வந்த காலம் எமது மொழியை அழிப்பதற்கு உறுதுணையாக தமிழர்களாகிய நாமே இருந்துள்ளோம். எமது மொழிக்குள் இன்னொரு மொழி உட்புக விடாமல் தமிழர்கள் என்ன தடையைப் போட்டார்கள். இன்றும் இந்தக் கேள்விக்கு விடை வழங்க முடியாத சிக்கலில் நாம் இருக்கிறோம்.

## தமிழேந்தி

தமிழை பேச எழுதக் கூடியவர்கள் மிகக் குறைந்தவர்கள் தான் கனடாவில் வாழ்கிறார்கள். ஏனையவர்கள் தமிழ் மொழியைப் படித்து பயிற்சி பெறவேண்டும். தமிழன் தனி உரிமை வாழ்வுடன் வாழ்ந்த காலம் பல ஆயிரம் ஆண்டுகளாகிவிட்டது. அதை இன்றைய காலத்தில் மீட்பதற்காக வாழும் நாம் தெரிந்து கொண்டபின் அந்த உரிமை வாழ்வைக் காண கடுமையாக உழைக்க வேண்டும். மொழிவழியில் தமிழை வேற்று மொழிப்பிடியில் இருந்து விடுதலையாக்க புலம் பெயர்ந்த தமிழராகிய எங்களுக்கு நிறைவான பல வழிமுறைகள் கனடாவில் உண்டு. தமிழ் வேற்றுமொழியில் இருந்து விடுதலை பெற வேண்டுமானால் நாம் தமிழில் பேசவேண்டும்! தமிழைப் பேச வேண்டும்.

சீன, யூத மக்களை எமது நினைவுக்குக் கொண்டு வர விரும்புகிறேன். இவர்கள் மொழியால் பண்பாட்டால் சமயத்தால் தங்களை ஏனைய மக்களுக்கு உயர்வாகக் காட்டுபவர்கள். சீன மக்களின் கனடாவுக்கு குடிபெயர்ந்த காலம் நூறு ஆண்டுகளைத் தாண்டியது. இன்றும் சீன குமுகாயத்தினரின் மொழி, பண்பாடு, சமயம், வணிகம், பொருண்மீயம், மற்றும் குமூக ஒன்றிடல் என்பன உயர்ந்திருப்பதை காணலாம்.

தனி உரிமை நிறைந்த வாழ்க்கையை நாம் வாழ விரும்பினால் அதில் ஒவ்வொரு தமிழனும் தாமாகவே தெளிவு பெறல் வேண்டும்.

தமிழன் தமிழைத் தேடி படிக்காதுவிட்டால் தமிழைப் பேசமுடியாது. வடமொழியில் மயங்கிய தமிழர்களுக்கு மயக்கம் தெளிவு அடைவதற்குரிய சில தமிழ்ச்சொற்களையும் அதற்குரிய வடமொழி ச் சொற்களையும் தர விரும்புகிறேன். கீழே தரப்பட்ட சொற்களின் மேலதிக விளக்கங்களுக்கு உங்களுக்கு தெரிந்த கோவில் பூசகர்களை நாடிப் பெற்றுக் கொள்ளுங்கள். ஆனால் அவர்கள் சரியான மேலதிக விளக்கம் தருவார்களா? முயற்சி செய்யுங்கள்.

### வழிபாடு

வீட்டில் உள்ள இறைவழிபாட்டு அறையில் கடவுளை வழிபாடு செய்யும் பொழுது தேவாரம் திருவாசகம் போன்றவற்றைப் பாடி பூப்போட்டு தீபம் காட்டி வழிபாடு செய்தலை வழிபாடு என்பர். இன்று கோவில்களில் காசில்லாமல் வழிபாடு செயயமுடியாது. வழிபாடு என்ற தமிழ்ச்சொல்லை வடமொழியில் அர்ச்சனை என்ற பெயரில் இன்று தமிழர்கள் மத்தியில் பண அடிப்படையில் சிறப்புப் பெற்றிருக்கிறது.

### ஒன்பது கோடிமுறை வழிபாடு

இன்று கோயில்களில் ஒன்பது கோடிமுறை வழிபாட்டினை சிறப்பாக்கி சைவ அடியவர்கள் மிகப்பெரிய தொகையைக் வசூலிக்கிறார்கள். ஆனால் இந்த ஒன்பது கோடிமுறை வழிபாட்டை வீட்டில் கூட செய்ய முடியும். கோவில்களுக்குரிய வழிபாட்டுச்சடங்குகளுக்கு காசு செலவு செய்கின்றவர்கள் துன்பத்தில் இருந்து விலகி மன அமைதியோடு வாழ்கிறார்களா? விடை-யை நீங்களே உங்களுக்குரியதாக்கிக் கொள்ளுங்கள். ஒன்பது கோடிமுறை வழிபாடு என்பதற்குரிய வடமொழிச் சொல் நவகோடி அர்ச்சனை ஆகும்.

### சொற்பொழிவுகள்

சைவக் கோவில்களில் சொற் பொழிவு மிக சிறப்புடையவை. சிவசமயம் அழிக்கப்படுவதை கண்டு நாவலர் பெருமான் கோவில்களில் சைவ சொற்பொழிவுகளை நடத்தி சைவத்தை செயல்பட வைத்தவர். ஆனால் இன்று கோவில்களில் சொற்பொழிவு செய்கின்றவர் சைவ சமயத்தின் அடிப்படை புரியாதவர்களே. இவர்களுடைய சொற்பொழிவுகள் இளைய குமூகத்தின் நடுவில் எந்தளவுக்கு சிறப்படைய வைத்துள்ளது என்பது எனது கேள்வியாகும். சொற்பொழிவுகள் என்பதன் வடமொழிச் சொல் உபந்நியாயங்கள் என அழைப்பர்.

### மாதப்பிறப்பு

இது ஒரு தமிழ்ச்சொல். மாதம் ஒன்றின் ஓராம் நாள் மாதப்பிறப்பு. தைமாதப் பிறப்புப் பூசையை சிறப்பாக கோவில்களில் செய்வார்கள். அன்று தைப்பொங்கல் நாளாகும். மாதப்பிறப்பை வடமொழியில் சங்கிராந்தி என அழைப்பர்.

### நாலாம்நிலாநாள்நோன்பு

இது ஒரு தமிழ்ச்சொல். நாலாம்பிறையை நாலாம் நிலாநாள் என்றும் அழைக்கலாம். இந்த நாளை பிள்ளையாருக்குரிய சிறப்பு நாள் என்பது ஆரியரின் எண்ணப்பாடு. ஒவ்வொரு மாதமும் நாலாம்பிறை அன்று பிள்ளையாருக்கு சிறப்பு பூசை நடைபெறும். விரும்பியவர்கள் நோன்பும் இருப்பார்கள். ஆனால் இதை வடமொழியில் சதுர்த்திவிரதம் என அழைப்பர்.

### ஐந்தாம்நிலாநாள்

இது ஒரு தமிழ்ச்சொல். ஐந்தாம்நிலாநாளில் யாராவது சாவடைந்தால் தொடர்ந்து அவர்களின் உறவில் தொடர்ந்து ஐவருக்கு சாவு நேரும் என்பது ஆரியரின் கணிப்பு. இதை வடமொழியில் பஞ்சமி என்று அழைப்பர்.

### எட்டாம்நிலாநாள் - ஒன்பதாம்நிலாநாள்

இது ஒரு தமிழ்ச்சொல். இந்த நாட்களில் நல்ல காரியங்களை செய்யக்கூடாது என்பது ஆரியரின் மூடப்பழக்கம் ஆகும். இந்த நாட்களை வடமொழியில் அட்டமி -நவமி என அழைப்பர்.

### பிறைநிலவன்

இது ஒரு தமிழ்ச்சொல். நாம் பிறை நிலவன் என்ற நல்ல அழகிய பெயரை எம்மவர் நடுவில் வைப்பதில்லை. ஆனால் இந்தச் சொல்லின் வடமொழிச் சொல்லான பாலச்சந்திரன் என்ற வடமொழிப்பெயரை தாங்கியவர்கள் பலர் எம்மத்தியில் இருக்கிறார்கள்.

### வழிபாட்டுச்சடங்கு

கோவிலில் பல தரப்பட்ட முறைச் வழிபாட்டுச்சடங்குகள் செய்வர். வழிபாட்டுச் சடங்கை வடமொழியில் கிரியைகள் என்று அழைப்பர். வழிபாடடுச்சடங்குகளாக நீர்முழுக்கு, பால்முழுக்கு, ஐந்தமுது முழுக்கு, குடமுழுக்கு, பிள்ளையார் வேள்வி இன்னும் பல.

### உறுதி எடுத்தல்

கோவிலில் வழிபாட்டுச் சடங்குகள் செய்யும் பொழுது வழிபாட்டுச்சடங்குகள் செய்பவர் உறுதி எடுக்கும் நிகழ்வு உண்டு. அந்த நிகழ்வை வடமொழியில் சங்கற்பம் என்று அழைப்பர்.

தமிழர்கள் தமிழைப் பேசி எழுதிக் கொண்டும், சைவக் கோவில்களில் வழிபாட்டை தமிழில் செயல்பட வைத்தால் தமிழின் ஆளுமையைக் கெடுக்கும் வடமொழிக்கு தமிழர்கள் பாடை கட்டிவிடலாம் என உறுதிமொழி கூறுகிறார் தமிழேந்தி.

இன்னும் பல தமிழ்ச் சொற்களுடன் அடுத்த இதழில் தொடரும்

தமிழைப்பேசுவோம்!
தமிழில் பேசுவோம்!

குறிப்பு: தமிழ் மொழியின் ஆரோக்கிய வளர்ச்சியை கருத்தில் கொண்டு இந்த களம் அமைக்கப்பட்டுள்ளது. கருத்தாளர்களின் எழுத்துக்கள் ஆரோக்கியமாகவும் கண்ணியமாகவும் இருந்தால் மட்டுமே பிரசுரிக்கப்படும் என்பதை முன்கூட்டியே தெரியப்படுத்துகிறோம். தரமற்ற சொற்றொடர்கள் என்று நாம் கருதுமிடத்தில் அவ்வகையான சொற்கள், தொடர்கள் ஆசிரியரின் எண்ணப்படி கருத்து மாறாமல் மறுசீரமைக்கப்படும்.


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்


ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL


# வாகனம் ஓட்டும் தவறுகளில் உருவாகும் புள்ளி மதிப்பீட்டு இழப்புகள்

வாகனம் ஒன்றினை கனடாவில் நாம் வசிக்கும் ஒன்ராரியோ மாகாணத்தில் செலுத்தும் ஒவ்வொருவரும் மேற்கொள்ளும் தவறுகள் குற்றமாக முடிவு பண்ணியவுடன் அதனை மதிப்பீடு செய்யும் ஒரு கருவியாகவே இப்புள்ளி மதிப்பீட்டு இழப்புகள் என்பது உள்ளன. இப்புள்ளி மதிப்பீட்டு இழப்புகள் என்பது மேற்கொள்ளும் ஒவ்வொரு தவறுகளுக்குப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

## 7 புள்ளி மதிப்பீட்டு இழப்புகள்

ஒரு விபத்து நடந்தால் வாகனத்தினை நிறுத்தாமல் தப்பி ஓடினால் கிடைக்கும் புள்ளி மதிப்பீட்டு இழப்பு ஆகும். (சரி! சிலநேரங்களில் ஒரு தற்பாதுகாப்புக்காக தப்பி ஓடினாலும் அதன் பின்னராவது நேரடியாக பொலிஸில் சென்று முறைப்பாடு செய்தல் வேண்டும். (இந்த தவறிற்கே ஆக கூடுதலான புள்ளி மதிப்பீட்டு இழப்பு ஆகும்.)

## 6 புள்ளி மதிப்பீட்டு இழப்புகள்

மோசமாக கவனமில்லாது அதிவேகத்தில் செலுத்துதல் (Careless Driving) வீதியில் வரையறுக்கப்பட்ட வேகத்தினை விட 50 கி.மீ மணித்தியாலத்திற்கு மேலாக வேகமாக செலுத்தினால் உதாரணமாக 60 கி.மீ உள்ள வீதியில் 110கி.மீ வேகத்தில் வாகனம் செலுத்தி பிடிபட்டால் இங்கு 50 கி.மீ மேலதிகமான நிலையில் வாகனம் செலுத்தப்பட்டுள்ளது.

## 5 புள்ளி மதிப்பீடு இழப்புகள்

பிரயாணிகள், பேரூந்து வண்டிகள் செலுத்துபவர்கள் பாதுகாப்பில்லாத புகையிரதப்பாதைகளை கடக்கும்போது நிறுத்தியே பின்னர் செல்ல வேண்டும். இவ்வாறு இல்லாது நிறுத்த தவறினால் இப்பிராயாணிகள், பேரூந்து வண்டிகளின் சாரதிகள் இப்புள்ளி மதிப்பீட்டினை எதிர்கொண்டேயாக வேண்டும்.

## 4 புள்ளி மதிப்பீடு இழப்புகள்

ஒரு வாகனத்துக்கு நெருக்கமாக, பாதுகாப்புப் பற்றிய அக்கறையில்லாது செலுத்தினால் வரையறுக்கப்பட்ட வேகத்தினை விட 30 km - 49 km வரை செலுத்தினால். (உதாரணமாக 60 கி.மீ. தெருவில் அதிகமாக வேகத்தில் அதிகமாக 95 km வாகனத்தினை செலுத்தினால் இப்புள்ளி மதிப்பீட்டு இழப்பினை எதிர்கொள்ள வேண்டிவரும்.)

## 3 புள்ளி மதிப்பீடு இழப்புகள்

- வரையறுக்கப்பட்ட வேகத்தினை விட 16 km/h - 29 km/h வரை செலுத்தினால்
- ஏனைய வாகனங்களுக்கு பாதை முதல் உரிமைகளை கொடுக்கத்தவறினால்
- வீதிகளில் பொலீஸ் உத்தியோத்தர் ஒருவரின் வழிகாட்டலுக்கு பணியத் தவறினால்
- விபத்து பற்றி பொலீசாருக்கோ அல்லது விபத்து அறிவிப்பு நிலையத்துக்கோ அறிவிக்கத் தவறினால்
- வாகனத்தின் ஆசனத்தில் மேலதிகமாக பிராயாணிகளை ஏற்றிச் சென்றால்
- அவசர சேவை வண்டிகளை எதிர்கொள்ளும் போது வாகனத்தின் வேகத்தைக் குறைத்து ஒரு யாக்கிரதை காட்டத் தவறினால்
- பிழையான முறையில் வாகனம் ஒன்றை முந்திக் கொண்டு சென்றால்
- மூடப்பட்ட வீதியில் (Road Closed) வாகனம் செலுத்தினால்

## 2 புள்ளி மதிப்பீட்டு இழப்புகள்

- வாகனக் கதவினை தப்பாக திறந்து வைத்திருந்தால்
- பாதசாரிகள் நடைபாதையில் நிறுத்தத் தவறினால்
- சமிக்ஞை விளக்குகள் (Signal Light) இல் நிறுத்தக் தவறினால்
- வாகனத்தின் சைகைகளைப் போடத் தவறினால்
- பாரிய வீதியில் தேவையில்லாது பின்னோக்கி நகர்ந்தால்
- 23kg ற்கு உட்பட்ட குழந்தைகளுக்குரிய ஆவணப்பட்டி அணியத் தவறினால்

G(1), G(2) சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளி மதிப்பீட்டினை இழக்கும் போது முதலில் எச்சரிக்கைக் கடிதம் அனுப்பப்படும். இச்சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்கள் ஆறு புள்ளி மதிப்பீட்டு இழப்பினை எதிர்கொண்டால் போக்குவரத்து அமைச்சு நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பார்கள். சமூகமளிக்க தவறினால் சாரதி அனுமதிப் பத்திரம் ரத்துச் செய்யப்படும். இச்சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்கள் ஒன்பது புள்ளி மதிப்பீட்டு இழப்பினை எதிர்கொண்டால் சாரதி அனுமதிப்பத்திரத்தினை போக்குவரத்து அமைச்சில் 60 நாட்களுக்கு கையளிக்க வேண்டும். இவ்வாறு கையளிக்கத் தவறினால் இரு வருடங்களுக்கு ரத்தாகி விடும்.

சரி முழுமையான "G" சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்கள் ஆறு புள்ளி மதிப்பீட்டு இழப்பினை எதிர்கொள்ளும் போது எச்சரிக்கை கடிதம் அனுப்பப்படும். ஒன்பது புள்ளி மதிப்பீட்டினை எதிர் கொள்ளும்போது நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் பதினைந்து புள்ளி மதிப்பீட்டினை எதிர்கொள்ளும் போது 30 நாட்களுக்குள் சாரதி அனுமதிப்பத்திரத்தினை போக்குவரத்து அமைச்சில் கையளிக்க வேண்டும். இவ்வாறும் கையளிக்கத் தவறும்போது இருவருடங்களுக்கு சாரதி அனுமதிப் பத்திரம் இரத்தாகி விடும். (பொதுவாக எந்த ஒரு புள்ளி மதிப்பீட்டு இழப்பும் இரு வருடங்களுக்கு மட்டுமே போக்குவரத்து அமைச்சின் பதிவேட்டில் இருக்கும். அதன் பின்னர் அது அகற்றப்பட்டு விடும்.) இப்புள்ளி மதிப்பீட்டு இழப்புகள் தொடர்பான மேலும் தகவல்களை அறிய வேண்டுமானால் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

Licensing Administration Office
Ministry of Transportation
Main floor, Building A
2680 Keele Ave.
DownsView, ON M3M 3E6

தொலைபேசி - 416.235.2999
1.800.387.3445



*- எஸ். எஸ். மாதவன்*
*Home - 905.209.0507*
*Cell - 416.939.4913*

---

ஜேன் & பிஞ்ச் சந்தியில் யோக்வூட் நூலக திரை அரங்கில் (1785 Finch Ave. West) மார்ச் 18 சனி பி.ப 4 மணி, 6 மணி இரு காட்சிகளாக திவ்யராஜனின் **சகா** திரைப்படம்!

- **வாடிக்கையான தமிழகத் திரைப்படங்களின் நிகழ்வுக் கோவையிலிருந்து வேறுபடும் போக்கு சகாவின் சிறப்புகளுள் ஒன்று. பச்சை வன்முறை, அப்பட்டமான ஆபாசம், சிற்றின்பம் ததும்பும் ஆடல் பாடல்கள், எடுப்புச்சாய்ப்புக்களுடன் கூடிய சண்டித்தனம் போன்ற குறுக்கு வழிகளில் இறங்கி பாமரத்தனமான இரசிகர்களை ஈர்க்கும் ஈனத்தனம் புலப்படாமை இத்திரைப்படத்தின் அருஞ்சிறப்பு. - எழுத்தாளர், தமிழறிஞர் - மணி வேலுப்பிள்ளை**

- **பெற்றோரும் பிள்ளைகளும் சேர்ந்து பார்க்க வேண்டிய திரைப்படம்.**
**- விமர்சகர் நாடகம் கலை வைரமுத்து சொர்ணலிங்கம்.**

- இங்கு இடம்பெற்ற உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர் தம் வாழ்க்கைக் கோலங்களின் ஒரு சில பகுதிகளைப் பதிவாக்குகிறது இத்திரைப்படம்.

- வலிந்து கதை பின்னப்படவில்லை. உயிரோட்டமான காட்சி அமைப்புக்கள். பொருத்தமான நடிகர் தேர்வும் அவர்தம் இயல்பான நடிப்பும் கதையுடன் ஒன்றித்து அந்தக் கதாபாத்திரங்களுடன் சேர்ந்து வாழ்வது போன்ற ஓர் உணர்வை பார்வையாளருக்கு ஏற்படுத்துகின்ற திரைப்படம்.

- கதையோட்டத்தினூடு பல்வேறு படிப்பினைகளையும், சமூகப் பெறுமானங்களையும் கொண்டுவரும் திரைப்படம்.

- கடந்த ஆண்டு ஜுலையில் ரொறொன்ரோவில் திரையிடப்பட்ட போது மண்டபம் நிறைந்த காட்சிகளாக ஓடிய இத்திரைப்படம் மீண்டும் பல தடவைகள் திரையிடப்பட்டு பலரின் பாராட்டுதல்களையும் பெற்றது. மேலும் கடந்த ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் தாயகத்தில் கொழும்பு, யாழ்ப்பாணம், நெல்லியடி, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களில் திரையிடப்பட்டு அங்குள்ள மக்களின் அமோக பாராட்டுதல்களைப் பெற்ற திரைப்படம்.

இயக்கம் - வ. திவ்யராஜன்
படத்தொகுப்பு - Mike
கமார - ஜீவன்ராம்
இசை - பயாஸ் சவாகிர்
பாடியோர் - செல்வி அனுஷா சிவலிங்கம், செந்தூரன், திவ்வியராஜன்

முக்கிய பாத்திரங்களில் - கே.எஸ் பாலச்சந்தர், நவம், உலகநாதன், கீர்த்தனன், பாரத், தர்சன், யசோ, பவளம், வதனி, மயூரி, கெமி, கௌரி, சங்கீதா, அமலகுமார் சின்னத்தம்பி, குரும்பசிட்டி இராசரத்தினம், கல்வியங்காடு கனகலிங்கம், கோபால், குட்டி மகேந்திரன், ஜெயராஜா, கல்யாணசுந்தரம், சயந்தன், சிறீமுருகன், செல்வி பிரவ்ணி, கவிஞர் கந்தசாமி, கீதா.

---

# "குழந்தைகளிடம் பொய் கூறாதீர்கள்"

கலைச்செல்வன் நினைவு நாள் FRANCE TORONTO

கடந்த வருடம் தனது இளம் வயதில் கலைச் செல்வன் மறைந்து விட்டார். இவரது முதலாவது நினைவு தினம் பாரிஸ் நகரில் கடந்த ஞாயிறு நடைபெற்றது. "குழந்தைகளிடம் பொய் கூறாதீர்கள்" என்ற பிரபல கவிஞரும், விளம்பர கட்டுரையாளர், ஆய்வாளருமான செழியனின் கவிதையை தலைப்பாகக் கொண்டு கவிதா நிகழ்வு ஒன்று நடைபெற்றது. சுதன், ஷோபா சக்தி போன்ற பல கவிஞர்கள் ஒன்றிணைந்து இந்த கவிதா நிகழ்வை அரங்கேற்றினார்கள். இந் நிகழ்வுடன் மேலும் பல நிகழ்வுகளும் நடைபெற்றன. காலை 10மணிக்கு ஆரம்பமாகி மாலை வரை இந்த நினைவு நாள் நிகழ்வுகள் நடைபெற்றன. கலைச் செல்வன் புலம்பெயர் இலக்கியத்தின் ஒரு தூண். உயிர் நிழல் என்ற சஞ்சிகையை தனது துணைவியார் லஷ்மியுடன் இணைந்து நடத்தினார். சுவடுகள், தூண்டில், மனிதம் போன்ற ஐரோப்பிய புலம் பெயர் சஞ்சிகைகளின் வரிசையில் பிற்காலத்தில் எக்ஸில், உயிர் நிழல் என்பன பல புதிய புலம் பெயர் வாழ்வியல் கூறுகளை வெளிக் கொணர்ந்தன.

பல சஞ்சிகைகள் இந்திய சஞ்சிகையின் தோற்றத்துடன், இந்திய உபகண்ட கருத்தியலை முன் வைத்தபொழுது உயிர் நிழல், எக்ஸில் என்பனவே புலம்பெயர் கருத்தியலை வெளிப்படுத்தின.

பல கனடிய தமிழ் எழுத்தாளர்களின் முகங்கள் உயிர்நிழல் சஞ்சிகைகளூடாக வெளி உலகை தரிசித்தன. குறிப்பாக கனடிய தமிழ்பெண் எழுத் தாளர்கள் பலரது படைப்புக்கள் உயிர் நிழலில் வெளிவந்துள்ளன. உயிர் நிழலின் உயிராய் இருந்து மறைந்து விட்டார் கலைச்செல்வன்.

கனடாவிற்கு பல தடவைகள் வந்து சென்றுள்ளார். நிஜத்தை தரிசிக்க முன்னர் நிழலாக "முகம்" என்ற படத்தின் நாயகனாக, நிஜத்துடன் சிலதடவைகள் ரொறொன்ரோ இலக்கிய உலகை தரிசித்துள்ளார்.

இவரது உலகம் பரந்தது. தனது முற்றம், சூழல், பாரிஸ், ரொறொன்ரோ என குறுகிவிடாது பரந்த உலகவாசி அவர். இலக்கிய வெளிக்கு அப்பால் உள்ள அவரது நண்பர் ஒருவர் கூறிய கருத்து "கருத்துக்கள் முரண்பட்டாலும், நட்புடன், தோழமையுடன், உயிர்ப்புடன், உரிமையுடன் எமது உறவு நட்பு இருந்தது. நீண்ட உரையாடல்களிலும் கருத்து முரண்பாட்டின் போதும், மற்றையவரின் கருத்துக்களை செவிமடுக்கும் தோழர். அவர் மறைந்து விட்டார் என்ற செய்தியின் உண்மையை உணர நீண்ட நாட்கள் சென்றன" என்றார்.

கலைச் செல்வனின் நினைவு நாள் ஏப்ரல் மாதம் எட்டாம் நாள் Mid Scarborough Community Centre இல் நடைபெறவுள்ளது. அன்றையதினம் "முகம்" படமும் திரையிடப்படும்.

அனைவரும் கலந்து அவரை நினைவு கூருவோம்.




# ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நீளும் கதை

தில்லியில் பிக்காசோவின், காகிதத்தில் அச்சான சித்திர நகல்கள் (prints) காட்சிக்கு வந்துள்ளன. வடேரா காலரியும் லண்டனில் இருக்கும் க்ராஸ்வெனர் காலரியும் சேர்ந்து நடத்தும் காட்சி இது. இவற்றைப் பார்த்து வேண்டியவற்றின் ஓவிய மூலங்களை விலைக்கு வாங்கலாம். அவை 15 இலட்சத்திலிருந்து 85 இலட்சம் வரை என்று விலைப் பட்டியல் கூறுகிறது.

தில்லியில் உள்ள, அந்தஸ்து தாகமும் பணமும் கொழுத்த சீமாட்டிகள், அடுத்தவள் என்ன வாங்கினாள், அதற்கு ஒருபடி மேல் தான் நிற்க தனக்கும் ஒன்று வேண்டும் என்று அங்கு மோதிக் கொள்வதாகச் செய்தி. இது சந்தை விவகாரம், பண முதலீடு விவகாரம், ஓவிய ரசனை சம்பத்தப்பட்ட விடயம் அல்ல. தெரிகிறது.


சந்தையில் அதிக விலை போகும் இந்திய ஓவியர், எம். எஃப். ஹுஸேன், இது பற்றி சொன்னதாகச் சொல்லப்படுவது, “இங்குள்ளவர்கள் பிக்காசோவின் ஒரிஜினல்களைப் பார்க்கக் கிடைப்பது சந்தோசமான செய்தி தான். ஆனால், பிக்காஸோவின் பாதிப்பு ஏதும் இங்கு இருந்ததில்லை” என்று.

இந்திய ஓவியர்கள், ஹுஸேன், த்யேப் மேஹ்தா, அஞ்சலி இலா மேனன், போன்றோர் இப்போது சர்வ தேச சந்தையில் விலை போகிறவர்களாக ஆகியுள்ளார்கள். 40 வருடங்களுக்கு முன் ஜே.ஸ்வாமிநாதனின் ஓவியக் காட்சிக்கு வந்தவர் ஸ்வாமிநாதனுடன் எந்த ஓவியம் வாங்கினால் அவர்கள் வரவேற்பறை அலங்காரத்திற்கு பொருத்தமாக இருக்கும் என்று தமக்குள் பேசிக் கொண்டிருந்தனர். வசதியின்றி தத்தளித்துக் கொண்டிருந்த காலம் அது ஸ்வாமிநாதனுக்கு. “ஆமாம், அதையும் சிந்திக்கத்தான் வேண்டும்” என்று மென்று விழுங்கி தனக்குச் சமாதானம் சொல்லிக் கொண்டிருந்தார் ஸ்வாமிநாதன். பாவமாக இருந்தது எனக்கு.

சமீபத்தில் இலங்கை நண்பரும் ஓவியருமான சனாதனன் சொன்னார், அவருடைய நண்பர், 12 அடி உயரமும், 20 அடி நீளமுமான கலம்காரி சித்திரம் ஒன்று, எப்படியாவது இது விலைபோனால் போதும் என்று அவதிப்பட்டுக் கொண்டிருந்த வியாபாரியிடமிருந்து அவர் 15000 ரூபாய் சொல்ல, என்னிடம் இப்போது 5000 ஆயிரம் தானே இருக்கிறது என்று சொல்ல “கொஞ்சம் தயங்கிய வியாபாரி, “சரி இருக்கிறதைக் கொடுங்கள் எத்தனை காலம் இதை சுருட்டியே வைத்துக் கொண்டிருக்கிறது, சுவற்றில் தொங்கவிடக்கூட முடியாமல்” என்று சம்மதித்துக் கொடுத்துவிட்டானாம், 5000 ருபாய்க்கு.” இப்போது அது எங்கே?”, என்று சனாதனன் கேட்டதற்கு, “சுருட்டித் தான் வைத்திருக்கிறேன் நானும், அதை மாட்டி வைக்க இடம் ஏது?” என்றானாம் நண்பன்.

18-லிருந்து 85 லக்ரம் வரை கொடுக்க முட்டி மோதும் அந்த பணக்காரச் சீமாட்டிகள் பிக்காஸோவின் அந்த ஓவியங்களில் என்ன பார்த்து ரசித்தார்கள் என்பது கேள்விக்குரிய விடயம் தான். அவர்கள் பணச் செழிப்பைக் கண்டு நான் பொறாமைப் படுவதாகத் தோன்றலாம். தோன்றலாம் தான்.

அல்டஸ் ஹக்ஸ்லி ஒரு சம்பவம் பற்றி 50 களில் Encounter பத்திரிகையில் எழுதியிருந்தார். தன் வரவேற்புரையில் நடுநாயகமாக உயர மாட்டியிருந்த ஓவியத்தைப் பற்றி மிக பெருமையுடன் வருபவரிடமெல்லாம் சொல்லிப் பரவசப்பட்டுப் போவாரம் அந்த நண்பர். ஒரு நாள் அது அந்த இடத்தில் இல்லை. எங்கே என்று கேட்டதற்கு, “அது fake என்பது தெரிந்தது. ஆகையால் அங்கிருந்து எடுத்து விட்டேன்.” என்று பதில் வந்தது. சற்றுக் கழித்து, ஹக்ஸ்லி அவரிடம் கேட்டாராம். “அது fake ஆக இருந்தாலும், அது உங்கள் ரசனைக்கு உரியதாக இருந்ததே, அந்த அனுபவம் எப்படி மாறும்? அதன் சந்தை விலை தானே குறைந்திருக்கிறது. இப்போதும் அது உங்களுக்கு பழைய சந்தோசத்தைக் கொடுக்கும் தானே?” என்று கேட்டாராம்.



இன்று பலருக்கு ஓவியமும் வீடு, மனை, கம்பெனி பங்குகள் (shares) போன்ற ஒரு விவகாரமாகியுள்ளது. முதல் இப்போது போட்டு வைத்தால் பின்னால் அது விலையேறியபிறகு விற்று லாபம் சம்பாதிக்கலாம். சந்தை மவுசு கூடிப்போன இப்போது, ஹுஸேனிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. “சந்தை விலையை விடுங்கள். உண்மையில் என்ன விலை கொடுக்கலாம், சொல்லுங்கள்?” என்று. கேட்டது மறுபடியும் ஒரு சீமாட்டி தான். அதற்கு ஹுஸேன் சொன்ன பதில்: “அது உங்களைப் பொறுத்தது. உங்களுக்கு பிடித்திருந்தால், 5 இலட்சமோ 50 இலட்சமோ எவ்வளவு வேண்டுமானாலும் அது பெறும். ஆனால், உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் அது ஐந்து ரூபாய் கூடப் பெறாது.” நாம் அந்த குறிப்பிட்ட ஓவியத்தை ரசிப்பதைப் பொறுத்தது அதன் மதிப்பு.

சீமாட்டிகளைப் பற்றிப் பேசும் சந்தர்ப்பத்தில் நான் கேட்ட இன்னொரு சுவாரஸ்யமான கதையையும் சொன்னால் நல்லது என்று தோன்றுகிறது. உண்மை சம்பவமா கதையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் கதை சுவாரஸ்யமானது. நான் சொல்ல வரும் விடயத்தை மிகத் தெளிவாகச் சொல்லும். ஹுஸேனின் ஸ்டுடியோவில் ஒரு பெண் ரசிகை. அங்கு இருந்த ஓவியங்களைப் பார்த்துக்கொண்டிருந்தவள், ‘இது எனக்குப் பிடித்திருக்கிறது. எவ்வளவுக்குத் தருவீர்கள்? என்று அவள் கேட்டாளாம். ஹுஸேன் ஒரு கள்ளச் சிரிப்புடன், “அதை உன்னால் வாங்க முடியாது. ஆனால், நான் உன்னை நிர்வாணமாகப் பார்க்க முடிந்தால், அதை உனக்குத் தருகிறேன். வேறு எதுவும் கொடுக்க வேண்டாம்.” என்று சொன்னாராம். சற்றுத் திகைத்த அப்பெண், “சரி, இவ்வளவு தானே” என்று சொல்லி தன் ஆடையைக் களைந்து நின்று விட்டு, தான் கேட்ட ஓவியத்துடன் அந்த இடத்தை விட்டு சந்தோசத்துடன் குதித்தோடினாள் என்பது கதை. கதையாகவே இருந்துவிட்டுப் போகட்டும். சீமாட்டிகளை விட, அப்பெண் ஓவிய ரசனையோடு தான் தேர்ந்தெடுத்த படைப்பை அதன் விலை கொடுத்துப் பெற்றாள் என்று சொல்லத் தோன்றுகிறது.

நான் வேலை பார்த்த இடத்திற்கும் ஓவியம், சிற்பம் என்கிற சமாச்சாரங்களுக்கும் தூரத்து உறவு கூட கிடையாது. ஆனால் எங்கள் அலுவலக லைப்ரரியில், Picasso's Picasso என்ற படங்களாலேயே நிறைந்த மொத்தை யான புத்தகம் என் கையில் அகப்பட்டது. பிக்காஸோ வின் படைப்பு ஏதும் தங்குமா? வரைவதற்கு முன்னமேயே விற்றுப் போகும். ஆனால், பிக்காஸோ விற்க மனமில்லா மல் தனக்கு வேண்டும் என்று வைத்துக் கொண்டிருக்கும் ஓவியங்கள் அத்தனையும் கொண்டது அந்தப் புத்தகம். அவையே பலநூற்றுக் கணக்கில் இருந்தன. அது பற்றிப் பின்னர் படித்தேன். அவை சந்தைக்கு வந்து விட்டால், ஐரோப்பிய அமெரிக்க ஓவிய சந்தையே ஒரு பெரும் பூகம்ப அதிர்ச்சிக்குள்ளாகும் என்று. எனக்கு இதுவரை தீராத ஒரு சந்தேகம் வெகு நாளாக இருந்து வருகிறது. எப்படி ஒரு ஓவியனோ சிற்பியோ தன் படைப்பை விட்டுப் பிரிகிறான் என்று. வேறு எந்த கலைஞனுக்கும் இப்படி ஒரு நிலை இல்லை. ஒரு கவிஞனிடம், எழுத்தாளனிடம், அவன் தன் படைப்பை எத்தனை பேருடன் பகிர்ந்து கொண்டாலும், அவனிடம் அவன் படைப்பு இருந்து கொண்டே இருக்கும். ஒரு சங்கீத கலைஞனிடமும், ஒரு நடன கலைஞனிடமும் கூட. ஓவியனும் சிற்பியும் தான் விலை பெற்றுப் பிரிந்தது, அது அவனிடம் இருப்பதில்லை. எல்லாவற்றையும் விற்ற ஓவியனிடம் என்ன இருக்கும். இன்னமும் மோசம், அப்படைப்போடு கலாபூர்வமாக உறவு கொள்ள முடியாதவரிடம், அது போகக் கூடும். போகும். பங்குச் சந்தைக் காரர்களிடம். பணக்காரர்களிடம்.


ஒரு பிக்காஸோ வேண்டும். சமூகத்தில் தம் அந்தஸ்து எவ்வளவு உயரும்? நல்ல முதலீடு என்று கணவரும் சந்தோசப்படுவாரே? ஆனால் அந்த பிக்காஸோ colour print உண்மையில் அந்த சீமாட்டிகளின் ஓவிய ரசனையைக் கவர்ந்ததா? பிக்காஸோவின் ஓவிய உலகை விஸ்தாரமாக அறிந்தவனுக்கு அந்த print அவ்வளவு மதிப்புடையதாகாது. பிக்காஸோவின் ஓவிய சஞ்சாரம் முக்கால் நூற்றாண்டு கால நீட்சி கொண்டது. ஓவிய சரித்திரத்தில் பல திருப்பு முனைகளை உருவாக்கியது. எந்நேரமும் மாறிக்கொண்டே ஓரிடத்தில் நீண்ட காலம் தரித்து விடாது, எண்ணற்ற சாத்தியப்பாடுகளை உருவாக்கிக்கொண்டே நகர்ந்து கொண்டிருந்த கலா வியக்தி அது. கோமாளித்தனங்களும், கிறுக்கு மனமும் இடையிடையே கொண்ட வியக்தி. ஒவ்வொரு கட்டத்திலும் பிரமாதமான படைப்புகளைத் தந்த மனிதர். பின் அக்கட்டத்தை விட்டு நகர்ந்து விட்டவரும் கூட.

தில்லிக்குக் கொண்டு வரப்பட்ட prints-களின் சில மாதிரிகளைப் பார்த்தால், “இந்தியாவுக்கு இது போதும், இதிலேயே அவர்கள் களி மயக்கம் கொண்டு கூத்தாடுவார்கள்” என்று நம்மை அவர்கள் தரப்படுத்தியுள்ளதாகத் தான் எனக்குப் பட்டது. 50-60 களில் ஃப்ரெஞ்ச் impressionists கண்காட்சி ஒன்று தில்லிக்கு வந்திருந்தது. அவ்வளவும் louvre மியூசியமில் உட்கார்ந்த ஓவிய மாணவர்கள் பயிற்சி செய்த நகல்கள். நன்றாகத்தான் செய்திருந்தார்கள். சுலபத்தில் அவர்கள் மூலங்களை வெளியே அனுப்பி விடமாட்டார்கள். அதுவும் ஆசிய நாடுகளுக்கோ இந்தியாவுக்கோ. இங்கு காட்சிக்கு வந்த prints பிக்காஸோ ஆயிரக் கணக்கில் வெகு அனாயாசமாக வரைந்து தள்ளிய ஆயிரக்கணக்கில் ஒன்று. அது பிக்காஸோ என்ற கையெழுத்து தாங்கிய ஓரே மகத்துவம் கொண்டது நான் பார்த்த மாதிரி.

கையெழுத்து என்றதும் ஒரு நிஜ சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது. பிக்காஸோ ஒரு கட்டிடக் கலைஞரை அழைத்து, தான் அப்போது வாங்கிய பழங்காலத்து கோட்டை அரண்மனை ஒன்றினுள்ளே தான் விரும்பிய மாற்றங்களைச் செய்யச் சொன்னார். அம்மாற்றங்களை விளக்க தானே ஒரு காகிதத்தில் வரைந்து காண்பித்தாராம். பின், “எவ்வளவு வேண்டும் இந்த வேலையைச் செய்ய? என்று கேட்டதற்கு, “நீங்கள் வரைந்த காகிதத்தில் உங்கள் கையெழுத்திட்டுக் கொடுங்கள், போதும்” என்றாராம் அந்த கட்டிடக் கலைஞர். அது பிக்காஸோ படைப்பும் ஆயிற்று, பங்குச் சந்தையில் விலை ஏறும் பொருளும் ஆயிற்று? அது பிக்காஸோ வரைந்தது என்ற ஒரு ஆவண மதிப்பு பெற்றதே ஒழிய, அது ஓவியப் படைப்பு ஆகுமோ? ஆனால், நடப்புண்மை என்னவென்றால், பிக்காஸோ கீறியது எல்லாமே ஓவியமாகக் கருதப்படும் ஒரு சிகரத்தை எட்டியிருந்தார் அவர். அது ஓவிய ரசனையாகாது.

## வெங்கட் சாமிநாதன்

பிக்காஸோவின் நீண்ட கால படைப்பு வாழ்க்கையில் எண்ணற்ற சிகர திருப்பங்கள் உள்ளன தான். ஆரம்ப கால Greek classicism, பின் நீல நிறக்காலம் எனத் தொடங்கி ஃப்யூச்சரிஸ்ம், symbolism, க்யூபிஸம், constructivism, கொலாஜ், என்றெல்லாம் கடந்து பின் கடைசியில் பீங்கான் சித்திரங்களும், கேலி வரைபடங்களும் என்று நீளும் அவரது படைப்பு வாழ்க்கை. எங்கும் அவர் நிலைத்து நின்றது கிடையாது. ஆனால் ஆங்காங்கே ஒரு காலத்தின் ஊழி என்று சொல்லத்தக்க படைப்புக்களை விட்டுச் சென்றிருக்கிறார். ஆனால் பெரும்பாலோருக்கு பிக்காஸோ தான் தெரியும். எதையும் யாரும் கேள்வி எழுப்பியது கிடையாது. இது அவர் மட்டிலுமான விடயம் என்றில்லை. பொதுவான ஒரு நிலை. சுமார் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நீளும் கதை. யாரும் எதையும் கேள்வி எழுப்ப பயப்படும் கதை. இது மேற்கத்திய கலை உலகின் சரித்திரம்.






வீட்டில் முதலிட்டுச் சேமிக்கும் பணத்தை பல மடங்காகப் பெருக்கவும், பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக அமைக்கும் போதே உங்கள் ஓய்வு காலத்திற்காக ஒரு வீட்டினை இலகுவாகத் தேடிக் கொள்ளும் வழிகளை அறிந்து வாழ்க்கையில் வெற்றி பெற அழையுங்கள்.

பரம்ஜி - 416.230.1107

HOMELIFE
HIGHER STANDARDS

**PARAM GNANASWARAN**
Associate Broker

**HOME LIFE GTA REALTY INC.** Real estate Brokers
Office East: 1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON
**416.321.6969**

Office West: 145 Traders Blvd., Suite 28, Mississuga, ON
**905.712.2666**

paramg@gmail.com

# தமிழீழ விளையாட்டுத்துறை

## விளையாட்டுத் தகவல்கள் 186

01ம் பக்கத்தொடர்ச்சி

எந்தவொரு சர்வதேச விடுதலைப் போராட்டத்திலும் காண முடியாத சிறப்பம்சம் என்றால் மிகையாகாது!



விளையாட்டுத்துறை எமது தமிழீழத்தில் வளர்த்தெடுக்கப்படவேண்டும் என்ற விடயம் எமது தேசிய தலைவரின் சிந்தனையில் உதித்தது. ஓர் இனத்தின் பெருமையையும் இளைஞர், யுவதிகள் சமுதாயத்தின் ஆரோக்கியமான வாழ்வையும் தீர்மானிக்கும், உலகிற்கு உணர்த்தும் ஒரு உன்னத ஊடகமாக விளையாட்டுத்துறையை கருதி 2001ஆம் ஆண்டு வன்னி நிலப்பரப்பை உள்ளடக்கிய பரப்பில் தமிழீழ விளையாட்டுத்துறை முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டது. இத்துறையில் பல கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டன. விளையாட்டு ஒருங்கிணைப்பு குழு, உதைபந்தாட்ட சங்கம், மெய்வல்லுனர்கள் சங்கம், கிரிக்கெட் விளையாட்டு சங்கம், கரப்பந்தாட்ட சங்கம், பெண்கள் வலைப்பந்தாட்ட சங்கம், தமிழீழ கராத்தே சங்கம் என்பன ஆரம்பிக்கப்பட்டன.

கடந்த ஐந்து வருடங்களில் திரு. பாப்பா அவர்கள் விளையாட்டுத்துறை பொறுப்பாளர் ஆகக் கொண்டு, இன்று வடக்கு, கிழக்கு உள்பட எட்டு மாவட்டங்களையும் ஒருங்கிணைத்து தமிழீழ விளையாட்டுத்துறை தலைநிமிர்ந்து வளர்ச்சி பெற்று நிற்கின்றது. கடந்த ஐந்து வருடங்களில் மூன்று தேசிய விளையாட்டு விழாக்களிலும், ஆயிரக்கணக்கான தமிழ், முஸ்லீம், சிங்கள வீரர்கள் வீராங்கனைகள் எமது தேசியக் கொடியின் கீழ் ஒன்று திரண்டனர் என்பது எமது விளையாட்டுத் துறையில் மகத்துவத்தை இங்கு புலனாக்குகின்றது. பல விளையாட்டு துறைகளில் இலங்கையில், தேசிய அளவில் போட்டி போடும் அளவிற்கு தேசிய அணிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

2004ஆம் ஆண்டு முதல் தடவையாக தமிழீழ பெண்கள் வலைப்பந்தாட்ட அணி இலங்கையில் தேசிய சம்பியன்கள் என்ற பட்டத்தை வென்றதோடல்லாமல், இங்கிலாந்து நாடு சென்று அங்கு கலந்து கொண்ட தொடர் போட்டிகளில் (18) அனைத்து போட்டிகளிலும் வென்று எமது மண் திரும்பி தேசிய தலைவரிடம் இருந்து தேசிய கௌரவத்தையும் பெற்றுக்



கொண்டனர். இவ் அணியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மூன்று தமிழ்ப் பெண்கள் ஆசிய, உலக கிண்ணப் போட்டிகளில் 2006ஆம் ஆண்டு விளையாடவுள்ளனர்.

2004ஆம் ஆண்டு, 2005ஆம் ஆண்டுகளில் உலகில் அதியுயர் கராத்தே பட்டி பெற்றவர் என்று பெயர் எடுத்த கராத்தேயின் தந்தை என்று வர்ணிக்கப்படும் ஷீகான் பொனி றோபேட்ஸ், ஷீகான் மாசே கவாசோ (ஜப்பான்) சென் லீ சிமித் (சீனா) ஆகிய பெரும்வீரர்கள் தமிழீத்திற்கு வந்து பல மாதங்கள் தங்கியிருந்து பல பயிற்சிகள் அளித்துள்ளனர். இதன் விளைவாக இலங்கையின் கராத்தே தேசிய போட்டிகளில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் சிங்கள மாவட்டங்களை விட முன்னணியில் திகழ்கின்றன.

மெய்வல்லுனர் துறையில் இலங்கைத்தீவு மார்தட்டிக் கொண்டது ஒரு தமிழனால் என்பது உலகறிந்த விடயம். முதன் முதலில் இலங்கைத்தீவிற்கு 1958 ஆம் ஆண்டு கெல்சிங்கியில் நடைபெற்ற ஆசிய சர்வதேச மெய்வல்லுனர் போட்டியில் தமிழீழ மண்ணைச் சேர்ந்த திரு. எதிர்வீரசிங்கம் அவர்கள் ஆறு அடி எட்டு அங்குலம் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தை சர்வதேசரீதியில் பெற்றுக் கொடுத்தார். அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா மாநிலத்தில் வசிக்கும் இப் பெரியவர் கடந்த நான்கு வருடங்களாக ஒவ்வொரு வருடமும் எமது தமிழீழ மண்ணிற்குச் சென்று மெய்வல்லுனர்களுக்கு சிறப்பு பயிற்சி அளித்து வருகின்றார். இதன் விளைவாக ஆசிய போட்டிகளில் தற்போது தமிழ் வீரர், வீராங்கனைகள் வெற்றி பெறும் சந்தர்ப்பங்கள் எம்மைத் தேடி வந்துள்ளன. இலங்கைத்தீவின் தேசிய அளவில் தங்கப்பதக்கங்களை எமது தமிழ் வீரர்கள் பலர் 2005ஆம் ஆண்டு வென்றுள்ளனர்.

இலங்கையின் தேசிய மெய்வல்லுனர் போட்டிகளில் (National Champion Ship 2005) திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த பல வீரர்கள், வீராங்கனைகள் தேசிய அளவில் பல சாதனைகளை படைத்துள்ளனர். கடந்த கால வரலாற்றில் வடக்கு, கிழக்கு மாகாணங்களை சேர்ந்தவர்கள் தேசிய போட்டிகளில் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே பதக்கங்களை பெறுவர். இம்முறை வடக்கு, கிழக்கு மாவட்டங்களை சேர்ந்தவர்கள் மூன்று தங்கப் பதக்கங்களையும், ஆறு வெள்ளிப் பதக்கங் களையும், நாலு வெண்கலப்பதக்கங்களையும் பெற்றுள்ளனர்.



Decathlon event இல் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த ரவீந்திரன் ரதீஷன் என்ற வீரர் 6164 புள்ளிகள் (New Sri Lanka Record) பெற்று புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டி தங்கப் பதக்கத்தை ஆண்களுக்கான மேற்பிரிவில் வென்றுள்ளார். இவர் நீளம் பாய்தல், கோலூன்றி பாய்தல் ஆகிய நிகழ்ச்சிகளில் பல தங்கப்பதக்கங்களை பெற்றுள்ளார்.

Decathlon கனிஷ்ட பிரிவில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த கேமட் நலீம் 3908 புள்ளிகளை பெற்று வெண்கலப் பதக்கத்தை பெற்றுள்ளார். National போட்டிகளில் 400 மீற்றர் ஓட்டத்தில் 49.96 செக்கனில் ஓடி முகமட் ஹாரிஸ் என்ற தமிழ் வீரன் தங்கப் பதக்கத்தையும், முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த நிரஞ்சன் 23 வயதுக்குட்பட்டோர் பிரிவில் 48.94 மீற்றர் ஓடி தங்கப்பதக்கத்தையும் வென்றுள்ளனர்.

12வயதுக்குட்பட்டோர் பிரிவில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் வீரன் A.M.M வேர்தாஸ் 4.63 மீற்றர் பாய்ந்து தங்கப்பதக்கத்தை வென்றது மட்டுமல்லாமல் New Sri Lankan Record யும் ஏற்படுத்தியுள்ளார்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 23வயதுக்குட்பட்டோர் குண்டெறிதல் நிகழ்ச்சியில் 9.27மீ எறிந்து வெள்ளிப் பதக்கத்தை வென்ற பெண் வீராங்கனையாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சீவரட்ணம் தாரணி என்னும் வீராங்கனை 18வயதுக்குட்பட்டோர் தட்டெறிதல் 28.47மீற்றர் எறிந்து வெள்ளிப்பதக்கத்தையும், குண்டெறிதல் 8.94மீற்றர் எறிந்து வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

Heptathlon நிகழ்ச்சியில் அகில இலங்கை ரீதியாக பெண்கள் மேற்பிரிவில் தர்மகுலசிங்கம் நிசாந்தினி 3099 புள்ளிகளைப் பெற்று தங்கப் பதக்கத்தையும், பெண்கள் கனிஷ்டபிரிவில் கண்ணியநாயகம் ரோஷாணி 2950 புள்ளிகளைப் பெற்று வெள்ளிப் பதக்கங்களையும் பெற்றுள்ளனர்.

23 வயதுக்குட்பட்டோர் 10 km Race Walking இல் 56.31 நிமிடங்களில் முடித்து சுப்பிரமணியம் கிருஷ்ணகுமார் வெள்ளிப் பதக்கத்தை அகில இலங்கை ரீதியில் வெற்றியீட்டியுள்ளார். 18 வயதுக்குட்பட்டோர் குண்டெறிதல் போட்டிகளில் ராஜ்குமார் பிரணவேந்திராவும், கோலூன்றிப் பாய்தல் (Pole Vault) நிகழ்ச்சியில் மொகமட் நசீம் அவர்களும் வெள்ளிப் பதக்கத்தை அகில இலங்கை ரீதியில் வென்றுள்ளார்கள்.

### எஸ். கணேஷ்

ஆசிய இலங்கை ரீதியில் 23வயதுக்குட்பட்டோர் பிரிவில் ரதீஷன் நீளம் பாய்தலும், நிரஞ்சன் 400மீற்றர் ஓட்டத்திலும் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளனர்.

2005 ஆம் ஆண்டு National Athletic Championships போட்டிகளில் தமிழீழ விளையாட்டுத்துறை வீரர்கள், வீராங்கனைகள் வென்றெடுத்த வெற்றிகளால் சர்வதேச, ஆசிய மெய்வல்லுனர்களுக்கான பாடசாலை ரீதியில் வடகொரியா நாட்டில் நடைபெறவிருக்கும் போட்டிகளிலும் இவர்கள் தகுதி பெற்றுள்ளனர்.



வாழ்க தமிழ் வீரர்கள்!!! வளர்க தமிழீழ விளையாட்டுத்துறை!!

**- இக்கட்டுரை தமிழர் தகவலிலும் பிரசுரிக்கப்பட்டது**

---

# பிரக்ஞை எனும் சாவி

*ஓசோ தரும் (புதுவருட) பரிசு. -*
*(Awareness is the key)*

*கடந்த கட்டுரையில் ஓசோ யார் என்று அறிந்தோம். இக் கட்டுரையில் ஓசோ நமக்கு கூறும் மிக முக்கியமான விடயம், போதனை என்ன என்பது தொடர்பாக பார்க்கப்போகின்றோம்.*

*பிரக்ஞை (awareness) யாக இரு. இருபத்தி நான்கு மணிநேரமும் பிரக்ஞையாக இரு என்பது தான் ஓசோவின் பிரதான போதனை. அதாவது காலை எழுதலிலிருந்து இரவு நித்திரைக்கு செல்லும் வரை மட்டுமல்ல நித்திரை கொள்ளும் பொழுதும் பிரக்ஞையாக இரு. இது நமக்கு பல வழிகளில் உதவிபுரிகின்றது எனக் கூறுகின்றார். நமது செயற்பாடுகள், சிந்தனைகள், எண்ணங்கள், மனம், உணர்வுகள், உணர்ச்சிகள் என்பவை தொடர்பாக நாம் பிரங்ஞையாக இருப்போமானால் அவற்றினால் உருவாகும் பாதிப்புகளிலிருந்து விடுபடலாம் என்பது அவரது அனுபவம்.*

*நம் பிரக்ஞை அற்ற செயற்பாடுகளின் விளைவுகளையே விதி எனவும் முற்பிறவியின் பயன் எனவும் கூறி சமாதானம் அடைகின்றோம். பிரக்ஞையற்ற செயற்பாடுகள் ஓர் எதிர் செயற்பாடக (react) இருக்கின்றன. இவ்வகையான எதிர் செயற்பாடுகள் முடிவற்ற தொடர்ச்சியைக் கொண்டிருக்கும். இதனால் தான் நேற்று அல்லது கடந்த வருடம் அல்லது கடந்த பிறவியில்(?) நம் பிரக்ஞையற்ற செயற்பாடுகளின் விளைவுகளை இன்று நாம் எதிர்கொள்கின்றோம். இன்றைய பிரக்ஞையற்ற செயற்பாடுகளின் எதிர் விளைவை அடுத்த நிமிடம் அல்லது நாளை அல்லது அடுத்த வருடம் நாம் எதிர்நோக்குவோம் என்பதில் சந்தேகம் இல்லை.*

### *மீரா பாரதி*

*பிரக்ஞையான செயற்பாட்டை எவ்வாறு மேற்கொள்வது? இதற்கு முதலில், பிரக்ஞையற்று எவ்வாறு நாம் வாழ்கின்றோம் என்பதை அறிந்து புரிந்து கொள்ளவேண்டியது அவசியமானது. நாம் ஒரு இயந்திரமாக வாழ்கின்றோம் என்பதை ஒருவரும் மறுப்பதற்கில்லை. நம் நாளாந்த செயற்பாடுகள் ஒவ்வொன்றும் இயந்திரத்தனமானவை. நம் உடலின் பகுதிகள் வெவ்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டிருக்கும் அதேவேளை மனம் இன்னுமொரு செயற்பாட்டை மேற்கொள்ளும். உதாரணமாக உணவை உட்கொள்ளும் பொழுது ஒரு கை உணவை எடுக்கும். மறு கை உடலைச் சொறியும். கால்கள் ஆடும். மனம் வேலை தொடர்பாக அல்லது காதலி தொடர்பாக சிந்திக்கும். இதயம் வேறு ஒரு பாதிப்பினாலோ அல்லது சந்தோசத்தினாலோ உணர்ச்சிக் கொந்தளிப்பில் இருக்கும். இவ்வாறு நம் உடல், மனம், ஆன்மா அனைத்தும் ஒரு நேரத்தில் பல வேலைகளில் பல முனைகள் நோக்கி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இம் மூன்றும் இணைந்த ஒருங்கிணைந்த முழுமையான செயற்பாட்டை நாம் முன்னெடுப்பது மிகவும் அரிது. மிகச் சில அரிதான நேரங்களில் இவ்வாறான செயற்பாடுகளை நாம் முன்னெடுப்போம். புதிய வேலைகளை செய்யும் பொழுது இந்த முழுமையான ஈடுபாடு உருவாகும். உதாரணமாக முதன் முதலாக கார் பழகும் பொழுது நம் ஒவ்வொரு அசைவுகள் தொடர்பாகவும் பிரக்ஞையாக இருப்போம். கை என்ன செய்கின்றது, கால் என்ன செய்கின்றது, நம் பார்வை என ஒவ்வொரு சிறிய விடயங்களிலும் நமது அவதானம் பிரக்ஞை இருக்கும். ஆனால் கார் நன்றாக பழகிய பின் எந்தவிதமான அவதானமோ பிரக்ஞையோ இன்றி ஒவ்வொரு செய்பாடுகளையும் இயந்திரத்தனமாக முன்னெடுப்போம். பழக்கப்பட்ட வீட்டு மாடுகள் போல்.*

*பிரக்ஞையான செயற்பாட்டிற்கு பிரதானமான எதிரி மனம். ஒரு கூற்று ஒன்று 'மனம் மிக மோசமான எஜமான். ஆனால் சிறந்த வேலையாள்.' சாதாரணமாக நம் வாழ்க்கையில் மனமே நம் எஜமானாக இருக்கின்றது. நம் மனதை எஜமான் பதவியிலிருந்து இறக்கி நம் வேலையாளாக மாற்றிவிடுவோமானால் நம் பிரச்சினைகளில் தொண்ணூறுவீதம் இல்லாமல் போய்விடும் என ஓசோ கூறுகின்றார். மனம் போன போக்கில போகாமல் மனதை நாம் வழி நடத்தவேண்டும். நம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவேண்டும். இதற்கு வழி என்ன?*

*தியான வழி முறைகள் நம் பிரக்ஞையான செயற்பாட்டிற்கு வழிவகுக்கின்றன. நம் உடலை, மனதை, ஆன்மாவை சுத்தம் செய்து பிரக்ஞையான செயற்பாட்டுக்கு வழிவகுக்கின்றது. பிரக்ஞையான செயற்பாடு என்பது எப்பொழுதும் முழுமையானதாகவும் (totalness) பொறுப்பான செயற்பாடாகவும் (response) இருக்கும். இவ்வாறான செயற்பாடுகள் அக்கணமே முழுமை பெற்றுவிடும். இதனால் எதிர்காலத்ததில் விதியின் பயனை அனுபவிப்பதிலிருந்து விடுதலை பெறலாம். இதற்கு இக் கணத்திலிருந்தே பிரக்ஞையாக செயற்பட வேண்டியது அவசியமல்லவா.*

*மிருக நிலை என்பது நூறு வீதம் பிரக்ஞையற்ற (unconscious) செயற்பாடு. நாம் இன்று மிருக நிலையிலிருந்து ஒரு வீதமே மனித நிலையை அடைந்திருக்கின்றோம். ஏனெனில் ஓசோ கூறுகிறார், சாதாரணமாக மனிதர்கள் ஒரு வீதம் பிரங்ஞையாகவும் (conscious) தொண்ணூற்றி ஒன்பது வீதம் பிரக்ஞையற்றும் (unconscious) செயற்படுகின்றனர். இதிலிருந்து தியானம் மூலம்*

**தொடர்ச்சி 19ஆம் பக்கம்**

# வீட்டின் விலையேற்றம்

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்


தொடர்-2 2 4

தொடர்ச்சியான வீட்டின் விலை ஏற்றம், கடந்த ஒன்பது (9) வருடங்களாக காணக்கூடியதாக உள்ளது. ஆகக்குறைந்த சராசரி விலை $198,150 (சராசரி விலை என்பது குறிப்பிட்ட ஆண்டில் விற்கப்பட்ட வீடுகளினால் கிடைக்கப்பெற்ற மொத்த தொகையை, விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையால் வகுப்பதால் கிடைப்பது) 1996இல் ஏற்பட்டது. அதற்கு அப்புறம் சராசரி வீட்டின்விலை அதிகரித்து வருவதுடன், ஒவ்வொரு வருடமும் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வந்துள்ளது. இவை திருப்பி விற்கப்படும் (Resale) வீடுகளின் நிலைமை. இதனைவிட புதியவீடுகளும் ஒவ்வொருவருடமும், மேலதிகமாக விற்கப்படுவதுடன் விலையும் அதிகரித்தே வந்துள்ளது.

2005ஆம் ஆண்டின் சராசரி வீட்டுவிலை $335,907 ஆகவும் மொத்தமாக விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிகை 84,145 ஆகவும் காணப்படுகின்றது. புதுவருடத்தில் (2006) ஜனவரியில் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிகையும், வீட்டின் விலையும் கடந்த வருடத்தின் ஜனவரியில் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையிலும், விலையிலும் பார்க்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாறே பெப்ரவரி 2006இலும், 2005 பெப்பரவரியை விட அதிகமாகவே காணப்படுகின்றது.

### மீள்கொடுப்பனவுப் காலப்பகுதி (Amortization Period) நீடிக்கப்படுகின்றது.

அடமானம் (Mortage) எடுக்கும் போது அதனை திருப்பிக்கொடுக்க வேண்டும். வீடு வாங்கும்போது வீட்டை அடமானமாக வைத்து அடமானம் பெறப்படுகின்றது. பெறப்படும் அடமானப்பணம், குறிப்பிட்ட காலத்தில் திருப்பி கொடுக்கப்பட வேண்டும் என்பது யாவரும் அறிந்த உண்மை. இந்த அடமானப்பணத்தை திருப்பி கொடுக்கப்படும் காலப்பகுதியை ஆங்கிலத்தில் Amortization Period எனக் கொள்ளலாம்.




சாதாரணமாக இந்தக்காலம் வேறுபடும். 10 வருடங்கள், 15 வருடங்கள், 20 வருடங்கள், 25 வருடங்களாக காணப்படும். நடைமுறை வாழ்வில், இக்காலப்பகுதி 25 வருடங்களாகவே காணப்படுகின்றது. மாதாந்த கொடுப்பனவு மேலதிகமாக கொடுக்க விரும்புபவர்கள் இந்தக்காலத்தை குறைவாகவும் எடுப்பார்கள். இதுவரை கனடாவில், மிக அதிகமாக எடுக்கக்கூடிய காலப்பகுதியாக 25வருடமே காணப்படுகின்றது. ஆனால் இப்பொழுது இந்த மீளக்கொடுப்பனவு காலப்பகுதியை 30வருடங்களாக அதிகரிக்கப்பட இருக்கின்றது. இதனால் நன்மைகளும் இருக்கின்றது. தீமைகளும் இருக்கின்றன. 30வருடக்காலப்பகுதியாக இருப்பதால் மாதாந்த கட்டுப்பணம் குறைவடையும், அதேநேரத்தில், கடனை கட்டி முடிக்கும் காலம் அதிகரிக்கப்படுகின்றது. இதனால் குறிப்பிட்ட கடன்பெற்ற தொகைக்கு மீளச் செலுத்தும் வட்டி அதிகமாகக் காணப்படும்.

உதாரணமாக $200,000 அடமானத்தொகை 5%வட்டிவீதம் கணக்கில் கொள்வோம். 25வருட மீள்கொடுப்பனவு காலப்பகுதியாகக் கொண்டால் மாதாந்த கட்டுப்பணம் $1164, 30வருட மீள்கொடுப்பனவு காலப்பகுதியாக கொண்டால் மாதாந்த கட்டுப்பணம் = $1068.

30 வருட மீள்கொடுப்பனவுக் கால்பகுதியை ஒவ்வொருமாதமும் $96 குறைவாக கொடுப்பனவு செய்யக்கூடியதாக இருக்கும்.


இதனால் வீடுவாங்குபவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கலாம். மற்றும் விலைகூடிய வீடுகளையும் பலர் வாங்க சந்தர்ப்பமும் ஏற்படும்.

**குறிப்பு - வட்டிவிலை அதிகரித்து வருவதால் மேலதிகமாக ஏற்படும் பழுவைக் குறைப்பதற்காகவும், இந்த காலப்பகுதி அதிகரிப்பு சிந்தித்திருக்கலாம்.**

இதனைவிட யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்பதன் வெளிப்பாடாகவும் இருக்கலாம். என்பதனையும் சிந்திக்கவும்.

### முதன்மை வட்டிவீதம் (Prime Rate)

முதன்மை வட்டி வீதம் அதிகரித்துவருவது யாவரும் அறிந்தது. கடந்த வருடம் அதிகரிக்க தொடங்கிய வட்டிவீதம் தொடர்ச்சியாக நான்கு தடவை அதிகரித்து வந்துள்ளது. இப்பொழுது முதன்மை வட்டிவீதம் 5.25% ஆகக் காணப்படுகின்றது. இந்த மாதம் மார்ச் 27, 2006 இந்த வட்டிவீதம் 0.25% இனால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் மத்திய வங்கியின் வட்டிவீதம் 3.50% இலிருந்து 3.75% ஆக அதிகரித்துள்ளது. எனவே முதன்மை வட்டி வீதமும் 5.25% இலிருந்து 5.50% ஆக அதிகரித்துள்ளதி. (தொடர்ச்சியாக 5 தடவை 0.25% - 1.24% அதிகரித்துள்ளது.) மேலும், பொருளாதார ஆலோசகர்களின் அறிக்கையின் படி ஏப்பிரல் 25, 2006 ஆம் திகதியும் மத்தியவங்கி மேலும் ஒரு 0.25% அதிகரிக்கலாம் என கூறப்படுகிறது.










# சிறுவர் நாடகம்

### கலையுணர்வு

ஆக்கமுயற்சி பற்றிய முதல் அனுபவத்தையும் விளக்கத்தையும் அளிப்பது நாடகம். அதனால், நாடக முயற்சிகள் அதிக அளவு கலையுணர்வையும் ஊட்டி நிற்கின்றன. நாடகத்தில் தன்னீடுபாடு அதிகம். இந்த ஈடுபாடு மனோநிலை, சூழ்நிலை, உணர்ச்சியாழம் என்பவை பற்றிய உணர்வை அதிகரிக்கின்றது. அதிகரிக்கும் உணர்வு, வாழ்க்கை பற்றிய உண்மை விளக்கத்தைப் பெற உதவுகின்றது. உதாரணமாக ஓர் ஓவியத்தை வரைவதற்கு கண்டகாட்சி மட்டுமல்லாது கொண்ட கருத்தும் தூண்டியாக அமையலாம். எனவே ஓர் ஓவியம் ஒன்றை அதிகமாகப் பிரதிபலிக்கலாம் அல்லது பிரதிபலிக்காமலே இருக்கலாம் என்ற உணர்வைத் தோற்றுவிக்கும். இதுபோலவே இலக்கியத்திலும் அடிப்படைக் கருத்துக்கும் அப்பால் இரசிப்பதற்கு அதிகம் இருக்கும். கலைபற்றிய இந்த உணர்வு பிள்ளைகளை வளமாகவும் முழுமையாகவும் வாழவைக்கின்றது.

கலையுணர்வு இரசனைத் திறனைச் சரியான வழியில் வளர்க்க உதவுகின்றது. சரியான இரசனைத் திறன் புதைபொருளையும் புனை பொருளையும் வேறு பிரித்தறியும் தகைமையை அளிக்கின்றது. இத்தகைமையே திறனாய்வுக் கலைக்கு அடிப்படையாக அமைவது. நாடகத்திற்குத் தெரிவு செய்யும் கதைகளின் தரத்தை மதிப்பிட இத்தகைமை உதவுகின்றது. கலந்துரையாடலின்போது முன்வைக்கப்படும் கருத்துக்களின் தரத்தை அல்லது நாடகக்கதையின் பொருளை அல்லது அக்கதையின் பின்னணியைத் தாமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்கின்ற எண்ணம் இத்தகைமையை வளர்த்துக் கொண்டர்களிடம் இயல்பாகவே பிறக்கும். இதனால் வாசிப்புப் பழக்கம் இன்னும் அதிகரிக்கும். வாசிப்புப் பழக்கம் இலக்கிய, சமய வரலாற்று நூல்களில் அதிக பயிற்சியையும் ஈடுபாட்டையும் அளிக்கும். இந்த ஈடுபாட்டினால் மாணவர்கள் தமது சமுதாயத்தின் கலாசாரத்தையும் விழுமியங்களையும் நன்கு விளங்கிக்கொள்வர். இது கல்வியின் நோக்கங்களுள் ஒன்று. பல பாடங்களைப் பல மாதங்களாக கற்பித்து அடைய வேண்டிய இந்த நோக்கத்தை முறையான நாடகப் பாடங்களால் குறைவான காலத்தில் நிறைவாகப் பெற்றுவிடலாம்.

### கூட்டுறவு

நாடகம் ஒரு கூட்டுமுயற்சி. வகுப்பிலுள்ள ஒவ்வொருவரினதும் ஒத்துழைப்பு இம்முயற்சிக்கு மிக அவசியம். அவ்விதம் ஒத்துழைக்கும்போது மாணவர்களிடையே அன்பும் ஆதரவும் நல்லுறவும் வளர்கின்றன. சேர்ந்து வேலை செய்கின்றபொழுது சாதி, சமய வேறுபாடுகள் மறக்கப்படுகின்றன. ஒற்றுமையுணர்வு வளர்க்கப்படுகின்றது. இதனாலேயே கலையுணர்வு உள்ளவர்கள் வேற்றுமைகள் பாராட்டுவதில்லை என்ற பொதுஅபிப்பிராயம் உருவாக நேர்ந்தது. இது பெரிய உண்மையாகும். கலைஞர்கள் சாதியையும் சமயத்தையும் கடந்தவர்கள். கலையுணர்வால், கலை அனுபவத்தால் உண்மை விளக்கம் பெறுகின்றது. மனப்பான்மை விரிவடைகின்றது. நாடகத்தால் மாணவர்களின் மனப்பான்மையை நல்ல முறையில் வளர்த்து அவர்கள் மூலம் சமுதாயத்தின் கோணற் பார்வைகளையும் நேராக்க முடியும்.

### சமூகப்பயிற்சி

முதியோர் உலகுடன் இணக்கம் காணுதல் இளைஞர்களுக்கு ஒரு பிரச்சினையாகவே இருந்து வருகின்றது. முதியோர் கூட்டத்துடன் நடந்துகொள்ளும் முறையறியாது பிழைத்தல், அவர்களின் கணிப்பைப் பெறதுடித்தல், அது தவறுமிடத்து அவர்களுடன் முரண்படுதல், முரண்பட்டுத் தோல்விகாணின் மனமுறிவு பெறல், மனமுறிவைச் சீராக்கஞ் செய்யும் பொருட்டுப் போராடுதல் இவையெல்லாம் இப்பிரச்சினையின் பல்வேறு வடிவங்கள். முதியோருடன் இணக்கம் பெறுவதற்கு நாடகத்தால் வளர்த்துக் கொண்ட கூச்சத் தெளிவையும் உறுதியையும் பயன்படுத்தலாம். நாடகத்தில் முதியோர் சமூகச் சூழலை ஏற்படுத்தி நடிப்பதால் வரும் அனுபவத்தாலும் சமூகப் பயிற்சியை வளர்க்கலாம். இளைஞர்களுக்குச் சமூக அமைப்பு முறையையும் பண்புகளையும் சட்ட திட்டங்களையும் புகட்டி தனியாள் சமூகம் இரண்டுக்குமிடையே உள்ள தொடர்பினை உணர்த்தி தனியாள் சமூகத்தில் நடந்துகொள்ள வேண்டிய முறைகளை அறிவிப்பது நாடக ஆசிரியரின் கடமையாகும்.

### பிரச்சினை விளக்கம்

இளைஞர்கள் முதியோருடன் இணக்கம் பெற இடர்படும் காரணங்களுள் சமுதாயத்திலுள்ள பிரச்சினைகள் பற்றிய விளக்கக் குறைவும் ஒரு காரணமாகும். எமது சமுதாயத்தில் பல பிரச்சினைகள் உள்ளன. பொருளாதாரப்பிரச்சினை, வேலையில்லாப் பிரச்சினை, வகுப்பு மட்டப் பிரச்சினை, மொழிப்பிரச்சினை, தொழிலாளர் பிரச்சினை, சனப்பெருக்கப் பிரச்சினை, உணவுப் பிரச்சினை, குடியிருப்புப் பிரச்சினை, தண்ணீர்த் தட்டுப்பாடு, தொற்றுநோய் பரவல் என்று இவற்றை எண்ணிக் கொண்டே போகலாம். இப்பிரச்சினைகள் பலவற்றை மாணவர்களுக்குத் தெரியாதபடி நாம் மறைத்து வைக்கின்றோம். கட்டிளமைப் பருவத்தில் அல்லது வாலிபப் பருவத் தொடக்கத்தில் இத்தனை பிரச்சினைகளையும் இளைஞர்கள் எதிர் நோக்கும் பொழுது இன்னற்படுகின்றார்கள். முதியவர்கள் நமக்காக எதுவும் செய்யவில்லை என்று விரக்தியடைகின்றார்கள். முதியவர்களுடன் போரிடுகின்றார்கள். இது 1971 ஆம் ஆண்டு எமக்குக் கற்பித்த பாடம்.

இத்தகைய நிலைமையைத் தவிர்ப்பதற்காக எமது பிரச்சினைகளைப் பற்றிய அடிப்படை அறிவையும் அவற்றுக்கான காரணங்களையும் இடைநிலை வகுப்பு மாணவர்களுக்குப் படிப்படியாக விளக்க வேண்டும் என்பது புதிய கல்வித்திட்டத்தின் நோக்கங்களுள் ஒன்றாகவுள்ளது.

பிரச்சினையை விளக்குவது என்பது ஒன்று. அதன் தாக்கத்தை உணர்வது என்பது இன்னொன்று. புள்ளி விவரங்கள் வகுப்பறையிலுள்ள மாணவர்களுக்குப் பிரச்சினையை விளக்கலாம். ஆனால் பிரச்சினையின் தாக்கத்தை உணர்த்தமாட்டா. நாடகம் மூலமே பிரச்சினைகளின் தாக்கத்தை உணர்த்த முடியும். தாக்கத்தை விளக்குவதற்கு நேரடி அனுபவமே சிறந்தது. நாடகத்தில் பாத்திரங்களைத் தாங்கி நடிப்பது நேரடி அனுபவத்துக்கு நிகரானது. பிரச்சினை விளக்கத்துக்கு சமுதாயப் பிரச்சினைகளை எடுத்துக் கூறும் நாடகங்களில் மாணவர்களை ஈடுபடுத்துவதைப் போன்ற சிறந்த வழி வேறொன்றுமில்லை.

### பொறுமைப் பண்பு

சமுதாயப் பிரச்சினைகளையும் அப்பிரச்சினையால் மனிதன் அடையும் தாக்கங்களையும் அத்தாக்கங்களால் அவன் பெறும் உணர்ச்சி வேகங்களையும் அவ்வுணர்ச்சிகளால் ஏற்படும் விளைவுகளை யும் விளங்கிக் கொண்டவர் களுக்கே எதையும் தாங்கும் இதயம் இருக்க முடியும். நாடகத்தில் பிரச்சினைகளும் உணர்ச்சி விளைவுகளும் வரக்கூடிய கட்டங்களை அமைத்துப் பிள்ளைகளை அவற்றில் ஈடுபடுத்தும் போது உணர்ச்சிகளையும் உணர்ச்சிகளுக்கான காரணங்களையும் அவர்களால் எளிதில் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

மேலும் தனக்கேற்ற பாத்திரமுள்ள நாடகம் தெரிவு செய்யப்படும்வரை காத்திருத்தல், வகுப்பில் உள்ளோர் முன்னிலையில் பிழைகள் விட்டுத் திருத்துதல், ஒத்திகைகளின் போது தெரிவிக்கப்பட்ட குறைகளைச் செவிசாய்த்தல், கூட்டு முயற்சியில் நண்பர்கள் விடும் தவறுகளைத் தாங்குதல் போன்ற அனுபவங்களாலும் பொறுமைப் பண்பு விருத்தி பெறுகின்றது.



**கவிஞர் வி. கந்தவனம்**

# முற்பிறவி



அப்போது நான் 'பெட்டைக்' குரங்காய்
வாழ்ந்தேன்

நாங்கள் கூட்டங் கூட்டமாய் உலாவித்
திரிவோம்
எங்களுக்கு உணவுப் பஞ்சமில்லை
அறுகம் புல்லில் இருந்து
ஆகாயத்தில் தொங்கும் பலாக்கனிவரை
நாங்கள் தின்போம்

வெட்டவெளியில் வட்டமாய்க் குந்தியிருந்து
மழையில் தலை முழுகுவோம்
வெயில் குளிப்போம்
பனிக்கால இரவில்
பற்றைக்குள் படுத்துத் தூங்குவோம்

ஆளுக்காள் பேன் பார்ப்போம்
முதுகு சொறிவோம்
பிரசவம் பார்ப்போம், எம் குட்டிகள்
எல்லோர்க்கும் பொதுக் குட்டிகள்

உயர்ந்த கொப்புகளின் விழுதுகளில் பிடித்து
ஊஞ்சல் ஆடுவோம்

எமது கூட்டத்தின் கிழட்டுக் குரங்கொன்று
ஒருநாள்
எம்மை ஒரு தோட்டத்திற்கு அழைத்துச்
சென்றது
எம்மில் பலருக்கு அதில் விருப்பமில்லை
இருப்பினும் கூட்டத்துடன் குதித்தோடினோம்

தோட்ட வேலியைப் பாயும்போது
முள் கம்பி எனது முதுகில் கீறியது

பச்சைப் பசேலென்ற தோட்டத்தில்
ஆசையுடன் பிடுங்கிப் பிடுங்கி
பச்சை சிவப்பு மிளகாய்களைத் தின்றோம்
வயிறுகள் நிறைந்தன

சிறிது நேரத்தில் கண்கலங்க மூக்கும்
எரிந்தது
வயிற்றினுள் காரம் குடைந்தது
ஒன்பது வாசல்களாலும் எரிகாற்று
வெளியேறியது
வேதனையில் அங்குமிங்கும் துள்ளிக்
குதித்தோம்

பக்கத்துத் தோட்டத்தினுள் பாய்ந்தோம்
அது ஒரு தக்காளித் தோட்டம்
பிடுங்கிப் பிடுங்கித் தக்காளிப் பழத்தைத்
தின்றோம்
அப்போது வயிறுகள் குளிர்ச்சியடைந்தன

'ஹி..ஹி..' என்று சிரித்துக் கைகொட்டி
மகிழ்ந்தோம்
பக்கத்தில் ஓர் இருண்ட பெருங்காடு
இனத்தைப் 'பெருக்க' அதற்குள் புகுந்தோம்.



**முத்துராஜா**


Scarborough Central Auto
SALES & SERVICE



2004 BMW 330I - Automatic, 4 dr., 3.0, 6 cyl. , Gas, Rear Wheel Drive, black exterior, black interior, Fog Lights, Alloy Wheels, Sun Roof, Leather, Bucket Seats, Heated Seats, Heated Mirrors, 65,284 km...more

2001 BMW 330I - Automatic, 4 dr., 3.0, 6 cyl. , Gas, Rear Wheel Drive, black exterior, black interior, Fog Lights, Alloy Wheels, Sun Roof, Leather, Bucket Seats, Power Seats, Heated Seats, Heated, 91,916 km ...more



2002 ACURA RSX PREMIUM - Automatic, 2 dr., 2.0, 4 cyl. , Gas, Front Wheel Drive, silver exterior, black interior, Alloy Wheels, Sun Roof, Leather, Bucket Seats, Heated Seats, Heated Mirrors, Air Conditioning,...more

2002 ACURA 1.7 EL - Automatic, 4 dr., 1.7, 4 cyl. , Gas, Front Wheel Drive, beige exterior, beige interior, Alloy Wheels, Bucket Seats, Heated Mirrors, Air Conditioning, AM-FM Stereo, Compact Disc, 40,354 km...more

2003 TOYOTA COROLLA LE - Automatic, 4 dr., 1.8, 4 cyl. , Gas, Front Wheel Drive, silver exterior, grey interior, Alloy Wheels, Bucket Seats, Air Conditioning, AM-FM Stereo, Compact Disc, Power Windows, 75,211 km ...more

1999 MERCEDES-BENZ C230 KOMPRESSOR - Automatic, 4 dr., 2.3, 4 cyl. , Gas, Rear Wheel Drive, beige exterior, beige interior, Alloy Wheels, Leather, Bucket Seats, Power Seats, Heated Mirrors, Air Conditioning, AM-FM, 79,426 km ...more

Honda இல் பல வருடம் அனுபவம் பெற்ற உங்கள் **சோதீஸ்** இடம் வாகனங்களை வாங்குவதற்கு அழையுங்கள்

Call: 416.704.1179

# காப்புறுதி நட்ட ஈடுகள் பெறுவதில் மக்களின் மோசடிகள்

*ஒரு இழப்பு!*
*அந்த இழப்பினால் ஒரு பாதிப்பு!*
*அந்த பாதிப்பினை தொடர்ந்த ஆபத்துகள்!*

*இப்படியான நிலைமைகள் வாகனங்கள் ஓட்டும் போதோ அல்லது வீடு, வியாபார நிலையங்கள் போன்ற சொத்துகளை வைத்திருக்கும் போது ஏற்படும் அல்லது ஏற்படலாம் என நினைத்து எல்லோரும் கூட்டாக சேர்ந்து பங்கு போட்டு வைத்திருக்கும் பணப் பெட்டகமான "காப்புறுதி நிறுவனம்"த்திலிருந்து எதுவித இழப்புகளோ, அல்லது பாதிப்புக்களோ ஏற்படாது சம்பந்தமில்லாத பாதிப்புகளை விபத்துடன் இணைத்து நட்ட ஈடுகளை பெறுவோர் தொகை அதிகரித்து வருவதால் கனடாவில் உள்ள சகல காப்புறுதி கம்பனிகளினாலும் சேர்ந்து உருவாக்கப்பட்ட ஒரு நிறுவனம் இம்மோசடிகளை துப்புத்துலக்கி கண்டு பிடிப்பதற்கும் மோசடிகள் நடைபெறாமல் இருப்பதற்கும் ஏராளமான முயற்சிகள் செய்து வருகின்றன.*


**சிவ. பஞ்சலிங்கம் B. Com,**

(Licensed Insurance Broker)

காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:

**416.321.0999**


*"Insurance Bureau of Canada" என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் இந்நிறுவனத்தின்கீழ் காப்புறுதியில் மோசடிகளை கண்டு பிடிப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒரு நிறுவனமே "The Canadian Coalition Against Insurance Fraud" என்பதாகும்.*

*இந்நிறுவனம் வாகன காப்புறுதி வீடு சொத்துகளின் காப்புறுதி, வியாபார காப்புறுதிகள் போன்றவற்றில் பொதுமக்களினால் மேற்கொள்ளும் மோசடி நட்டஈடு நிவாரணம் பெறுவதனை தேடி கண்டு பிடிப்பதில் மிகவும் ஜாக்கிரதையாக உள்ளனர்.*

*1.800.387.8477 அல்லது 416.222.8477 என்னும் தொலைபேசி இலக்கத்தினை மக்களுக்கு பகிரங்கப்படுத்தி எவராவது மோசடி செய்பவர்கள் பற்றிய தகவல்களை இரகசியமாக தருமாறும் தகவல் தருபவர்களின் விவரங்கள் இரகசியமாகவே இருக்கும் எனவும் பொதுமக்களை கோரியுள்ளார்கள். ஏனெனில் இந்நிறுவனங்களின் புள்ளி விவரப்படி ஒவ்வொரு வருடமும் $1.3 பில்லியன் டொலர் தொகையான பாதுகாப்புக்கு என வாடிக்கையாளர்கள் கூட்டா முதலிட்ட காப்புறுதி பணம் மோசடியாக வெளியே போகின்றது எனவும், இதன் விளைவு ஒவ்வொரு வாடிக்கையாளரும் 10% - 15% வீதமான மாத கட்டுபணம் காப்புறுதி மோசடி கும்பலின் கைகளில் பாதிப்பு இல்லாது போய் சேர்கின்றது என்பது இவர்களின் தகவல்களின்படி உண்மை என்பதால் இம்மோசடிகளை கண்டு பிடிப்பதற்காக, புலனாய்வுகளை மேற்கொள்ளுவதற்காக காப்புறுதி கம்பனிகள் கூட்டாக செலவழிக்கும் பணம் ஏராளம் ஆகும். இச் செலவுகள் யாவும் காப்புறுதிகளுக்காக நாம் செலுத்தும் மாத கட்டுபணத்தில் இருந்தே போய் சேருகின்றது என்பதே அடிப்படை உண்மையாகும். விளைவு காப்புறுதிக்கான கட்டுபணம் அதிகரித்து கொண்டே போகின்றது.*

*1996 ஆம் ஆண்டு கிடைத்த தகவலின்படி காப்புறுதியில் மோசடி செய்தவர்கள் பற்றிய தகவல்களை புலனாய்வு செய்ததில் 627 தகவல்கள் கிடைத்தது எனவும், இதில் புலனாய்வின் பின்பு 27 பேருக்கு நட்டஈடு மறுத்து, 21 பேரினை கைது செய்தமையால் சுமார் $6,29,942 டொலர் காப்புறுதி பணம் பாதுகாக்கப்பட்டது என இந் நிறுவனத்தின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.*

*அதாவது ஒவ்வொரு டொலர் மோசடி நட்டஈடு கொடுப்பனவும் பாதிப்பது யார் என்றால் கூட்டாக காப்புறுதி செய்யும் யாவரும் என்பதே இந்நிறுவனங்கள் பொதுமக்களுக்கு அறிவிக்கும் அறிவுரை ஆகும். கடந்த வருடமான 2005 இல் கண்டு பிடிக்கப்பட்ட காப்புறுதி நட்டஈடு பெறும் மோசடிகளை பத்து வகையான தலைப்பில் இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. ஆங்கிலத்தில் அவர்கள் இட்ட தலைப்பினையும் அதன் விளக்கவுரைகளும் பின்வருமாறு.*

### 1. TOO MANY ENCORE

*வாகன தரிப்பு நிலையங்களில் இருந்து எவராவது முதியவர்கள் அல்லது அப்பாவி பெண்கள் பின்னோக்கி வாகனத்தினை நகர்த்தும் போது தெரியாத்தனமாக மோதுவது போல மோதி கைவலி, கால்வலி என குறிப்பிட்டு நட்டஈடு பெறும் ஒருவகையான மோசடியாகும். இதில் ஒருவர் இருகிழமைக்கு ஒருமுறை இப்படியான விபத்தினை பதினொரு இடங்களில் நட்டஈடு பெற்று இறுதியில் சட்டத்தின் பிடியில் அகப்பட்டார்.*

### 2. PIRATE SHIPPING

*ஒவ்வொரு வருடமும் சுமார் 20,000 விலைஉயர்ந்த வாகனங்கள் கனடாவில் திருட்டுப் போகின்றன. திருடப்பட்ட வாகனங்கள் பல கப்பலில் ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.*

*இதில் ஒருவர் தமது விலை உயர்ந்த வாகனத்தினை ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்துவிட்டு 90நாட்களின் பின்பு, வாகனம் தொலைந்து விட்டது என குறிப்பிட்டு காப்புறுதி கம்பனியில் நட்டஈடு பெற்றார். ஆனால் இறுதியில் "பெல்ஜியம்" நாட்டு துறைமுகத்தில் கனடாவில் திருடப்பட்ட இரு வாகனங்கள் பிடிபட்ட போது இவ் உண்மையும் வெளியே வந்தது.*

### 3. FENDER BENDER FRAUD

*விபத்தில் வாகனங்களுக்கு ஏற்படும் காயம் சிறிது. ஆனால் இவ்வாகனங்களை திருத்தும் நிலையத்தினர் உரிமையாளருடன் சேர்ந்தோ அல்லது சேராமலோ, வாகனத்திற்கு ஏற்பட்ட பாதிப்பினை பெரிதாக்கி, மலிவான விலையில் உள்ள உதிரிப்பாகங்களை பொருத்திவிட்டு விலைஉயர்ந்த உதிரிப்பாகங்களை பொருத்திய விலையில் நட்டஈடு பெறும் மோசடிகளாகும்.*

### 4. THE CHOP SHOP KING


*மிக பெரிய ஒரு கார் விற்பனையாளர் வாகனங்களின் திருத்த வேலைகள், உட்பட சகலவேலைகளையும் செய்யும் நிறுவனத்தை சொந்தமாக வைத்திருக்கும் மிகப் பெரிய செல்வந்தர். இவரது இன்னொரு வர்த்தகம் வாகன அடிப்படை இலக்கங்களை மாற்றுவது. சுமார் ஒரு மில்லியன் டொலர் பெறுமதியான 40 திருடப்பட்ட வாகனம் இவரது மோசடியில் இருந்து பிடிபட்டது. 119 நாள் விசாரணையில் 190 சாட்சிகள் இவருக்கு எதிராக நிறுத்தப்பட்டு இறுதியில் ஆறுவருட சிறை, $7,74,000 பண தண்டனை.*

### 5. FIELD OF SCHEMES

*பொதிகள், சுமைகளை ஏற்றி இறக்கும் வண்டி (Pick up Truck) காணாமல் போய் விட்டது என குறிப்பிட்டு $68,000 டொலர் நட்டஈட்டை ஒருவர் பெற்றார். இரகசிய தகவல், இந் நிறுவனத்திற்கு கிடைத்தது. நகரத்திற்கு அப்பால் உள்ள இவரின் குடும்பத்திற்கு சொந்தமான விவசாய நிலத்தின் மத்தியில் வைத்து பாகங்கள் பகுதி பகுதியாக கழற்றி விற்பனை செய்யப்பட்டது பிடிபட்டது. ஒரு சம்பவம் இது போன்ற சம்பவங்களும் கடந்த வருடத்தில் பல நடந்துள்ளது.*

### 6. PHANTON INJURIES

*விபத்து நேரம் வாகனத்தினுள் இருக்காது வேறு ஏதாவது வழியில் உடல் காயம் அடைந்தவர் இவ்விபத்தில் காயப்பட்டது என குறிப்பிட்டு நட்டஈடு பெறுவது இந்த வகைப்பிரிவாகும். சட்ட உதவியாளர்களின் வழிகாட்டலில் $200,000 டொலர் வரை நட்டஈடு பெற்ற ஒருவர் பிடிபட்டிருந்தார்.*



*தொடர்ச்சி 02ஆம் பக்கம்*


## SHAWN TRUCK & FORKLIFT DRIVING SCHOOL







**Fork Lift licence**
From **$75.00**

**Truck licence A-Z**
From **$599.00**

**In Classes**

**365 (Learning Permit)**
**Dangerous Goods**
**Border Crossing**
**Air Brake (Z)**
**Log book**

- A-Z & D-Z up grade • One on One Training
- Job Placement Right Away!
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

**Air brake**

**Excellent Quality - Low Cost Training**

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

Pl. Call: Raja / Shan

416.412.7618 / 416.913.9574

416.829.0603

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)



18 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

## யோகாஸ்


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 172

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | | ■ | 3 |
| | ■ | | ■ | ■ | | ■ | |
| 4 | | ■ | | | 5 | | 6 |
| | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | |
| | ■ | 7 | | ■ | | | 8 |
| 9 | | | | | ■ | ■ | |
| | ■ | | | 10 | ■ | ■ | |
| ■ | 11 | | 12 | ■ | 13 | | |

**இட - வல**

1. தமிழ் போராளியாக திருமாவளவன் நடிக்கும் திரைப்படம்
4. நிலம்
6. போட்டி (வல - இட)
7. கொடு
8. தோற்றம்
9. ஆண்கள் அணியும் காதணி
10. இரசாயன கலவையில் தாக்கத்தைவிரைவு பெற உதவுவது(வல-இட)
11. அரசு புலிகள் மாசி 23 இல் பேச்சுவார்த்தை நடத்திய இடம்
13. பயிரின் தானியக் கொத்து

**மேல் - கீழ்**

1. இரகசியம்
2. அணி
3. கனடாவின் 22 ஆவது பிரதமர்
5. அகல் விளக்கு (கீழ்-மேல்)
7. நெருப்பு
10. உடல் (கீழ்-மேல்)
12. உறுதி கூறு

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஏ | றா | வூ | ர் | ■ | ம் | ல | ஏ |
| க | ■ | ■ | கா | ண் | ■ | ■ | ற் |
| லை | சீ | ■ | ■ | ■ | க | ன் | று |
| வ | ர் | த் | த | க | ம் | ■ | க் |
| ன் | ■ | ■ | லை | ■ | பீ | ■ | கொ |
| ■ | ம் | க | மு | ■ | ர | ■ | ள் |
| மி | ■ | ■ | றை | ■ | ம் | ஓ | ■ |
| து | யி | ல் | ■ | பா | ■ | து | ளி |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் March 29, 2006க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**171இல் வெற்றி பெற்றோர்**
1) M. Kanagasabai, Mississauga
2) அபிராமி சத்தியானந்தன், Scarborough


- ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
- அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
- வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**(416) 267-0408** 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]

NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU




NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU

# நோய் நீக்கும் வர்மப்புள்ளி வைத்தியம்

## சகல நோய்களும் தீர வர்மப்புள்ளி குறிநிலை ஜீவசக்தி வாய்க்கால் நீட்டல் பயிற்சி (Energy Meridian Stretches for Cure of ALL Diseases)

*மனித உடம்பில் சக்தி ('Qi'-Energy) 14 வாய்க்கால்களில் சதா ஓடியவண்ணம் இருக்கும். அப்படி ஓடியவண்ணம் இருந்தால் உடம்பில் எது நோயும் இருக்காது. இந்த வாய்க்கால்களில் எங்காவது தடை ஏற்பட்டால் தடை ஏற்ப்பட்ட இடத்திற்கு மேற்பக்கத்தில் சக்தி கூடியும் (Energy Excess), தடை இருக்கும் இடத்திற்கு கீழ்ப்பக்கத்தில் சக்தி குறைந்தும் (Energy Deficiency) இருக்கும். இதனால் பலவித நோய்களும் தோன்றி தடை நீடிக்குமானால் நோயும் படிப்படியாக கூடும். இந்தத்தடையை நீக்கினால் சக்தி சமனப்பட்டு நோய்கள் நீங்கிவிடும் என்பது எமது மூதாதையர்களாகிய சித்தர்களும், அகத்திமாமுனிவர் போன்ற வைத்திய வல்லுனர்களும் கண்டறிந்து கையாண்ட அபூர்வ வைத்திய முறை. இதை அவர்கள் பாமர மக்கள் மத்தியில் அவர்களுக்கு போதிய அறிவாற்றல் இல்லாத காரணத்தால் கற்றுக்கொடுக்காது ஏட்டுச்சுவடிகளில் எழுதி வைத்தனர். எம் நாட்டில் அவர்களுக்கு பின் வாழ்ந்த சில சுயநல வைத்தியர்கள் தமது பரம்பரையினர்களுக்கு மட்டும் கற்பித்து வந்த காரணத்தால் அது மக்களிடையில் பிரபல்யமாகாது அழிந்து விட்டது. ஆனால் சீன தேசத்தவர் இதை மிகப்பிரபல்யமாக்கி ஜப்பான், கொறியா, பிரான்ஸ், பிரித்தானியா, அமெரிக்கா, கனடா போன்ற மேற்கத்திய நாடுகளிலும் மிக மதிக்கும் வைத்தியத்துறையாக்கி பல்வேறு நோய்களையும் எவரும் பிரமிக்கும்படி குணமாக்கச்செய்கின்றனர். இப்பெருமை சீனத்தேசத்தவரைச்சாரும். இந்த வைத்தியங்களாகிய குறிநிலை துழை (Acupuncture) ஏனைய குறி நிலை அழுத்துமுறை (Acupressure). பிரதிபிம்ம நிலைஅழுத்து (Reflexology) வைத்திய முறைகளில் கையாளப்படும் சிகிச்சை முறைகளில் இந்த வர்மப்புள்ளி களில் மென்மையான ஊசிகளை குத்தி ஊக்குவித்தல் (Stimulating) அல்லது இப்புள்ளிகளை அழுத்துவதாகும். இந்த வர்மப்புள்ளி வாய்க்கால் நீட்டல் முறைப்படி,. இந்த வாய்கால் களை நன்கு நீட்டிக்குறுக்குவதால் அவ்விடங்களில் தடைகள் ஏற்படாது. அப்படி தடைகள் ஏற்பட்டிருப்பின் அத்தடைகள் படிப்படியாக நீங்கி நோய்கள் விரைவில் குணமாகிவிடும் என்பது இந்த வர்ம ஜீவசக்தி வாய்க்கால் நீட்டு முறை (Energy Meridian Stretch) அப்பியாசமாகும். இதை தினந்தினம் பயிற்சித்தால் நோயின்றி வாழலாம். சகல நோய்களும் படிப்படியாக குணமாகிவிடும். தினந்தினம் செய்ய முடியாதவர்கள் கிழமைக்கு மூன்று நாட்களாவது செய்தால் நோயின்றி வாழ முடியும். நோய்கள் விரைவ-ில் குணமாகும். இது அனுபவத்தில் கண்ட உண்மை.*


டாக்டர். சி.வ. பரராஜசிங்கம், Ph.D
Holistic Practitioner (canada)
Nutrition & fitness (Canada)
'யோக சித்தர்' வவுனியா, இலங்கை
Tele. - 416.291.3022


*சுவாசகோசவாய்க்கால் நீட்டல் (The Lung Channel Meridian Stretch).*

*ஓரிடத்தில் நிமிர்ந்து நிற்கவும். இரண்டு கைகளையும் பின்புறமாக கோர்த்து பிடரியில் அழுத்திப்பிடிக்கவும். கைகளின் இரு பெருவிரல்களையும் பிடரியின் இருபக்கமும், காதுக்குக்கு பின் இருக்கும் புடைப்புக்களுக்கு இருபக்கமும் வைத்து அழுத்திக்கொள்ளவும். இப்போ வாயைமூடி மூக்கால் மூச்சை உள் இழுத்தபடியே காலையோ, முதுகையோ வளைக்காது பிணைத்த கைகளை பிடரியில் அழுத்தியபடியே உடம்பின் மேற்பாகத்தை வலப்புறம் இயலுமானவரை திருப்பவும். இப்படித் திரும்பும்பொழுது இடக்கால் மடியாது பாதம் மட்டும் சற்று தரையை விட்டு உயரலாம். இதன்பின் சுயநிலைக்கு வரவும். இப்படி வரும்போது மூக்கால் மூச்சை வெளி விடலாம். இப்படி நின்று பின் மீண்டும் மூக்கால் மூச்சை நன்கு உள் இழுத்தபடி இடப்பக்கம் திரும்பவும். திரும்பும் பொழுது வலது கால் மடியாது பாதம் மட்டும் சற்று தரையைவிட்டு உயரலாம். அப்படித் திரும்பிப்பின் சுயநிலைக்கு வந்து நிமிர்ந்து நிற்கவும். இப்படி மூன்று அல்லது ஆறுமுறை செய்யவும்.*

*இதனால் இந்த வாய்க்காலில் ஏற்பட்ட தடை நீங்கும். சுவாசப்பை பலப்படும், இதன் சோடிவாய்க்காலாகிய பெருங்குடல் அவ்வாய்க்கால்கள் செல்லும் பாதையின் இருமருங்கும் உள்ள உறுப்புக்களில் ஏற்பட்ட நோய்கள், சுவாசப்பை நோய்கள் (Lung Diseases), பெருங்குடல் நோய்கள் (Colonic Diseases) விரைவில் குணமாகும். இந்த உறுப்புக்களும் புத்துயிர்பெற்று நல்ல நிலையில் இருக்கும்.*




தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர் **ரவி நடராஜா**

*தற்பொழுது Franklin Hall LLP Barristers & Solicitors ஆகியோர் இணைந்து சேவையாற்றுகிறார்கள்.*

• வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும், உரிய இழப்பீடுகள், மற்றைய இழப்பீடுகள், விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள் Accident & Traffic Ticket

(17 Years Insurance Claims Experience)



416.245.6555 - 2095 Weston Road, Suite 203, Toronto, ON
416.755.2801 - 2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough, ON
905.455.8591 - 83 Kennedy Rd. South, #1818, Brampton ON

**SAMI DAYCARE**



* மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்குச் சிறந்த பராமரிப்பு
* ECE தகுதி பெற்ற நடத்துனர் * TAX RECEIPT வழங்கப்படும்
* காலை 7:00 மணி - மாலை 6:00 மணி வரை * மாலை 6:00 மணி - மாலை 10:00 மணி வரை * சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்

1 Hr. - $3.00
Day - $15.00
Week - $75.00

Summer Daycare - $60 with food & Everything

தினசரி நடவடிக்கைகள் * உள்ளக, வெளியக, விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா.

#7 Birchcrest Court (Finch / Warden)   Mrs.S.J. சௌந்தரநாயகம்   416-502-3033

**MOHAN HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC**

mhc

• கழுத்து, முதுகு நோவு  • வாகன விபத்து  • மன அழுத்தம்  • விளையாட்டுக் காயங்கள்  • தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM / NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537 / 416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

**NTE AUTO**
**New Trade Engineering Inc.**



ஸ்காபரோவில் 15வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair

SIVABALAN

416.750.1573

**என். ரி. இ. ஓட்டோ இங்க்**

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH.

# Oscar உம் நாற்பது திருடர்களும்

இவ் வருட விருது விழாவில் சிறந்த துணை நடிகருக்கான விருதை Syriana படத்துக்காக பெற்று George Clooney பேசும் பொழுது "Civil Rishts பிரச்சினையை மறந்திருக்கும் பொழுது, Hollywood Civil Rights ஐப்பற்றி பேசும், Aids மறைந்த பின்னர் எய்ட்ஸ் ஐப் பற்றிப் பேசுவோம். This academy, this group people game Hattie McDaniel an Oscar in 1939 when blacks were still sitting in the backs of theaters" என்று குறிப்பிட்டார். அவரது பேச்சின் நியாயத்தை நாம் அறிவோம்.

வழமைபோல், இம்முறையும் நடைமுறை அரசியல் பிரச்சினைகள் பற்றிய படங்களை தவிர்த்து, நிறபேதம் பற்றிய நழுவிப்போகும் கருவைக் கொண்ட Crash என்ற படம் சிறந்த படமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பல மோசமான படங்கள் சிறந்த படத்துக்கான Oscar விருதை பெற்றுள்ளன. "Empire" சினிமா சஞ்சிகையின் கருத்தின்படி பின்வரும் பத்து படங்கள் இப்பட்டியலில் முன் நிற்கின்றன.

1. BRAVEHEART (1995)
2. A BEAUTIFUL MIND (2001)
3. The Greatest Show on Earth (1952)
4. Ordinary People (1980)
5. Forrest Gump (1994)
6. Terms of Endearment (1983)
7. Around the Word in 80 Days (1956)
8. Cavalcade (1933)
9. Rocky (1976)
10. How Green was My Valley (1941)

இப்பட்டியலுடன் நாம் முரண்படலாம். ஆனாலும் Crash இப்பட்டியலில் சேரக்கூடிய மிக மோசமான படமல்ல. Oscar இன் சிறந்த படவிருதைபெற்ற விமர்சகர்களால் சிறந்த படம் என கருதப்படும் படங்களுக்கும், Oscar இன் சிறந்த பட விருது பெற்ற மோசமான படங்களுக்கும் உள்ள ஒற்றுமை பணம். Oscar இன் மோசமான படங்கள் அனைத்தும், சராசரி அவ்வாறான படங்களுக்குரிய Budget ஐ விட அதிகமான பணம் செலவிடப்பட்டுள்ளது. ஆனால் சிறந்த படங்கள் சராசரி Budget ஐ விட மிகக் குறைவான செலவில் தயாரிக்கப்பட்டுள்ளன.

| மோசமான படங்கள் | Actual | | Ave. Budget | | Percentage Different | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1995 | Barave Heart | | 89.9 | 45.5 | 97.6% | | |
| 2001 | A Beautiful Mind | | | 64.5 | 51.3 | 25.7% | |
| 1994 | Forrst Gump | | 68.2 | 44.0 | 55.0% | | |
| சிறந்தபடங்கள் | | | | | | | |
| 1986 | Platoon | 14.0 | 30.4 | 53.9% | | | |
| 1993 | Schindlers List | | 29.0 | 39.4 | 26.4% | | |
| 1990 | Dances with Wolves | | | 16.6 | 39.0 | 57.4% | |
| 1991 | The Silence of Lambs | | | | 27.7 | 36.5 | 24.1% |
| விதி விலக்காக | | | | | | | |
| Titanic | | $280.0 | 63.3 | 342.3% | | | |

Titanic க்கும் மோசமான படங்கள் வரிசையில் சேர்க்கப்படவேண்டியதே.


Broke back Mountain ஒரு பால் உறவுவை (ஆண்) மையமாகக் கொண்டது. வர்த்தக ரீதியாக இது பெரு வெற்றி பெற்றுள்ளது. பெரும்பாலான அமெரிக்கர்கள் இப்படத்தை பார்த்துள்ளார்கள். ஆனால் இப்படம் அதன் கரு, அமெரிக்க அரசுக்கு எதிரான கருவைக் கொண்டுள்ளது. அதாவது அமெரிக்க அதிபரின் கருத்துக்கு எதிரான படம்.

Oscar ம் 5008 (திருடர்களும்) உறுப்பினர்களும் மீண்டும் ஒருதடவை புதிய ஜனநாயகத்தை புஷ்ஷின் நாமத்தை ஜெபித்து, காப்பாற்றியுள்ளார்கள். அபூர்வ விளக்கு இப்பொழுது புஷ்ஷின் கைகளில். ஈராக்கிலிருந்து விடுமுறையை களிக்க ஒஸ்கார் வந்து மீண்டும் ஈரானை நோக்கி பயணிக்கிறது.

சுமார் ஒரு மில்லியன் டொலர் செலவில் தயாரிக்கப்பட்ட Paradise Now தற்கொலை போராளியைப் பற்றியது. நிராகரிக்கப்பட்டுவிட்டது. இது ஒரு பாலஸ்தீனியப் படம். சிறந்த வெளிநாட்டுப் படத்துக்கு பரித்துரைக்கப்பட்ட மற்றைய படங்கள்: Sophie Scholl 'The final days' நாசி வதை முகாமில் வதைபடும் Sophie Scholl என்ற பெண்மணியின் கதை.

Joyeux Noel - முதலாம் உலகப்போரின் போது, நத்தார் தினத்துக்கு முதல்நாள் கொண்டாட்டத்தின் போது French, German, Scottish வீரர்களுக்கு இடையில் ஏற்படும் கைகலப்பு கருவாகக் கொண்டது.

Don't Tell (ITALY) - நடிகையின் பழைய, தனது



குழப்பான குடும்பத்தை கருவாகக் கொண்டது. சிறந்த விருதைப் பெற்ற TSOTSI- Gang ஒன்றில் உள்ள ரவுடி காதல் வயப்படுவது தான் கதை. தமிழ்ப்படக்கதை போல் தெரிகிறது. ஆம், ஆனால் எடுக்கப்பட்டுள்ள முறை வித்தியாசமானது.

**ரதன்**

சிறந்த படத்தைப்போல், Foreign Language படமும் அரசியல் தவிர்க்கப்பட்டுள்ளது. இவ்விருதைப் பெற்ற பெரும்பாலான படங்கள் ஐரோப்பாவிலிருந்து வெளியானவை. France (36), Italy (28), Spaion (19), Sweden (14), Germany (13) வழமைபோல் ஆறுதல் பரிசாக Broke back Mountain இயக்குனர் சிறந்த இயக்குனராக தெரிவு செய்யப்பட்டார். Good Night Good Luck படஇயக்குனர் Michael Clooney சிறந்த துணைநடிகராக தெரிவு செய்யப்பட்டார். ஊறுகாய் வியாபாரத்தில் புஷ்ஷின் Oscar ஐ எவராலுமே வெல்ல முடியாது. Munich, Good Night, Good Luck இவை எந்த விருதையுமே பெற்றுக்கொள்ளவில்லை. வழமைக்கு மாறாக Steven Spielberg ஐ ஒஸ்கார் கைகழுவி

*தொடர்ச்சி 19ஆம் பக்கம்*


## வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள். முற்றாக ஒழிக்க அழையுங்கள்




Kanthan: 416.291.3997





- No Spraying
- No Smelling
- No Moving

## ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளிற்கு: 416-286-2880

## JENNY AUTO SALES INC.



(Kennedy & Steeles)

| | | | |
|---|---|---|---|
| 2002 | Honda Civic 4D | 122K | 10,500.00 |
| 2000 | Dodge Caravan | 168K | 4,995.00 |
| 2001 | Toyota Corolla | 70k | 7,995.00 |
| 2000 | Honda Accord Green | - | 9,900.00 |
| 1998 | Toyota Sienna | 170k | 7,900.00 |
| 1995 | Honda Accord EX | - | 4,995.00 |
| 2004 | Toyota Corolla | 50K | 11,500.00 |
| 1997 | Honda Civic 5 Spd. | | 4,995.00 |
| 1998 | GM Savana, Cargo | - | 4,995.00 |
| 2000 | Dodge Caravan | 160K | 5,200.00 |
| 2001 | Honda Civic 2D | 100k | 8,500.00 |
| 2001 | Honda Civic beige 4D | 85K | 8,995.00 |
| 1999 | Honda Civic Silver | 72K | 7,900.00 |
| 2000 | Toyota Corolla | 110k | 8,500.00 |
| 1997 | Dodge Caravan | 145K | 3,995.00 |

இன்னும் பல நல்ல வாகனங்கள் எம்மிடம் உள்ளன. We do vehicle appraisals

Anton: (416) 575-5055 Rajah: (905) 470-0048

Office: 4440 Steeles Ave., East, Markham, ON, L3R 0L4

## APARTMENTS FOR RENT

**குளிர்காலத்தில்!**

**உங்களையும் பிள்ளைகளையும் பாதுகாப்பாக வைத்திருக்க...**

***We have nice newly renovated Apartments in a well heated Apartment Building in Scarborough with a Tamil convenience store inside 1 , 2 & 3 bedroom Apartments.***

**Two months free rent***

**Close to Tamil stores, Restaurants, TTC, Go Train & Schools, etc.**

** For new tenants for a limited time*

**Pl. Call: 416.264.2818**

# என்றும் நிலையானது

## ஓடும் நீர் உறைவதில்லை 08

உலகில் எதுவும் நிலையற்றது என்று தான் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். வாழ்க்கை நிலையற்றது. உடல் நிலையற்றது. உடைமைகள் நிலையற்றன. உணர்வுகள் நிலையற்றன. ஏன் உறவுகள் கூட நிலையற்றன. அப்படியாயின் நிலையானது எது? ஒன்றை நிலையற்ற தாக்குவது தான் அந்த நிலையானது. என்ன, குழப்பமாக இருக்கிறதா? ஒன்றை நிலையற்ற தாக்கும் அந்த நிலையானது தான் மாற்றம் Change. உலகின் இயக்கத்திற்கு அடிப்படையாக அமைந்ததே இந்த மாற்றம் தான்.

நமது வாழ்வின் தார்ப்பரியமே மாற்றத்தின் அடிப்படையில் அமைந்ததுதான். உடலியல், உளவியல் மாற்றங்களின் முன்னோக்கிய ஒருவழிப்பாதை (One way Street) தான் வாழ்க்கை. பின்னோக்கி ஒரு கணநேரம் கூட நாம் நகரமுடியாது. ஏனெனில் மாற்றங்கள் முன்னோக்கி நமது வாழ்வைத் தள்ளிக் கொண்டு செல்பவை. இந்த மாற்றங்களுடன் நாம் போராடுவது அர்த்தமற்றது. அறுபது வயதுக்கிழவி இருபது வயதுக்குமரியாக மாறவேண்டும் என்று எண்ணுவது பொருத்தமற்றது. உடலியல், உளவியல் ரீதியில் சாத்தியமற்றது. நம்மில் பெரும்பாலானவர்கள் இந்த உண்மையை உணர்ந்து கொள்வதில்லை. மாற்றங்களுக்கு ஏற்ப நாமும் மாற்றமடைந்து அவற்றை நமக்குச் சாதகமாக்கி வாழ்வை வளமாக்கி வாழ முயற்சிக்காதவர்கள் உண்மையில் துரதிஷ்டமானவர்கள். மிகவும் வேடிக்கையான விடயம் என்னவென்றால் ஏற்பட்டுள்ள மாற்றத்தைப் பூரணமாக அறிந்திருந்தும் அதற்கேற்ப தம்மை மாற்றிக் கொள்ள விரும்பாமல் அடம்பிடிப்பார்கள். வெல்லமுடியாத ஒன்றுடன் போரிடுவார்கள். தோல்வியின் உச்சத்தை அடைந்ததும் அலறுவார்கள். உலகத்தையே குறை கூறுவார்கள். இவர்கள் சுடலை ஞானிகள். தமக்கும் பயன்படாதவர்கள். மற்றவர்களுக்கும் உதவாதவர்கள். மரம், செடி, கொடிகள் கூட காலநிலைக்கு ஏற்றவாறு தம்மை மாற்றிக் கொள்வதன் மூலமே தமது வாழ்காலத்தை நீடித்துச் செல்கின்றன. ஆனால் எத்தனை மனித ஜீவிகள் இந்த உண்மையை உணர்ந்துள்ளார்கள்? இங்கு வாழும் தென்கிழக்காசியாவில் இளவயதில் அதிக அளவுக்கு நோய்வாய்படுபவர்கள் யார்? ஏன் அறியாமையா அல்லது அக்கறையின்மையா?

இன்னொரு சிலர் மாற்றங்களின் தாக்கங்களுக்குள்ளாகியும் கூட அதை ஏற்றுக்கொள்வது தங்களைத் தாழ்மைப்படுத்தி விடும் என்று அஞ்சுபவர்கள். சிங்கத்தின் கால்கள் வயது முதிர்ச்சியால் தளர்வடைந்தாலும் சீற்றத்தைக் குறைக்காதவர்கள். மிகவும் வேடிக்கையானவர்கள். ஒரு சிறு தகராறு ஏற்பட்டதும், “நான் முந்தின ஆளாக இருந்தால் கதை வேறு” என்று சீறுவார்கள். இந்த முந்தின ஆள் யார்? எத்தனை கணப்பொழுதுகளுக்கு முன்பு? ஒவ்வொரு கணப்பொழுதும் மாற்றத்தின் சுவடுகள் அல்லவா, எப்படி முந்தின ஆளாக மாற முடியும்? உடலியல் ரீதியில் அகன்ற நெஞ்சும் உருண்ட தோள்களுமாக இருந்தவர் ஊதிப் பெருத்த தொந்தியைச் சுமக்க முடியாமல் தள்ளாடும் கால்களுடன் கர்ச்சிப்பது எதற்காக? மாற்றங்களின் தாக்கங்கள் நமது மன நிலையிலும் மாற்றங்களைக் கொண்டுவருவதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். சீற்றங்களை விடுத்து சிந்தனைக்கு வழிவகுக்க வேண்டும்.

மாற்றங்களின் அடிப்படை அம்சம் என்னவென்றால் அவை நம்மை முதிர்ச்சியை நோக்கி நகர்த்துவது தான். உடலும், உள்ளமும் முதிர்ச்சியடைவது தான் அதன் எதிர்பார்ப்பு. வேகம் குறைவதும் விவேகம் கூடுவதும் இந்த மாற்றங்களின் விளைவு. இருபது வயது இளைஞனாக இருந்த போது இருபத்தைந்து மீற்றர் தூரத்தை கைகளால் நடந்த வேகத்தில் இப்போது கால்களால் நடக்க முடியவில்லை. ஆனால் விவேகம் இருநூறு மடங்குக்கு மேல் அதிகரித்துவிட்டது. இதுதான் மாற்றத்தின் பிரதிபலிப்பு.

ஒரு குழந்தை பிறந்தவுடன் சாதனையாளனாகியதாகச் சரித்திரத்தில் இல்லை. வாழ்வியல் மாற்றங்களுக்குள் மூழ்கி அதன் மூலம் கற்றுக்கொண்ட விடயங்களை வேகமாகவும் விவேகமாகவும் கையாண்டவர்கள் சரித்திரம் படைக்கிறார்கள். மாற்றங்கள் ஒருவரது வாழ்வில் நேரடியான தாக்கங்களையும், மறைமுகமான தாக்கங்களையும் உண்டுபண்ணுகிறன. சூழ்நிலைக்கு ஏற்றவாறு, மாற்றங்களுக்கு ஏற்றவாறு நம்மை மாற்றிக் கொள்வது வாழ்வியலின் அடிப்படை வாசகர்களே!

KG Master
416.725.5112

மாற்றங்கள் நிலையானவையாக இருப்பதாலும், அவற்றைப் புறக்கணித்து அல்லது எதிர்த்து நமது வாழ்வியலை நெறிப்படுத்துவது சாத்தியமற்றதாக உள்ளதாலும் மாற்றங்களுக கேற்ப நமது வாழ்வியலை மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஒவ்வொருவருக்கும் உண்டு. இந்த உண்மையை உணராதவர்கள்தான் வாழ்க்கையில் அளவுக்கதிகமான பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியவர்களாகின்றனர். இயற்கையின் மாற்றங்கள் ஒருபுறமும் சமூக, கலாசார, பொருளாதார மாற்றங்கள் மறுபுறமுமாக நாம் எதிர்கொள்ளும் மாற்றங்கள் எண்ணிலடங்காதவை. இங்கே இயற்கையின் மாற்றங்கள் மனித ஆளுமைக்கு அப்பாற்பட்டவையாக இருப்பதால் விரும்பியோ, விரும்பாமலோ அவற்றை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் சமூக, கலாசார, பொருளதார மாற்றங்கள் எம்மால் கையாளப்படக்கூடியவை. இந்த மாற்றங்களை எவ்வளவு தூரம் சிறப்பாகக் கையாளுகின்றோம் என்பதே நேர்த்தியான வாழ்க்கையின் அடித்தளமாக அமைகின்றது.

மாற்றத்தின் வேகமும் அதற்கேற்ப நாம் மாறுகின்ற வேகமும் ஒரு சமநிலையில் இருப்பது அவசியம். சில சந்தர்ப்பங்களில் மாற்றத்தின் வேகம் நமது வேகத்தை விட அதிகமானதாக இருந்தால் நாம் பின்னோக்கித் தள்ளப்பட்டு விடுவோம். உதாரணமாக, பொருளாதார மாற்றத்தின் விளைவாக வரி அதிகரிப்பு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்றவற்றால் ஏற்படக்கூடிய தாக்கங்களுக் கேற்ப நமது வருமானத்தை அதிகரிப்பதிலோ அல்லது கட்டுப்படுத்தக் கூடிய செலவுகளை கட்டுப்படுத்தாமல் விடுவதிலோ காலதாமதம் ஏற்படுமாயின் பொருளாதாரப் பின்னடைவு தவிர்க்க முடியாததாகிவிடும். இவ்வாறு மாற்றங்களுக்கேற்ப தம்மை மாற்றியமைக்க முடியாதவர்கள் மற்றவர்களது முன்னேற்றத்தைக் கண்டு பொறாமைப்படுபவர்களாகக் காணப்படுவர். தம்மால் இயலாததை மற்றவர்கள் செய்தால் அதை மனத்தளவில் ஏற்றுக்கொள்ள மறுப்பார்கள்.

வேறுசிலர் மாற்றத்தின் வேகத்தைவிட பலமடங்கு வேகமாகத் தம்மை மாற்றிக் கொள்ள முயற்சிப்பர். இதுவும் ஆபத்தானது. ஏனெனில் எதிர்வரும் மாற்றங்களின் உண்மையான இயல்பு நிலை ஒருபோதும் முன்கூட்டியே உணரப்படமுடியாதது அல்லது தவறான வெளிப்படுத்தலைக் கொடுக்கும்.



தொடர்ச்சி 22ம் பக்கம்

SAFETY TRUCKS

Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z




In Classes
- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (12 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

19 Years Canadian
Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

905-793-9546 / 416-616-5979

4 Wilkinson Road, 2nd floor, Brampton, ON L6T 4M3

Educate your children to be original as well as competent to face the future with zest and self-confidence

பெரும்பாலான குழந்தைகள் பாடசாலைகளில் அனுமதிக்கப்படுகிறார்கள்
ஆனால் ஒரு சில குழந்தைகளே கற்கிறார்கள்.
ஏனெனில்...

**கல்வி = அறிவுத்திறன் + பண்புடைமை**

*Many children are schooled but few are educated.*
*Because...*

Education = Intelligence + Character

Training Classes
for children 7 to 16 years old

***Memory Power***
***Concentration***
***Listening Skill***
***Reading Skill***
***Goal Setting***
***Team Work***
***Performance***
***Presentation Skill***
***Time Management***





***Self-Confidence***
***Self-Image***
***Self-Discipline***
***Patience***
***Obedience***
***Positive Thinking***
***Winning Attitude***
***Taking Responsibility***
***Leadership Qualities***

KG Master
(Over 25 years of experience)
(416) 291-2611 or (416) 725-5112

**Performance = Knowledge X Believe x Action**

# மற்றவர்களில் குற்றங்குறை காண்பது

நாம் மற்றவர்களின் குற்றங் குறைகளிற்காக அவர்களைக் கண்டித்துத் திருத்த முயலும்போது, அவர்களும் அதேமாதிரியான பிழைகளைத்தான் எங்களிடமும் காண்பார்கள் என்பதை இதயபூர்வமான விழிப்புணர்வுடன் இன்று ஏற்றுக்கொள்கிறேன்.

வழக்கறிஞர் பட்டப்படிப்பை முடித்த எனது உறவினர் ஒருவர் செய்த சிறிய தவறிற்காக, தொலைபேசியில் நான் அவரைக் கண்டித்தபோது, கோபத்துடன், அவர், “ஓம்” நான் உங்களைப் போல இல்லை. எனக்கு விருப்பமில்லாத இடங்களிற்குப் போகமாட்டேன். இந்த வயதிலேயும் வீட்டில் மற்றவர்களைப் போல இருக்காமல் நீங்கள் இந்தக் குளிரெல்லாம் தனியாய் பஸ்ஸில் திரிகிறீர்களே என்று எல்லோரும் உங்களைப் பற்றி கூடாமல் கதைக்கிறார்களே, உங்களுக்குத் தெரியுமா? என்று சொன்னது எனக்குக் கடுமையாக உறைத்தது. ஆம்! நானும் இனி வீட்டிலிருந்து கொண்டு எழுதுவதைமட்டும் தொடர்ந்து செய்வதுதான் என இப்போ யோசிக்கிறேன்!.

ஆம்! நீங்கள் மற்றவர்களின் குற்றங்குறைகளைச் சுட்டிக்காட்டுவது, அவர்களின் கோபத்தைக் கிளப்பும். அவர்களது தாழ்வுமனப்பான்மை, அவநம்பிக்கை, பயம் போன்ற எதிர்மறை உணர்வுகளை நீங்கள் தாக்கி அவர்களின் மனதைப் புண்படுத்தினால் அவர்கள் உங்களுக்குப் பதிலடி கொடுக்கத்தான் செய்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அவர்கள் உங்கள் உண்மையான குற்றங்குறைகளைச் சுட்டிக்காட்டத் தவறமாட்டார்கள். உங்கள் நம்பகத்தன்மையை நீங்களே சந்தேகித்துத் தளர்ந்து தள்ளாட இது வழி வகுத்துவிடும்.

ஆம் அன்பானவர்களே! உங்கள் ஆளுமையில் ஏதோ சரியில்லை என நீங்கள் நம்புவது, உங்கள் உள்ளார்ந்த சக்தியை உலுக்கித் தளர்த்திக் கீழே குப்புறத் தள்ளி விடும். நான் நல்லவனல்ல, பலதவறுகளைச் செய்தவன், குற்றவாளி என நீ நம்புவது, உனது வாழ்வின் ஒவ்வொரு சவாலையும் ஒரு பெரிய போராட்டமாக்கி விடும். உன்னைப் பற்றிய ஒவ்வொரு விமர்சனமும் உன்னை உடைத்தெறிந்துவிடும். உனது குணாம்சங்களையும் மற்றவர்களின்



குணாம்சங்களையும் வேறுபடுத்திப் பார்க்க உன்னால் முடியாது போய்விடும். இது நல்ல விடயமல்ல.

நாம் எத்தனையோ விடயங்களை இன்னும் சிறப்பாகச் செய்யமுடியும் என்பது எமக்குத் தெரியும். ஆனால் சிறப்பாகச் செய்யவில்லை என்பது, நாம் செய்தது பிழை என ஒருபோதும் நிரூபிக்காது. உண்மையில் உன்மேல் ஒரு குற்றமும் இல்லை. மற்றொருவர் கோபமாயிருக்கும்போது உனக்கெதிராக வரும் அவரது பதிலடியினால் உன்னையே நீ சந்தேகித்துக் குழம்ப வேண்டியதில்லை. உனது விழிப்புணர்வை நீ ஒருபோதும் கைவிடப்படாது என்பதையே இந்தப் பதிலடி உனக்கு எடுத்துக்காட்டுகின்றது.


ஒவ்வொருவரிடமும் குற்றங்குறைகள் நிச்சயம் நிறைய உண்டு. உன்னில் சில குற்றங்குறைகள் இருப்பதனால், உன் சூழலிலுள்ளவர்களின் குறைபாடுகளை நீ காணக்கூடாது என்று சட்டம் ஒன்றுமில்லை. உன் இதயத்தில் சரியாகப் படுவதைச் சொல்லவும் செய்யவும் உனக்கு எப்போதும் உரிமை, சுதந்திரம் உண்டு என்பதை மறக்காதே.

உனது குறைபாடுகள் என நீ நம்புபவை, இதுவரை உன் சூழலிலுள்ளவர்களின் குற்றங்குறைகளை நீ சுட்டிக்காட்டித் திருத்துவதை தடுத்திருக்கலாமா இப்படிச் செய்வது பிழை எனும் உனது தப்பபிப்பிராயம், மற்றவர்கள் தவறுகளைச் சுட்டிக்காட்டித் திருத்தாமல் இனிமேல் மௌன-மாக இருக்கக்கூடாது என்பதை விழிப்புணர்வுடன் இன்று புரிந்துகொள்.

எனக்கு எது நல்லதாகப் படுகிறதோ, அதை இன்றுமுதல், தன்னம்பிக்கையுடன் செயற்படுத்துவேன் என உறுதிபூண்கிறேன்.

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் (73)

மேலதிக தகவல்களிற்கு
அழையுங்கள் 905-270-1214
லலிதா புரூடி



## யோகா சோதிடம்



- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- பலன் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

416-299-8361



## S M I L E

- BUSINESS PLANS
- CORPORATE TAX PREPARATION OF FILING
- PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
- ACCOUNTING, TAXATION
- SYSTEMS - POINT OF SALES

RK CONSULTANTS

PL. CALL: 905.887.7457 / 905.751.7537

24 hrs, 365 days

## இன்சுவை TAKE-OUT — insuvai TAKE-OUT

நீரூறும் நாவில்...
நினைவூரும் நெஞ்சில்

mouth watering tastes...
ever lingering memories


Open Kitchen முறையில் உங்கள் கண்ணெதிரே எங்கள் கைவண்ணம்

இயலுமான வரையில் எண்ணெய்க் கலப்பற்று சமைப்பதில் தனிக் கவனம்

ஒன்று கூடல்கள், விருந்துபசாரங்கள், சிறுவைபவங்களுக்கான ஓர்டர்களும் ஏற்றுக் கொள்ளப்படும்

சுறாப்பிட்டு
ஒடக்கரைத் தோசை
Roasted Chicken கொத்து
இறால்ச்சம்பல்
குழந்தைகளுக்கான
Rainbow Rice
Yummy கொத்து
இப்படி வழமைகளும், புதியவைகளுமான உணவுப் பட்டியல்

நிறைந்த தரிப்பிட வசதிகளுடன் கூடிய புதிய
Milliken Crossing Plaza வில் ஒரு புதிய உணவகம்




5651 Steeles Ave. E. # 6
Scarborough ON. M1V 5P6
416.INSUVAI (416.467.8824)
www.insuvai.ca

திறமான சேவை! தரமான சுவை!!

## இயக்குநர் பாலா படத்துக்கு எழுத்தாளர் ஜெயமோகன் வசனம் எழுதுகிறார்.



இந்த வருடம் ஜனவரி முதல் தேதியிலிருந்து பிப்ரவரி கடைசி வரை தமிழில் வெளிவந்துள்ள மொத்தத் திரைப்படங்களின் எண்ணிக்கை இருபத்துநான்கு. இந்த இருபத்து நான்கில் போட்ட முதலீடு திரும்பக் கிடைத்த படங்கள் என்று இரண்டைத்தான் கோடம் பாக்கத்துக்காரர்கள் குறிப்பிடுகிறார்கள். அந்த இரண்டு படங்கள்: ஒன்று 'பரமசிவன்' இன்னொன்று 'சரவணன்'.

இதில் 'பரமசிவன்' நடிகர் அஜித்துக்கு மறுபிரவேசம் என்பதால் அதிகமாக எதிர் பார்க்கப்பட்ட படம் என்பது குறிப்பிடத்தக்கது. 'பரமசிவன்' அஜித்தை ஏமாற்றவுமில்லை. அஜித்துக்கு இப்படம் ஓரளவுக்கு நல்ல பெயரை வாங்கிக் கொடுத்துள்ளது. இந்த வெற்றி தந்த உற்சாகத்தில் உடனே அடுத்து அஜித் நடித்த 'காட்பாதர்' படத்தை வெளியிட இருக்கிறார்கள். 'காட்பாதர்' பிரமாதமாக வந்துள்ளது. 'இது நிச்சயம் வெற்றிபெறும்' என்பது இந்தப் படத்தில் வேலை செய்துள்ளவர்களின் கணிப்பு. படம் பார்த்த கோடம்பாக்கம் தொழில்நுட்பக் கலைஞர்கள் கணிப்பும் இதுதான். இப்படத்தில் அஜித் இரட்டை வேடத்தில் நடித்திருக்கிறார். இயக்கம் கே. எஸ். ரவிக்குமார், ஒளிப்பதிவு பி.சி. சிறிராம்.

அடுத்த அஜித் படமான 'திருப்பதி'யும் முடியும் தருவாயில் உள்ளது. அதற்கு அடுத்ததாக அஜித் இயக்கநர் பாலா இயக்கத்தில் உருவாகும் 'நான் கடவுள்' படத்தில் நடிக்கிறார். அஜித்துக்கு இப்படம் ஒரு திருப்புமுனையாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏப்ரல் முதல் வாரத்தில் இப்படத்தின் படப்பிடிப்புகள் தொடங்க இருக்கின்றன. இப்படத்துக்கு எழுத்தாளர் ஜெயமோகன் வசனம் எழுதுகிறார். ஜெயமோகன் வசனத்தில் வெளிவந்த மலையாள இயக்குநர் லோகிததாஸின் 'கஸ்தூரிமான்' சரியாகப் போகாததால் ஜெயமோகனும் இப்படத்தை ஆவலுடன் எதிர்பார்த்துள்ளார். திரையுலகப் பிதாமகனும் இலக்கிய தலைமகனும் சேர்ந்து ஒரு கலைப்படைப்பைத் தருவார்களா?

பொறுத்திருந்து பார்ப்போம்.

## இயக்குநர் ஷங்கர் தயாரிக்கும் 'வெயில்'.



'காதல்' திரைப்படத்தின் வெற்றிக்குப் பிறகு இயக்குநர் ஷங்கர் திரைப்பட தயாரிப்பில் அதிக கவனம் செலுத்தி வருகிறார். 'ஒரு வருடத்துக்கு ஐந்து திரைப்படங்கள் தயாரிக்க திட்டமிட்டுள்ளேன். 'காதல்' மாதிரி வித்தியாசமான நல்ல திரைக்கதைகள் கிடைக்க வேண்டும்' என்று சமீபத்தில் காதல் திரைக்கதை புத்தக வெளியீட்டு விழாவில் ஷங்கர் குறிப்பிட்டார். இப்போது ஷங்கர், வஸந்தபாலன் இயக்கத்தில் 'வெயில்' என்ற படத்தை தயாரித்து வருகிறார். இதில் 'காதல்' கதாநாயகன் பரத் தான் கதாநாயகனாக நடிக்கிறார். கூத்துப்பட்டறை பசுபதியும் இப்படத்தில் ஒரு முக்கிய பாத்திரத்தில் நடிக்கிறார். 'இப்படம் வெளிவரும் போது, நிச்சயம் எனது பாத்திரம் மிகவும் பேசப்படும். 'தூள்', 'விருமாண்டி' படங்களுக்குப் பிறகு நடிப்புத் திறனை வெளிப்படுத்த எனக்கு இப்படத்தில் நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது' என்றார் பசுபதி நம்மிடம். தமிழ்நாட்டில் வெயில் அதிகம் அடிக்கும் பகுதிகளில் ஒன்றான விருதுநகர் பகுதியில் இப்படத்தின் படப்பிடிப்பு தற்போது நடைபெற்று வருகிறது. படம் மே மாதம் வெளியாகும் என்று சொல்கிறார்கள். மே மாதம் தமிழகத்தில் வெயில் உச்சத்தில் இருக்கும் காலம் என்பது குறிப்பிடத்தக்கது.

நடிகர் பசுபதி மட்டுமல்லாமல் இன்னொருவரும் இப்படத்தைதான் அதிகம்

தொடர்ச்சி 19ஆம் பக்கம்




# ONTARIO EMPLOYMENT TRAINING

## Position: Medical Administrators

**This dynamic role, you will provide secretarial and administrative support to the Medical Director, Health Care Professionals and Administration Management.**

### *Eligible Candidates:*

- *Residence of Ontario under the ages of 29*
- *Possession of O.S.S.D*
- *No experience necessary*
- *Must be fluent in English*
- *Proficiency in Microsoft Office programs*
- *Must be available between the hours of 11 am - 7pm, Monday to Friday*
- *Keyboard speed of at least 50 WPM*
- *Must be able to communicate in Tamil Language*
- *4 positions available in the GTA*
- *Training provided with pay of $10.00 - $15.00/hr.*

**Fax resumes by March 30, 2006**

We thank all applicants for their interest however; only those selected for an interview will be contacted.

**Human Resource:**

**Fax:** 416.292-0677 Email: opportunity_medical@yahoo.ca

143


நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



ஆட்டிலறி அன்னம்மாவின் முகம் விசாரணைக்குழுவின் முன்னால் நிற்கும் சதாம் குசைனின் முகம் போல எள்ளும் கொள்ளும் வெடித்தது.




ஆட்டிலறி அன்னம்மாவும் கொள்ளு தின்னாத குதிரை போல தலையை தொங்கப் போட்டுக் கொண்டிருந்தா.

உலகர் தியாகராஜபாகவதரின் மன்மத லீலையை வென்றார் உண்டோ பாடலைக் போட்டு மெதுவாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.







ஆனால் மன்மதராசா, மன்மதராசா பாட்டு வீட்டை அதிர வைத்தது. பிறிம்லி மீனாவின் மதனும் ரூபனும் ரூபியும் DVD யில் கலக்கல் பாட்டுக்களை கேட்டுக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு பாட்டும் ஒருவரி இரண்டுவரிதான். உலகர் ஓராவது பாட்டு முடிந்து அடுத்த பழையபாடல் தியாகராஜபாகவதரின் அன்னையும், தந்தையும் நீயே பாடல் கேட்கும் போது டிவிடியில் சத்தியராஜின் உயர்ந்த மகன் நடித்த படத்தில் அப்பா செல்லம்மா அம்மா செல்லம்மா பூட்டிய வீட்டுக்குள்ளும் வெளியே கேட்டது. மார்ச் பிறேக் நேரத்தில் வீட்டிலுள்ள ரெலிவிசன் பிள்ளைகளின் வசம். ஒரு வீடுகளிலும் அழுகையுடன் கூடிய



சீரியல் தொடர் நாடகங்கள் இல்லை. சாப்பாடில்லாமலே பலர் இருப்பார்கள். என்ன கவர்ச்சியோ தொடர் நாடகங்கள் பார்க்காவிட்டால், நாள் முடியாதது போல இன்று சினிமா, கலைநிகழ்ச்சிகளுக்கு ஆக்கள் போவது குறைவு. காரணம் அழுகைத் தொடர்கள் தான். சிரித்தால் துன்பம் குறையும். அழுதால்....??? சிரிப்பதனால் மனிதன் நீண்டகாலம் உயிர் வாழ்கிறான். அப்படியானால் அழுவதனால்?



ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கண்புளோர் செல்லம்மாவும் விசிற் பண்ணாத வீடுகளே இல்லை. எல்லா வீடுகளிலும் ரெலிவிசன் றிமோட்கொன்றோல் பிள்ளைகளின் வசம்.



பிள்ளைகள் பெற்றோரின் கொன்றோலில். ஆனால் ரெலிவிசன் றிமோட் கொன்றோல் பிள்ளைகளின் கொன்றோலில்.

உலகர் வாழ்க்கையை ஓட்டுவதே பழைய நினைவில் தான். இன்றைய வாழ்க்கை நிலைப்பதற்கு ஒன்றுமேயில்லை. அன்றைய வாழ்வு, வாழ்க்கை முறைதானே, இன்றும் வாழ வைக்கிறது. பாட-சாலை வாழ்க்கை மார்ச் பிறேக், வின்ரர் பிறேக் இல்லை, பொங்கல், சிவராத்திரி, வருடப்பிறப்பு, தேர், தீர்த்தம்.

உருளைக்கிழங்கு நடுதல், உருளைக்கிழங்கு வெட்டுதல் எல்லாம் பாடசாலை பிறேகில் தானே. நினைத்த நேரம் எல்லாம் பாடசாலை பிறேக். ஆனால் இன்று ஈழத்தில் பாடசாலைகளையே பிறேக் பண்ணுகிறார்கள்.



உலகர் வீடு. ஆட்டிலறி அன்னம்மா, ராசம்மா, ரூபன், ரூபி கடந்த வாரம் வீட்டில் தவமாய் தவமிருந்து படம் பார்த்த போது எல்லார் கண்களிலும் கண்ணீர்த் துளிகள்.
**மனம் நோகும் பொழுது கண் அழுது காட்டி விடுகிறது.** ஏன் பழமை.

இன்று பிள்ளைகளை வளர்ப்பதில் நிமிடத்திற்கு நிமிடம் பயமும் விரக்தியும் அடையும் பெற்றோரிடம் என்ன இல்லை? வீடு, பணம், வாகனம் தேவைக்கு மேற்பட்ட வசதிகள். ஆனால் இல்லாதது அமைதி.

**ஒன்றும் இல்லாத போதும் எம்மை அமைதியாக வாழ்க்கை வளம் பெற செய்த பெற்றோர் படித்தவர்களா? அல்லது வசதியை பெருக்கி தொழில் நுட்பத்தில் நுழைந்து மனம் மட்டும் இறுக்கமாக வாழும் நாம் படித்தவர்களா?**

## விடுதலை! விடுதலை! விடுதலை!

March Break



ஆசிரியர்- மதன்! மார்ச் பிறேக் விடுமுறையில் நீங்கள் வீட்டில் என்ன செய்த நீங்கள்?
மதன் - அப்பாவும், அம்மாவும் வேலை. தினமும் ரேக் அவுட் சாப்பாடுதான். அதனால் மார்ச் பிறேக்குக்கு அக்காவும் நானும் அப்பாவுக்கும், அம்மாவுக்கும் சமைச்சு குடுத்தனாங்கள்.
ஆசிரியர் - ??????




ஆசிரியர் - சுதன்! மார்ச் பிறேக்கிலை வீட்டிலை பாடங்கள் படிச்சனீங்களா?
சுதன் - இல்லை ரீச்சர். அப்பாவுக்கு இங்கிலீஸ் படிக்க கெல்ப்பண்ணினான்.
ஆசிரியர் - ????

# நூல் வெளியீடு

## வேற்றுக்கிரக மனிதர்கள்

காலம் - மார்ச் 26, 2006
நேரம் - மாலை 6:00 மணி
இடம் - ஸ்காபரோ சிவிக் சென்ரர் (கேட்போர் கூடம்)

**ஆசிரியர் - கனி - விமலநாதன்**

தொடர்புகளுக்கு: 416.261.1348




# தூறல்

## வானரன்

# I: I. 6 An Ode to Lost Love

NFDC (INDIA) இன் தயாரிப்பான I.I.6 என்ற படத்தை மது அம்பாட் (Madhu Ambat) நெறியாள்கை செய்திருந்தார். இப்படத்தின் மொழி ஆங்கிலம்.



மது அம்பாட் இயக்கும் முதல் படம் இது. இவர் ஒரு சிறந்த ஒளிப்பதிவாளர். அண்மையில் வெளிவந்த June R, மற்றும் அஞ்சலி போன்ற தமிழ்ப் படங்களின் ஒளிப்பதிவாளர். அது தவிர Praying With Anger என்ற Night Shyamalan இன் படம், G.V. ஐயர் ன் பகவத் கீதை, Raj Kumar Sathoshi இன் Lajja போன்ற படங்களுடன் பிரபல இயக்குனர்கள் Girish Kasaravalli, பரதன், சேது மாதவன், பிரேம் காந்த் போன்ற பலரின் படங்களுக்கும் ஒளிப்பதிவாளராக கடமையாற்றியுள்ளார்.

மிகச் சிறந்த கலைஞரின் ஆளுமையை வெளிக்கொணர்ந்துள்ளது அவரது இப்படம். படத்தில் மூன்று கதைகள்.

முதலாவது இப்படமானது ஒரு படம் எடுக்கும் களத்தைப் பற்றியது. எடுக்கப்படும் படத்தின் இயக்குனர் Gulshan Grover, அதன் ஒளிப்பதிவாளர் (M) Atul Kulkarni. அதன் நாயகி சுஷ்மிதா. எடுக்கப்படும் படத்தின் கதை பாலியல் வல்லுறவுக்குட்படும் நாயகி தனது வாழ்வுக்கு பங்கம் விளைவித்தவர்களுக்கு எதிராக போராடுகின்றாள்.

ஒளிப்பதிவாளர் M தனது சொந்த வாழ்வில் காதலில் தோல்வியுற்று, தற்கொலை வரை சென்றவர். தனது முதல் இயக்குனராகும் படத்துக்கு தனது உண்மைக் கதையை மையமாகக் கொண்டு நாயகியான சுஷ்மிதா கதாநாயகியாகவும் நடிக்க வைக்கவும் தீர்மானிக்கின்றார்.

கதாநாயகி சுஷ்மிதா, அவரது தாய் ரத்தி அக்னோ ஹோத்திரியுடன் படம் பிடிக்கும் தளத்தில் உள்ள வீடொன்றில் தங்கி உள்ளார். இங்குதான் இயக்குனர், ஒளிப்பதிவாளரும் அதே வீட்டில் தங்கியுள்ளனர்.

கதாநாயகிக்கும், இயக்குனருக்கும் காதல் ஏற்படுகிறது. ஆனால் நாயகியின் தாய், இயக்குனருடன் உறவு கொள்கின்றாள். அதன் பின்னர் இயக்குனர் தன்னை மறந்து விடுமாறு கூறுகின்றார். காரணம் தெரிந்த பொழுது நாயகி அதிர்ச்சி உறுகிறாள். ஏற்கனவே நாயகியின் தந்தை தனது தாய் வேறொருவருடன் உறவு கொண்டது தெரிந்து தற்கொலை செய்து விடுகிறார். தந்தையின் பின்னர், இயக்குனரையே அதிகம் நேசிக்கின்றாள் நாயகி.

வாழ்வை விட கலையை நேசிக்கும் ஒளிப்பதிவாளர் M எவ்வளவு கூறியும் இயக்குனர் நாயகியை திருமணம் செய்ய மறுத்து விடுகிறார். எடுக்கப்பட்ட படத்தின் கடைசிக் காட்சி படமாக்கப்பட்ட பின்னர் தற்கொலை செய்து கொள்கிறாள் நாயகி.

எடுக்கப்படும் படத்தின் கதை, ஒளிப்பதிவாளரின் காதல், நாயகியின் சொந்த வாழ்வுக் கதை, படமாக்கப்படும் தளத்தில் ஏற்படும் காதல் கதை என்ற இடியப்பச் சிக்கலை சிறந்த திரைக்கதை அமைப்பின் மூலம் தெளிவான சீரான நடையாக மது அம்பாட் மாற்றியுள்ளார்.

படத்தில் பல சிறப்பம்சங்கள்: மது அம்பாட்டின் ஒளிப்பதிவு, நெறியாள்கை. சிறந்த நடிப்பு. குறிப்பாக ஒளிப்பதிவாளர் M ஆக வரும் அதுல் குல்குர்ணி. இவர் ஏற்கனவே 'ஹேராம்' இல் நடித்தவர். காட்சியமைப்புக்கள், படமாக்கப்படும் இடம் கர்நாடக கரையோரம். ஒரு சாதாரண படத்தைப் போலிருந்தாலும், படம் முடிந்த பின்னர் மனதில் பல கேள்விகள் எழுப்பத் தவறவில்லை.

தற்கொலைக்கும் வாழ்வுக்கும் உள்ள உறவு, இரு பாத்திரங்களில் குழப்பமடைகிறது. முதலாவது தற்கொலைக்கு முயன்று வாழ்ந்து கொண்டிருக்கும் ஒளிப்பதிவாளர், இரண்டாவது தனது கணவன் தற்கொலை செய்து கொண்ட பின்னரும் தனது மகளின் காதலனுடன் உறவு கொள்ளும் தாய், தனது மகளின் தற்கொலைக்கு காரணமாகின்றாள். மூன்றாவது படத்தில் எடுக்கப்படும் படத்தின் கதை தனது வாழ்வுக்காக துணிந்து போராடும் நாயகி. படத்தில் நாயகி ஏற்றுள்ள பாத்திரத்திற்கும் வாழ்வில் அவள் அங்கம் வகிக்கும் பாத்திரத்திற்கும் முற்றும் முழுதான முரண்பாடுகள். ஒன்றில் போராளியாகவும், மற்றொன்றில் சமூத்தை எதிர்கொள்ளத் தயங்கும் சாதாரண பெண்ணாக வும் மரணித்துக்கொள்கிறாள். இது தர்க்க ரீதியான விமர்சனமாக இயக்குனர் முன்வைக்கின றாரா, இல்லை திரைக்கதையில் ஏற்பட்ட குழப்பம் எங்களுக்கு பாடம் புகட்டுகின்றதா?

இயக்குனர், கதாசிரியர் சமூகத்துக்கு கூறவருவது எது. தற்கொலை சரியானது என்பதா? இல்லை? இவ்வாறான சமூகச் சிக்கல்களுக்கு தற்கொலைதான் தீர்வா. இன்றெழுந்த புதிய சமூக உறவுகளை அங்கீகரிக்க பழகிக் கொள்ளும் மக்கள் முன் வைக்கப்படும் இக்கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

அக, புற உணர்வுகளை ஒவ்வொரு பாத்திரமும் தத்தமது அறிவு உள்ளுணர்வுடன், தர்க்க ரீதியாக வெளிப்படுத்துகிறார்கள். இது இயக்குனரின் வெற்றியே. ஆனால் இப்பாத்திரங்களை யதார்த்த வாழ்வுடன் ஒட்ட வைக்க தவறிவிடுகிறார். உணர்வுகள் மீதே இவரது கவனம் செல்கிறது. அதன் வெளிப்பாட்டின் களத்தில் கவனம் செல்லவில்லை.

இவற்றிற்கு அப்பால் நல்லதொரு படத்தை தர வேண்டும் என்ற ஆர்வம் படம் முழுவதும் தெரிகிறது. நிச்சயமாக இங்கு திரைப்படம் எடுப்பவர்கள் பார்க்க வேண்டிய படம். காட்சி அமைப்புக்கள் சிறப்பானவை. I:I.6 என்பது ஒரு பிரேமின் அளவு. இதுவே ஒளிப்பதிவாளர், தான் இயக்கவுள்ள புதிய படத்துக்கான தலைப்பு.

இப்படத்தை N.N.Video வில் பெற்றுக்கொள்ளலாம்.

# JUNE R

ரேவதி சர்மாவின் இயக்கத்தில், மது அம்பாட்டின் ஒளிப்பதிவில், ஜோதிகா, குஷ்பு, சரிதா, பிஜு மேனன், சூர்யா நடித்துள்ள படம் JUNE R.

ஜோதிகா ஓர் அனாதை. இவர் ஜுன் மாதத்தில் ஏதோ ஒரு திகதியில் பிறந்தவர். இவர் ஒரு நாள் வீதியில் அடிபட்டு கிடக்கும் சரிதாவை, தனது தாய் எனக் கூறி வைத்தியசாலையில் அனுமதித்து பராமரிக்கின்றார். சரிதாவுக்கும், ஜோதிகாவுக்கும் தாய், மகள் பந்தம் ஏற்படுகிறது. தனது ஒரே மகனால் விரட்டப்படும் சரிதா ஜோதிகா வீட்டில் தங்குகின்றார்.

விரட்டிய மகன் மீண்டும் சரிதாவை தன்னுடன் சேர்த்துக் கொள்ள முயற்சிக்கின்றார். சரிதாவின் பெற்றோரின் சொத்து சரிதாவுக்கு கிடைத்துவிட்டது எனத் தெரிந்தே. இதற்கிடையில் மீண்டும் சரிதா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றார். சரிதாவை தன்னுடன் அனுப்பி விடுமாறு கோட்டில் வழக்கு தொடுக்கிறார் ஜோதிகா. வழக்கறிஞர் குஷ்பு. வழக்கு ஜோதிகாவுக்கு சார்பாக தீர்வாகிறது. ஜோதிகா வைத்தியசாலைக்கு சென்றபொழுது சரிதா இறந்து கிடக்கின்றார். ஜோதிகாவை நீண்ட நாட்களாக விரும்பும் சூர்யா ஆறுதல் கூறி தன்னுடன் அழைத்து செல்கின்றார். விரட்டப்பட்ட தாய் அநாதை மகள் உறவு வித்தியாசமான முயற்சி. தமிழில் இதுவரை வராத புதிய விடயம். ஆனால் திரைக்கதையின் ஆழமின்மை குழப்பமடையச் செய்கிறது.

ஜோதிகா, குஷ்பு, சரிதா, பிஜு மேனன் (மலையாளத்தில் பிரபல கதாநாயகர்), சூர்யா என நட்சத்திர பட்டாளம். தேவையற்ற பாடல் காட்சிகள் வர்த்தக நோக்கத்தில் படமாக்கப்பட்டது தெளிவாகிறது.

படத்தின் சிறப்பம்சம் ஒளிப்பதிவு. மது அம்பாட் படத்தின் உயிரோட்டத்தை அதிகமாக்கியுள்ளார்.

பாத்திரங்களின் பின்புலம் தெளிவற்றுள்ளது. உ+ம் பிஜு மேனன், குஷ்பு, சரிதாவின் அண்ணன் ரவிக்குமார். ரவிக்குமார் தனது தந்தை தனது சகோதரியை தலை முழுகியதற்காக திருமணமே செய்யாமல் வாழுகின்றார். ஆனால் பெற்றோர் இறந்த பின்னரும், சகோதரியை சந்திக்காமல் இருப்பது ஆச்சரியமாக உள்ளது.

ஓட்டைகள் அடைக்கப்பட்டு மறு



சீரமைக்கப்பட்டால் படம் சிறப்பாக வெளிவரும்.

படத்தின் மற்றொரு சிறப்பம்சம் படத்தின் இயக்குனர் பெண். பெண்களே பெண்கள் பற்றிய பிரச்சினையை வெளிக்கொணர்வது நல்லது.

கடந்த இத்தாலிய குளிர்கால ஒலிம்பிக்கில் 75% ஆன கனடிய விருதுகள் பெண்களாலேயே பெறப்பட்டன. அதேபோல் திரையிலும் பெண்கள் பங்கு அதிகரிக்க வேண்டும்.

இப்படத்தை ஒரு தடவை பார்க்கலாம்.


தமிழர் தகவல் ஏற்பாட்டில்

**கனடிய கலை இலக்கிய ஊடக நண்பர்கள் வட்டம் நடத்தும்**

**நூல் வெளியீட்டு விழா**

சமூக ஆர்வலரும் உளவள ஆலோசகரும் பிரபல்யமான கட்டுரையாளரும் ஒலிபரப்பு உரையாளருமான

திருமதி லலிதா புரூடி அவர்களின்

**நீதியான சமாதானம்**


Peace With Justice

இடம் - ஸ்காபரோ நகர மண்டபம்
(Scarborough Civic Centre, 150 Brorough Dr. Scarborough)
காலம் - மார்ச் 19, 2006 ஞாயிற்றுக்கிழமை
நேரம் - பிற்பகல் 6:00 முதல் 8:00 மணி வரை (குறிப்பிட்ட நேரப்படி விழா நடைபெறும்)

அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

மேலதிக விவரங்களுக்கு: 905.660.0543 , 905.270.1214, 416.920.9250





YARL WINDOW

BLINDS & DRAPERY

BLINDS DRAPERIES AND SHUTTERS

- Venetian Blinds
- Pleated Shades
- Vertical Blinds
- Cellular Shades
- Roller Shades

FREE ESTIMATE



உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்

விபரங்களுக்கு: என். செல்வம் - 905.201.7733
416.806.5397

5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON

# இலக்கியக்காரனின் இறுதி வார்த்தை

சரித்திரம் என்றால் தேதிகள் என்று என் சிறு வயது ஆசிரியர் என்னை நினைக்கவைத்தார். அலெக்சாந்தரில் இருந்து ஆதித்த சோழன் வரைக்கும் தேதிகளை நான் மனனம் செய்யவேண்டும். ஒரு பாடத்தை எவ்வளவுக்கு வெறுக்கமுடியுமோ அவ்வளவுக்கு சரித்திரப் பாடத்தை வெறுத்தேன். வரலாறுதான் மனிதர்களின் கதை என்பதையும், மனிதர்களின் கதைதான் இலக்கியம் என்பதையும் அந்த ஆசிரியர் எனக்கு சொல்லித்தர மறந்து விட்டார்.

மார்க்கோ போலோவை நான் வெறுத்ததற்கும் அதுதான் காரணம். அவனுடைய தேதிகள் எல்லாம் மாறிப்போனது. பரீட்சையில் ஒருமுறைகூட அவன் எனக்கு கைகொடுக்க வில்லை. அவனுக்கும் நான் கைகொடுக்கவில்லை. அவனுடைய பயணக் கதை மிகவும் சுவாரஸ்யமானது. அச்சு யந்திரம் கண்டு பிடிப்பதற்கு இன்னும் 150 வருடங்கள் இருந்த அந்தக் காலத்தில் அவன் கதை உலகமெல்லாம் பரவியது. கையினால் எழுதிய பல பிரதிகள் உலவின. அவை பிரெஞ்சில் எழுதப்பட்டு பின்னர் லத்தீன், இத்தாலியன், ஆங்கிலம் போன்ற பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு கதையை சொல்லின.

புனைவுக் கட்டுரை என்ற இலக்கிய ரகத்தை கண்டு பிடித்தது In Cold Blood நாவலை எழுதிய ட்ரூமன் கபோரே என்று சொல்வார்கள். ஆனால் அந்த இலக்கிய ரகத்தை முதலில் கண்டுபிடித்தது மார்க்கோ போலோதான். எழுநூறு வருடங்களுக்கு முன்னர் வெளியான அவனுடைய பயணக் கட்டுரையில் புனைவு கலந்திருக்கும். என்ன கொஞ்சம் அதிகமாகவே கலந்திருந்தது. ஒரு பயணக்காரனாக இருந்ததிலும் பார்க்க மேலான இலக்கியக்காரனாகவே அவன் இருந்தான். உலகம் முழுவதும் அவனுடைய நூல்களை போட்டி போட்டுக்கொண்டு படித்தது. அதுதான் 13ம் நூற்றாண்டில் அதிகம் விற்பனையான புத்தகம். இந்த மேலான இலக்கியக்காரன் இறக்கும்போது சொன்ன வாசகம் இன்றுவரை எல்லோரையும் போட்டுக் குழப்பிக்கொண்டே இருக்கிறது.

பெரும் இலக்கியக்காரர்கள் மரணத்தின் வாயிலில் குழம்பிப்போய் இருக்கிறார்கள். ஜேம்ஸ் ஜோய்ஸ் இறக்க முன்னர் "நான் எழுதியது ஒருவருக்குமே புரியவில்லையா?" என்று ஆற்றாது புலம்பினார். பிரிட்டிஸ் பெண் எழுத்தாளர் வர்ஜீனியா வூல்ஃப் தன் சட்டைப் பைகளில் கற்களை நிறைத்துக்கொண்டு தண்ணீருக்குள் இறங்கி தற்கொலை செய்துகொண்டார். இறப்பதற்கு முன்னர் அவர் இப்படி எழுதிவைத்தார். "என்னுடைய மூளை குழம்பிப்போய் இருப்பது எனக்கு நிச்சயமாக தெரிகிறது. அந்த நரகத்தை இன்னொருமுறை என்னால் அனுபவிக்க முடியாது. இம்முறை மீட்சியில்லை. எனக்கு சத்தங்கள் கேட்கத் தொடங்கிவிட்டன."

வேறு சில எழுத்தாளர்கள் மரணத்திற்கு முன்னர் குழப்பமடைவதற்கு பதிலாக வெளிச்சத்தை கண்டிருக்கிறார்கள். ஓஹென்றி "விளக்கை ஏற்றுங்கள். இருட்டிலே வீட்டுக்குப்போக எனக்கு பிரியமில்லை" என்றார். விக்டர் ஹ்யூகோ "எனக்கு கறுப்பு வெளிச்சம் தெரிகிறது" என்றார். தாகூர் "மரணம் என்றால் வெளிச்சத்தை மறைப்பது அல்ல விளக்கை அணைப்பது ஏனென்றால், வைகறை வாசலில் வந்துவிட்டது" என்றார். மரணம் நெருங்கிய போதும் நகைச் சுவையை விடாத மனிதர் மார்க் ட்வெய்ன்தான். அவர் இறக்கும் சமயம் பிரபலம் பெற்றுவிட்டார். அமெரிக்காவின் நிருபர்களுக்கு இடையில் போட்டி, யார் முதலில் அவருடைய மரணச் செய்தியை வெளியிடுவது என்று. ஒரு பத்திரிகை அவர் இறக்கமுன்னரே அவர் இறந்துவிட்டார் என்ற செய்தியை அறிவித்தது. இதை அறிந்ததும் மார்க் ட்வெய்ன் ஓர் அறிக்கை விட்டார். "நான் இறந்துபோன செய்தி மிகைப்படுத்தப்பட்டிருக்கிறது."

மரணத்தின் வாயிலில் இலக்கியக்காரர்களாக மாறியவர்களும் உண்டு. சேர் ஃபிரான்சிஸ் பேக்கன் என்பவர் 16ம் நூற்றாண்டில் முதலாம் ஜேம்ஸ் மன்னரிடம் விஞ்ஞானியாக, தத்துவவாதியாக, சட்ட நிபுணராக உயர்ந்த பதவிகள் வகித்தவர். ஒரு நாள் லஞ்சம் வாங்கும்போது பிடிபட்டு லண்டன் டவரில் அடைக்கப்பட்டார். அப்பொழுது தன்மீது கருணை காட்டும்படி மாட்சிமை பொருந்திய மன்னருக்கு ஃபிரான்சிஸ் பேக்கன் உருக்கமான கடிதம் ஒன்றை எழுதினார். டவரில் அடைக்கப்பட்டவர்களுக்கு வழக்கமான தண்டனை சிரச்சேதம்தான். சிரச்சேதம் செய்யப்பட்டால் அவருடைய தலையை வயிற்றின்மேல் வைத்து வெளியே அனுப்புவார்கள். சிலபேரை மன்னர் மன்னிப்பதும் உண்டு. இன்னும் சிலர் வாழ்நாள் முழுவதும் சிறையில் கிடந்து வாடவேண்டியதுதான். பேக்கன் விசயத்தில் அவர் கடைசி நிமிடத்தில் மன்னிக்கப்பட்டு கழுத்தின்மேல் தலை நிற்க வெளியே வந்தார். அரச பதவிகள் எல்லாம் துறந்து ஐந்து வருடங்கள் சாதாரண வாழ்க்கை வாழ்ந்து இறந்துபோனார். இந்தக் காலத்தில் அவர் அழியாத தத்துவங்களைப் படைத்தார். இவர் புகழ்பெற்ற இலக்கியவாதியும்கூட. சேக்ஸ்பியருடைய நாடகங்களை இவர்தான் எழுதினார் என்று சொல்பவர்கள் இன்றும் இருக்கிறார்கள்.

## அ. முத்துலிங்கம்

டோஸ்டோவ்ஸ்கி உலகத்தின் தலைசிறந்த படைப்பாளியாக மதிக்கப்படும் ரஸ்ய எழுத்தாளர். அவர் இளைஞராக இருந்த சமயம் பிரெஞ்சு எழுத்தாளர்களை விரும்பிப் படிப்பார். அவருக்கு 28 வயதாகும்போது அவரும் இன்னும் சில நண்பர்களும் கைது செய்யபட்டார்கள். ராசத்துரோக குற்றம் சாட்டி அவர்களுக்கு மரண தண்டனை விதித்தார்கள். அவருடைய மரணத்துக்கு ஒரு நிமிடம் முன்பு தண்டனையை மாற்றினார்கள். அந்தச் சம்பவத்தை குறிப்பிட்டு தன் சகோதரருக்கு டோஸ்ரோவ்ஸ்கி கடிதம் எழுதினார்.

"தண்டனையை நிறைவேற்றுவதற்காக எங்களை செமினோவ் மைதானத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே எங்களுக்கு வழங்கப்போகும் தண்டனை வாசித்து காட்டப் பட்டது. சிலுவையை முத்தமிடச் சொன்னார்கள். வாள்களை உருவி எங்கள் தலைகளுக்கு மேல் முறித்துப்போட்டார்கள். கொல்லுவதற்கு வசதியாக மூன்றுபேரைச் சேர்த்து ஒரு தூணில் கட்டினார்கள். நான் மூன்றாவது ஆள்.

மூன்று மூன்று பேராக அழைத்தார்கள். இரண்டாவது குழுவில் நான் இருந்தேன். இறப்பதற்கு சரியாக ஒரு நிமிடம் இருந்தது. நான் உன்னை நினைத்தேன், சகோதரனே. கடைசி நிமிடத்தில் உன்னை மாத்திரமே நினைத்தேன். என் பக்கத்தில் நின்ற இரண்டு நண்பர்களிடமும் இறுதியாக தழுவி விடைபெற்றுக்கொண்டேன். அப்பொழுது ஊதுகுழல் ஒலித்தது. மாட்சிமை பொருந்திய மன்னர் எங்கள் மரண தண்டனையை குறைத்து நாலு வருட கடும்தண்டனையாக மாற்றியதை எங்களுக்கு சொன்னார்கள்.'

அன்று டோஸ்ரோவ்ஸ்கி மரணத்தில் இருந்து கடைசி நிமிடத்தில் தப்பியிருக்காவிட்டால் அவருடைய படைப்புகளை எல்லாம் இழந்திருப் போம். குற்றமும், தண்டனையும், காரமசோவ் சகோதரர்கள், முட்டாள் போன்ற நாவல்கள் எங்களுக்கு கிடைக்காமலே போயிருக்கும்.



வாழ்நாள் முழுக்க இலக்கியத்துக்காகவே வாழ்ந்து மரணம் வந்தபோது இலக்கியத்தை துறந்தவர்களும் உண்டு. ஒக்டேவியஸ் சீசர் காலத்தில் வாழ்ந்த பெரிய கவி வேர்ஜில். இவரும் ஒக்டேவியசும் இளவயதில் ஒன்றாகப் படித்தவர்கள் நண்பர்கள். ஒக்டேவியஸ் கேட்டுக்கொண்டதற்கு இணங்க வேர்ஜில் லத்தீன் மொழியில் ஒரு பெரிய காவியம் படைத்தார். அதற்கு ஏனிட் என்று பெயர். திரோஜன் ஒருவன் இத்தாலிக்கு பயணம் செய்து ரோம் நகரை வெல்வதை சொல்லும் கதை. 11 வருடங்கள் தொடர்ந்து எழுதி அதை முறைப்படி வெளியிட முன்னர் அவர் இறந்துபோனார். மரணத்துக்கு முன் தன் நண்பர்களிடம் தான் எழுதிய காவியத்தை அழித்துவிடச் சொல்கிறார். அவருக்கு காவியத்தில் போதிய திருப்தி இல்லை. ஆனால் நண்பர்கள் சிறு திருத்தங்கள் செய்து காவியத்தை வெளியிடுகிறார்கள். இன்றுவரை லத்தீனில் இது புகழ்பெற்ற காவியமாக விளங்கி வருகிறது. மரணம் சமீபித்தபோது அவர் விட்ட வேண்டுகோளை நண்பர்கள் நிராகரித்ததால் மானுட சமுதாயத்துக்கு பெரும் காவியம் ஒன்று கிடைத்தது.

உலகத்தின் முதல் best seller நூலை எழுதியவன் மார்க்கோ போலோ. அவனுக்கு ஆறு வயது நடந்து கொண்டிருந்தபோது, அவனுடைய தகப்பனும், சகோதரனும் ஒரு நீண்ட பயணத்தை தொடங்கினார்கள். அவர்கள் வெனிஸ் தேசத்து வர்த்தகர்கள். அந்தக் காலத்தில், நினைத்துக்கூட பார்க்க முடியாத தூரத்திலிருந்த சீனாவுக்கு புறப்பட்டார்கள். பயணத்தை முடித்து அவர்கள் மீண்டும் வெனிசுக்கு திரும்பி வந்து சேர்ந்தபோது மார்க்கோவுக்கு வயது 15. ஒன்பது வருடங்கள் அவர்கள் பயணம் செய்திருக்கிறார்கள். இந்த இடைப்பட்ட காலத்தில் மார்கோவைப் பெற்ற தாயாரும் இறந்துபோகிறாள்.

இரண்டு வருடம் கழித்து மறுபடியும் பயணம் புறப்பட்டபோது 17 வயதான மார்க்கோவும் சேர்ந்துகொள்கிறான். அவன் இளம் வாலிபனாய் இருந்தபோதிலும் பொறுப்புடனும், கருத்துடனும் தன்னை சுற்றி தினமும் மாறும் உலகை அவதானித்தபடி பயணம் செய்கிறான். முதல் உலகப் பயணி மார்க்கோ போலோ அல்ல. அவனுக்கு முன்பும் பலர் பயணம் செய்திருக்கிறார் கள் ஆனால் மார்க்கோ போலோவை இன்றும் நினைவில் வைத்திருப்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. அதில் முக்கியமானது அவன் தனது பயணத்தை இலக்கியமாக்கியது.

நாலு வருடங்கள் பயணம் செய்து சீனாவின் பெய்ஜிங் நகரை அடைகிறார்கள். அங்கே மங்கோலிய சக்கரவர்த்தி குப்ளாய்கான் அரசு செலுத்துகிறார். 17 வருடங்கள் பல அலுவல்களில் அரசனுக்கு ஆலோசனையாளராக மார்க்கோ பணிபுரிகிறான். "பிரம்மாண்டமான பளிங்கு மாளிகை, அவற்றில் தங்கமுலாம் பூசிய அறைகள், கண்ணைப் பறிக்கும் வர்ணங்களில் தீட்டப்பட்ட மனித உருவங்களும், மிருகங்களும், உங்கள் மூச்சை நிறுத்தி பரவசத்தையும், அதே சமயத்தில் வியப்பையும் தரும்." இப்படி வர்ணிக்கிறான். அங்கு நடக்கும் விருந்துகளும் அவனுக்கு ஆச்சரியத்தை விளைவிக்கின்றன. 6,000 விருந்தினர்கள் ஒரே சமயத்தில் உணவருந்தும் மண்டபம். 10,000 வல்லூறு வேட்டைகாரர்கள், 20,000 நாய் காவலர்கள் அரச ஊழியத்தில் இருக்கிறார்கள். இவனுடைய வர்ணனையில் மயங்கிய ஆங்கிலக் கவி சாமுவெல் டெய்லர் கோலரிட்ச் பின்னாளில் குப்பளாய்கான் பற்றி கவிதை புனைவார்.

மார்க்கோவின் வர்ணனைகள் நேரில் நின்று பார்ப்பதுபோன்ற உணர்வைக் கொடுக்கும். அற்பமான சம்பவம்கூட அவன் எழுத்தில் இலக்கியமாக மாறிவிடும். கொடிய பாலைவனத்தை கடப்பதைப் பற்றி இப்படி எழுதுகிறான்.

"சில நேரங்களில் பயணிகள் பாலைவனத்தைக் கடக்கும்போது கொள்ளைக்காரர்கள் அவர்களை நோக்கி வரும் சத்தம் கேட்டு எதிர்திசையில் சிதறி ஓடி வழி தவறுவதுண்டு. பகல் நேரத்தில்கூட அமானுட ஓசைகளும், போர் ஒலிகளும், மேளச் சத்தங்களும் கிளம்பி பயணிகளைக் கிலி பிடிக்கவைக்கும். இந்தக் காரணங்களுக்காக பயணிகள் ஒருவருக்கொருவர் நெருக்கமாகவே பயணிப்பர். இரவு தூங்க முன்னர் அடுத்த நாள் காலை பயணப்படவேண்டிய திசையை நோக்கி திசைகாட்டியை நட்டு வைப்பர். மிருகங்களின் கழுத்துகளில் மணிகளை கட்டிவைக்கவும் தவறமாட்டார்கள். இந்த முறையில் வழி தவறாமலும், மிருகங்கள் தொலையாமலும் பாதுகாத்துக் கொள்வார்கள்."

தாய் நாட்டுக்கு அவன் திரும்பியதற்கு முக்கிய காரணம் குப்ளாய்கான் முதுமையடைந்து விட்டதுதான். எந்த நேரமும் அவர் இறக்கலாம். அவர் இறக்கமுன்னர் தான் ஈட்டிய திரவியம் முழுவதையும் தன் பிறந்த நாட்டுக்கு எடுத்துச் செல்லத் தீர்மானித்தான். திரோஜன் போரை முடித்துவிட்டு ஒடிசியஸ் பத்து வருடங்கள் அலைந்ததுபோல மார்கோவும் பத்து வருடங்கள் பயணம் செய்தான். அவன் திரும்பவும் வெனிசுக்கு வந்து சேர்ந்தபோது அவனுக்கு வயது 42.

அவன் அரும்பாடுபட்டு சேர்த்த செல்வத்துடன் நிம்மதியாக வாழ முடியவில்லை. வெனிசுக்கும், ஜெனோவாவுக்கும் இடையில் போர் மூண்டது. போரிலே மார்க்கோ போலோவைக் கைதுசெய்து சிறையில் அடைத்தார்கள். சிறையிலே கைதிகளுக்கு மார்க்கோ போலோ தன் 25 வருட பயணக் கதைகளை வெறும் ஞாபகத்தில் இருந்து சொல்ல, அவனுடன் இருந்த சக கைதி ஒருத்தன் எழுத்தாளன் - பெயர் ரஸ்டிசெல்லோ - அதை பிரெஞ்சு மொழியில் எழுதினான்.

ஹெரோடோரஸ் போல மார்க்கோ வரலாறு படைப்பதற்காக புறப்பட்டவன் அல்ல. வழி நெடுக குறிப்புகளும் எழுதி வைக்கவில்லை. சிறையில் நேரத்தைப் போக்குவதற்காக தன் அனுபவங்களை எழுதினான். 17 வயதிற்குள் பல இலக்கியங்களை ஆழமாகக் கற்றிருந்தபடியால் அவன் எழுதியதில் கலைநேர்த்தி இருந்தது. அமோகமான ஞாபகசக்தியும், நுண்ணிய அவதானிப்புமே அவனை இலக்கியக்காரனாக மாற்றியது.

மேற்கு கிழக்காக பல பயணங்கள் மேற்கொள்ளப் பட்டிருந்தாலும், வடக்கு தெற்காக பிரயாணம் செய்த முதல் பயணி மார்க்கோதான். சீனாவில் தான் கண்ட புதுமைகள் அனைத்தையும் மார்க்கோ வர்ணித்தபோது அந்தக் காலத்து சரித்திர ஆசிரியர்கள் அதை புளுகு மூட்டை என்று தள்ளி வைத்துவிட்டார்கள். அவன் எழுதிய விபரங்கள் பின் வந்த வரலாற்றுக்காரர்களுக்கு உதவியாக அமைந்தன.

*தொடர்ச்சி 22ஆம் பக்கம்*

MATH, SCIENCE & ENGLISH TUITION

MATH, SCIENCE & PHYSICS under taken for ALL Grades from Gr. 2 to 12 & OAC

Special classes in Calculus & Algebra - Geometry

English for all grades from Gr. 2 ta Gr. 10

Individual & group classes available

By an experience teacher: S.F. Xavier

CONTACT: 416 - 431- 6774 (Markham & Ellesmere)

TUITION CLASSES

Chemistry, Biology
From Grade 11 & 12

Math, Science
From Grade 5 to 10

Based on Ontario Curriculum

McCowan & Finch

மேலும் விபரங்களுக்கு 416-335-9779

## Oscar உம் நாற்பது திருடர்களும்

12 ஆம் பக்கத் தொடர்ச்சி

விட்டது. ஸ்ரேல் தூதரகத்தின் குற்றச்சாட்டு அவர் யூதராக செயல்படவில்லை என்பது. பாலஸ்தீனியமும், மார்க்ஸ் இம் அமெரிக்காவின் பகிரங்க எதிரிகள் என்பது யாவருக்கும் தெரிந்ததே.

Oscar என்பது அரசியலுக்கு அப்பாற்பட்ட படங்களுக்கும், அமெரிக்காவையும் அதன் செயற்பாடுகளையும் ஆதரிக்கும் படங்களுக்குரியவை. அதன் 5008 உறுப்பினர்களும் இதனை சத்ய பிரமாணமாக எடுத்துக் கொண்டவர்கள். அமெரிக்க கலாச்சாரம் என்பது உலகின் ஒளிவிளக்கு அவர்களின் இதயத்தில் துடிக்கும் புஷ்ஷின் இரத்தம்.

George Coollney கூறியது போல் 'I am Proud to be a Part of this Acadmy Proud to be Part of this Community and Proud to be out of Touch.'

அடுத்து வரும் வாரங்களில் Good Night and Good Luck, Broke back Mountain, Capote Crash ஆகிய படங்களைப் பற்றி விரிவாக பார்ப்பதன் மூலம் பல விடயங்களை தெளிவாக்கலாம்.

---

பிரபல வானொலி, தொலைக்காட்சி தயாரிப்பாளரும், முன்னாள் ரூபவாஹினி தமிழ்பிரிவுத் தலைவருமான பி, விக்கினேஷ்வரன் தனது நாவலை மையமாகக் கொண்ட படத்தை இயக்கவுள்ளார். படப்பிடிப்பு கனடா, இலங்கை, சிங்கப்பூர் ஆகிய இடங்களில் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது. இதில் பங்கு பற்றும் கலைஞர்கள் அனைவரும் புலம் பெயர், இலங்கை கலைஞர்களே.

# பிரக்ஞ்சை எனும் சாவி

06ஆம் பக்கம் தொடர்ச்சி

படிப்படியாக முன்னேறி நூறு வீதம் பிரங்ஞையாக (conscious) செயற்படும்போதே மனித பரிணாம-வளர்ச்சி நடைபெறுகின்றது. மனிதரின் பரிணாம-வளர்ச்சி தற்பொழுது முடங்கிப்போய்யுள்ளது எனக் கூறினால் மிகையாகாது. நூறுவீதம் பிரக்ஞ்ஞையாக (conscious)செயற்படும் பொழுதே அடுத்த நிலையான பிரக்ஞ்ஞை (awareness) நிலைக்கு மானுடம் செல்லமுடியும்.

பிரக்ஞ்ஞை எனும் சாவியைக் கொண்டு நம்மை அறிந்து கொள்வதை மட்டுமல்ல இவ்வுலக பிரபஞ்ச உண்மையை அறிந்த கொள்ளவும் திறக்க முடியும் என ஓசோ மட்டுமல்ல அக்காலத்திலிருந்து பைதகரஸ், புத்தர், சோக்கிரட்டிஸ், இயேசு, நபி என இன்றுவரை உண்மையைக் கண்டறிந்த பலர் கூறுகின்றனர்.

நான் தாமரை இலையில் தத்தளிக்கும் ஓர் நீர்த் துளி. கடலில் கலந்தபோது சமுத்திரமானேன்.

இது மனிதரால் முடியாத கடினமான காரியமல்ல. எல்லா விடயங்களும் முதல் அடி எடுத்து வைப்பதன் மூலமே ஆரம்பமாகின்றது.முதல் அடி. ஒவ்வொரு நாளும் ஆகக்குறைந்தது ஐந்து நிமிடத்திலிருந்த கூடியது அறுபது நிமிடம் வரை ஒரு நேரத்தை ஒதுக்குங்கள். மிகவும் வசதியாக கஸ்டம் எதும் இல்லாமல் இருக்கும்மாறு உடலை சரிசெய்யுங்கள். கண்களை மூடுங்கள். கண்ணை மூடியவாறே மூக்கின் நுனியைக் கவனியுங்கள். மூச்சு உள்ளே வருவதையும் வெளியே செல்வதையும் கவனியுங்கள். பலன்கள் தானாக வரும். இது ஒரு தியான முறை. இம்முறை மூலமே சித்தாத்தர் என்ற இளவரசர் கெளதம புத்தர் நிலையை அடைந்தார்.

OSHO தியானத்தில் பங்குபெறுவதற்கும் மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகொள்ளுங்கள்.
மீராபாரதி - 905 294 6707
osho meditation center
awakening awareness.org
with love

## இயக்குநர் ஷங்கர் தயாரிக்கும் 'வெயில்'.

15ஆம் பக்கம் தொடர்ச்சி

நம்பியிருக்கிறார். அவர் இப்படத்தின் இயக்குநர் வஸந்தபாலன். கவிதாலயா தயாரிப்பில் இவர் இயக்கிய 'ஆல்பம்' என்ற திரைப்படம் சரியாக போகவில்லை. இப்போது 'வெயில்' தன் வாழ்வை வசந்தமாக்கும் என்று உறுதியாக நம்புகிறார் வஸந்தபாலன்.

## மீண்டும் இணைகிறார்கள் இயக்குநர் லிங்குசாமியும் எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணனும்.


கவிஞர் குட்டிரேவதி - சண்டக்கோழி சர்ச்சை இன்னும் முழுமையாக ஓய்ந்தபாடில்லை. நாம் தொடர்பு கொண்டபோது, 'அடுத்த கட்டமாக நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க இருக்கிறேன். எனவே அதுபற்றி அதிகம் பேச விரும்பவில்லை' என்று சுருக்கமாக முடித்துக்கொண்டார் கவிஞர் குட்டிரேவதி.

ஆனால் இந்த சர்ச்சைகள் எதைப் பற்றியும் கவலைப்படமால் தனது அடுத்த படத்துக்கான வேலைகளில் இறங்கிவிட்டார் 'சண்டக்கோழி' இயக்குநர் லிங்குசாமி. படத்தின் பெயர் 'பீமா'. இந்தப் படத்துக்கும் வசனகர்த்தா எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன்தான். கதாநாயகன் விக்ரம். சூர்யா மூவிஸ் தாயரிக்க இருக்கும் இப்படத்துக்கான கதாநாயகி மற்றும் மற்ற கதாபாத்திரங்களுக்கான நடிகர்கள் தேர்வு தற்போது நடைபெற்று வருகிறது.

கதாநாயகியாக யாரைத் தேர்வு செய்வார்கள்?

லிங்குசாமி சொல்கிறார்: 'நான் இதுவரை நான்கு படங்களை இயக்கியுள்ளேன். 'ஆனந்தம்', 'ரன்', 'ஜி', 'சண்டக்கோழி' இந்த நான்கு படங்களிலுமே பெண்களை நான் செக்ஸியாக காட்டியதே இல்லை. என்னால் அது இயலவும் செய்யாது. காரணம் நான் எடுக்கும் எல்லா திரைப்படங்களையும் என் தாய், தந்தை, சகோதரி, அண்ணி மற்றும் என் உறவுக்காரர்கள் அனைவரும் பார்க்கிறார்கள் என்ற எண்ணம் எப்போதும் என் மனதில் இருந்து கொண்டே இருக்கிறது என்பதுதான்.

இப்போது 'பீமா'வுக்குகதாநாயகியை



தேர்வு செய்ய படங்களைப் பார்க்கும் போதுகூட அந்த எண்ணம் என் மனதில் தோன்றுகிறது. எனவே நிச்சயம் குடும்பப் பாங்கான ஒரு பெண்ணைத்தான் தேர்வு செய்வோம். மற்றபடி இப்போது எதுவும் சொல்வதற்கில்லை' என்றார் லிங்குசாமி.




# BASEMENT RENT

MORNINGSIDE & MCLEVIN
Bungalow ground floor for rent.
2, 1 Bedroom or room main floor avail. Sep. entrance. Parking. Close to ttc, library, mall, U of T, Centennial college, high school, hwy 401. Big patio, garden.
பெண்கள்/ மாணவர் / வயோதிபர்/ சிறு குடும்பத்திற்கு ஏற்ற இடம்.
Daycare Avail.2 -4 school pick up.
Kugan- 647.271.0517 / 416.834.1081

---

MCCOWAN & ELSON
2 bedroom bsmt for rent. Sep. entrance. Parking, washer, dryer, cable. Avail. immediately. Close to all amenities.
தொடர்புகளுக்கு : 416.523.1312

---

MIDLAND & EGLINTON
1 bedroom bsmt for rent. Sep. entrance. Laundry. Close to TTC, stores, ஈரா சுப்பர் மார்க்கட், school, etc. Avail. April 01, 06. Family preferred.
தொடர்புகளுக்கு: 416.456.2702

---

MCCOWAN & ELSON
2 bedroom bsmt for rent. Side entrance. Parking. Avail. Immediately. Closer to school, TTC, YRT, daycare . :
905.472.7968 / 416.825.4861

---

MEADOWALE & ELLESMERE
3 bedroom bsmt for rent. Sep. entrance. parking, cable, laundry. Avail. immediately. Family / students preferred. Close to bus, University, Centennial college, etc.
647.435.0872 After 4:00 pm / 647.988.1869

---

NEILSON & SHEPPARD
Ground level / walkout bsmt.
2 large bedrooms, large: kitchen, living room. Full washroom. Sep. entrance. Avail. April 01, 06. Close to TTC, school, mall, etc.
தொடர்புகளுக்கு: 416.284.4717

---

BRIMLEY & EGLINTON
1 bedroom walk out bsmt apt. for rent. Sep. entrance, parking, cable laundry. Avail. April 01, 06. Close to ttc, stores, தமிழ் கடைகள், etc.
தொடர்புகளுக்கு: 416.269.2560

---

MARKHAM & ELSON
Newly renovated 2 bedroom bsmt Apt. for rent. Sep. entrance. Parking, laundry. Avail. immediately. Close to bus, stores, school, தமிழ்கடைகள், etc.
647.402.2455 / 416.317.3758

---

MARKHAM & LAWRENCE
1 bedroom bsmt for rent. Low rent. Cable, parking, laundry. Avail. anytime. பெண்பகள் விரும்பத்தக்கது. Close to bus, mall, stores, etc.
தொடர்புகளுக்கு:: 416.438.3534

---

BIRCHMOUNT & LAWRENCE
2 bedroom bsmt apt. for rent. Sep. entrance. Parking, cable, laundry. Avail. April 01, 06. Close to ttc, stores, school...
தொடர்புகளுக்கு:416.750.4696 weekdays after 5:00pm / weekends anytime

---

MARKHAM & ELSON
2 bedroom walk-out bsmt for rent. Parking, cable, laundry. Avail. immediately. புகைத்தல் பழக்கம் இல்லாதவர்கள் விரும்பத்தக்கது. Close to bus, stores, school, தமிழ் கடைகள்.
தொடர்புகளுக்கு: Karu - 416.895.6975

---

MCCOWAN & FINCH
2Bedroom bsmt for rent. Sep. Entrance. Parking, Cable, Laundry. Close to ttc, mall, school. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: 416.293.6759

---

MORNINGSIDE & SEWELLS
1Bedroom bsmt for rent. Sep. Entrance. Close to ttc, mall, school. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: 905.683.0256 / 905.562.0914

---

WARDEN & ELLESMERE
2 bedroom bsmt for rent - bungalow house. Sep. entrance. 4 pc washroom, parking. Wood & carpet. Avail. immediately. Close to ttc, hwy 401, mall, public & catholic schools, stores. தொடர்புகளுக்கு:
416.510.6932 /416.819.6431
weekdays after 6:30pm / weekends anytime

---

WARDEN & FINCH
சகல வசதிகளும் அமையப் பெற்ற WARDEN & FINCH சந்திப்பிற்கருகில் New one bedroom bsmt வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 647.898.4171/ 416.491.5034

---

DONMILLS & SHEPPARD
3Bedroombsmt for rent. Sep.entrance. Kitchen, living room, parking, laundry, cable/internet. Very close to Hwys, hospital, senaca college, tamil stores, 5min walk to ttc, subway, schools, mall, plaza, nofrills. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: 416.502.8053

---

MARKHAM & MCLEVIN
2Bedroom bsmt for rent. Sep. Entrance. Parking, Cable, Laundry. Close to ttc, mall, school. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: 416.554.6557/ 416.299.7794

---

MIDLAND & FINCH
2Bedroom bsmt for rent. Sep. Entrance. Parking, Cable, Laundry. Close to ttc, mall, school. Avail. April 1st, 06.
தொடர்புகளுக்கு: 416.292.1380 416.321.6158

---

WARDEN & FINCH
சந்திப்பிற்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய1Bedroom bsmt for rent. Sep. Entrance. Close to ttc, mall, school. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: 416.492.3411

---

MCCOWAN & ELSON
FEATHER STONE
ஒரு படுக்கை அறை கொண்ட BSMT வாடகைக்கு உண்டு. With furniture. Sep. entrance. parking, cable. Couple preferred. Close to ttc, school etc.
தொடர்புகளுக்கு: 905.209.0292

---

FINCH & MCCOWAN
SANDHURST CIRCLE
சகல வசதிகளுடன் கூடிய ஒரு அறை bsmt வாடகைக்கு உள்ளது. 24 hrs. bus வசதி, Woodside mall இற்கு முன்பாக. Avail. immediately. பெண்கள் விரும்பத்தக்கது. Tuition சொல்லிக்கொடுக்கக்கூடிய இடம்.
தொடர்புகளுக்கு : 416.754.0589
weekdays after 8:00pm, weekends anytime

---

MARKHAM & STEELES
_2 large bedroom bsmt apt. for rent. Sep. entrance. Parking, cable. Close ttc, school, stores, no frills, Yarlton market, bank, etc. Rent $775. Avail. immediately.
தொடர்புகளுக்கு : 416.616.7427

---

MIDDLEFIELD & MCNICOLL
1 bedroom bsmt apt. for rent. Sep. entrance. Parking, washer, dryer, cable. Avail. March 01, 06. Close to all amenities. No smokers preferred.
தொடர்புகளுக்கு : 416.297.9549

---

MCCOWAN & DENISON
2 bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, school, etc. Avail. June 01, 06. No smoking / pets. Couple / small family preferred. Pl. call:
905.472.5118 / 416.427.6681

---

Bellamy & Lawrence
2bedroom bsmt for rent. Sep.Entrance. Parking, cable, laundry. Close to ttc, school, mall etc. Avail. March15th,06.
தொடர்புகளுக்கு:416.438.5448

---

Mccowan & Steels
1bedroom bsmt Apt for rent. Sep. Entrance. Parking, laundry. Close to ttc, school, mall etc. Family, couples விரும்பத்தக்கது. Avail. April 01, 06.
தொடர்புகளுக்கு: 416.431.3957
Cell:416.662.0721

---

MCCOWN & 16TH AVE
1Bedroom bsmt Apt for rent. Sep. Entrance. Parking, cable, laundry. Close to ttc, mall, school. Avail. Immediately.
தொடர்புகளுக்கு :416.414.5562

---

KENNEDY & SHEPPARD
2 large bedroom bsmt apt. for rent. Fully furnished. Avail. March 01, 06. Cable, laundry. Close to ttc, stores, mall, etc. Boys / girls preferred. Rent negotiable.
Pl. call: 416.298.9058
after 7:00pm / leave message

---

MCCOWAN & EGLINTON
2 bedroom bsmt Apt. for rent. Sep. entrance. Parking, laundry, cable. Avail. immediately. Bachelors / boys preferred. close to bus, stores, school, etc.
416.269.2108 / pl. leave message
647.297.2108

---

MARKHAM & LAWRENCE
1 bedroom bsmt for rent. Sep.entrance. Avail. April 01, 06. Close to all amenities.
Call: 416.431.4340 /416.678.6581

---

VICTORIAPARK & ELLESMERE
2 bedroom bsmt for rent. Sep. entrance. Avail. March 01, 06. Close to ttc, stores, school, hwy.
416.444.2655 / 416.844.2655

---

MCCOWAN & STEELES
(MIDDLEFIELD)
2 bedroom bsmt for rent. Sep. entrance. Parking, cable, laundry. Avail. immediately. புதிய Plaza விற்கு முன்பாக எல்லா வசதிகளுடனும் வாடகைக்கு உள்ளது. Avail. March 01, 06. Close to bus, stores, school, தமிழ் கடைகள்.
தொடர்புகளுக்கு: 905.471.6916

---

FINCH & TAPSCOTT
2 Bedroom bsmt apt. for rent. Sep. entrance. Parking, cable, laundry. Close to shopping, TTC, school.
தொடர்புகளுக்கு: 416.588.4016

---

NEILSON & SHEPPARD
1 large bedroom bsmt for rent. Living room, kitchen. Suitable for small family /couples. Sep. entrance. 5 minutes walk to TTC & school. Close to shopping mall, stores/bakery medical centre, etc. Day care avail. around the area.
Pl. call: 416.724.1177

---

SCAR. GOLF CLUB & ELLSEMERE
1 Large bedroom bsmt for rent. Living room, kitchen, washroom, sep. entrance, parking. Avail. March 01, 06. Close to school, ttc & all amenities.
தொடர்புகளுக்கு: 416.431.9428

---

MIDLAND & LAWRENCE
2 bedroom bsmt for rent. Sep. entrance. Parking, cable, laundry. Close to TTC, subway, school, stores. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.759.5780

---

MARKHAM & ELLESMERE
மிகவும் அமைதியான சிறந்த சுற்றாடலில் 2 அறைகள் கொண்ட bsmt வாடகைக்கு உண்டு. Sep. entrance. All modern facilities. Avail. immediately. Close to school, ttc..
தொடர்புகளுக்கு: 416.438.1249

---

MCCOWAN & STEELES
2 Bedroom bsmt for rent. Sep. Entrance. Avail. immediately. Close to everything
தொடர்புகளுக்கு: 905.201.6572

---

MORNINGSIDE & SEWELLS
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance. Parking, cable, washer, dryer. Avail. immediately. Close to bus, school, stores. 416.281.2509 / 416.473.7518

---

BIRCHMOUNT & EGLINTON
1 bedroom bsmt Apt. for rent. கனடா கந்தசாமி கோவிலுக்கு அருகாமையில் அமைந்துள்ளது. Avail. immediately. Cable, parking. Close to to ttc, subway, stores...
தொடர்புகளுக்கு: 416.554.6713

---

KENNEDY & ELLESMERE
2 bedroom bsmt for rent. Washroom. Avail. immediately. Parking, laundry, cable. Without meal. Close to bus, subway, stores, Highland farm. stores, etc.
தொடர்புகளுக்கு: 416.717.8979

---

BRIMLEY & LAWRENCE
ஒரு அறை கொண்ட BSMT APT. வாடகைக்கு உண்டு. Sep. entrance, fire place, cable, sun tv, K tv, parking. Avail. immediately. Close to ttc, school, plaza, SP Importers.
தயா - 416.752.7371 / 416.828.8377

---

MARKHAM & STEELES
2 bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry. அத்துடன் வீட்டின் மேல் தளத்தில் ஒரு அறை பெண்களுக்கு வாடகைக்கு கொடுக்கப்படும். Close bus, school, shopping, ets.
தொடர்புகளுக்கு: 905.471.5487

# JOB JOB JOB

ரொறொன்ரோ Downtown பகுதியில் Convenient Store இல் முழுநேரமாக பகல், இரவு பொழுதுகளில் தொழில்புரிய ஆண்/பெண் இருபாலாரும் தேவைப்படுகின்றது. Punctuality, Trustable, Reliable person preferred. நியாயமான சம்பளம். மேலதிக விவரங்களுக்கு
416.531.5675

---

PHARMACY & FINCH பகுதியில் தமிழ் உணவகம் ஒன்றில் வேலை செய்வதற்கு அதில் அனுபவமுள்ளவர்கள் தேவை.
மேலதிக தொடர்புகளுக்கு: 416.885.8053

---

Kennedy & Eglinton
பகுதியில் அமைந்திருக்கும் தமிழ் சுப்பர் மார்க்கட் ஒன்றிற்கு வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.267.0408

# CONDO.TOWNHOUSE FOR RENT / SALE

FINCH & PHARMACY
3 bedroom +1 bedroom bsmt apt. Condo. townhouse for rent/sale. 2 kitchen, 3 Washrooms. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Excellent condition. Very good location. $228,000. Close to school, Senecca college, 24 hrs. bus, ttc, mall, etc. தொடர்புகளுக்கு: 416.493.0590 / 647.286.0590

---

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பல பக்கங்கள் 21, 22

# ROOM RENT

NEILSON & FINCH

3 அறைகள் கொண்ட வீட்டில் சாப்பாட்டுடன் ஒரு அறை வாடகைக்கு உண்டு. பெண்கண் விரும்பத்தக்கது. Sep. washroom, cable, laundry, parking. Avail. immediately. Close to bus, stores, school, etc.
தொடர்புகளுக்கு: 416.298.9913

KEELE & FINCH

2Bedroom for rent. அறைகள் தனித்தனியாக வாடகைக்கு கொடுக்கப் படும். பெண்கள் விரும்பத் தக்கது. Close to York University. 5minutes walk.
தொடர்புகளுக்கு: 416.661.6247

MIDLAND & FINCH

4 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Washer, dryer, parking. Avail. immediately. Close to bus, stores, school, etc.
தொடர்புகளுக்கு: 416.291.5603

PHARMACY & LAWRENCE

சந்திப்புக்கு அருகாமையில் 2 அறைகள் கொண்ட bsmt இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, kitchen, living room, fridge, stove, washer, dryer, parking. Close to school, ttc, stores, mall etc. Rent $300.00 Available immediately
தொடர்புகளுக்கு: 416.660.8367

BIRCHMOUNT & MCNICOLL

அறைகள் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் வாடகைக்குக் கொடுக்கப்படும். Double garage.
Call: 416.335.8055/905.294.2674

LAWRENCE & BELLAMY

(On Lawrence)

Room for rent - main floor. Avail. immediately. Close to school, TTC, shopping. Bsmt for rent $275. தொடர்புகளுக்கு: Cell: 416.433.0491/416.289.3459 After 6:00pm

MCCOWAN / 14TH AVENUE

3 அறைகள் கொண்ட Bungalow வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. washroom. Washer, dryer, parking, cable. Avail. immediately. பெண்கள் / வயோதிபர் /couples விரும்பத்தக்கது. Close to bus, stores, etc.
தொடர்புகளுக்கு: 905.475.0890

MARKHAM & ELSON

புதிதாகக் கட்டப்பட்ட வீட்டில் விலாசமான அறை ஒன்று எல்ல வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு. குடும்பத்தவர்கள் இருவர் விரும்பத்தக்கது. Parking, laundry, sep. entrance, cable.
தொடர்புகளுக்கு: 905.471.6916

NEILSON & FINCH

3 bedroom bungaloweல் அறைகள் தனித்தனியாக சாப்பாட்டுடன் வாடகைக்கு கொடுக்கப்படும் 2 Parking, washer, dryer. Avail. immediately. Close to bus, stores, mall, etc.
416.712.0324 / 647.831.6724

MARKHAM & LAWRENCE

ON MARKHAM RD.

வீட்டில் அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. Master bedroom - main floor. சமையல் அறையைப் பகிர்ந்து கொள்ளலாம். (sharing kitchen). cable, parking. Rent $275. Close to TTC, school, shopping. Available Immediately. Pl Call: 416.439.4076 / 416.728.0807

# CONDO. TOWNHOUSE FOR RENT

MCLEVIN & TAPSCOTT

Brand new 2 bedroom Condo. Town house for rent. Washer, dryer, cable, 2 parking lot. Close to bus, mall, school, etc. Avail. immedately. தொடர்புகளுக்கு: Ruban - 647.274.7871

# HOUSE FOR RENT

WARDEN & FINCH

4 bedroom Town house for rent. Finished bsmt. Avail. May 01, 06. Close to ttc, school, mall, etc.
416.909.1764 / 416.497.5139

BELLAMY & LAWRENCE

3 அறைகள் கொண்ட அழகான ( all Hard wood) Bungalow வீடு வாடகைக்கு March 15 முதல் கொடுக்கப்படும். Parking. Free highspeed internet, cable tv ( Sun tv) Close to ttc, school, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.822.0400

MCCOWAN & STEELES

சந்திப்புக்கு அருகாமையில் (14 Elson st., Markham) 6 ( 4+2) படுக்கை அறைகளும் 3½ குளியலறையுடன் கூடிய 2200 - 2500 சதுர அடி பரப்பளவு கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: 905.294.8972
Note: Finished bsmt with sep. entrance, ttc available, school in walking distance and all othr facilities.

NEILSON & SHEPPARD

3 bedroom bungalow house for rent - Main floor. Garage Parking, Air condition. Avai. immediately. Close to ttc, mall, Primary & High schools.
தொடர்புகளுக்கு: 416.282.7361

# CONDO. FOR RENT

FINCH & BRIDLETOWN CIRCLE
2050 BRIDLETOWN CIRCLE

3 bedrooms Condo. for rent. 2 Washrooms, washer, dryer, parking. Close to Grace hospital, bus, mall, etc.
தொடர்புகளுக்கு: Kesavan - 416.267.9131

BIRCHMOUNT & ELLESMERE

1 + DEN Condo. for rent. புதிதாகக் கட்டப்பட்டது. Washroom, washer, dryer, A/C, hardwood floor, parking, locker room. Avail. immediately. சிறு குடும்பம்/அரசாங்க உதவிப் பணம் பெறுவோர் விரும்பத்தக்கது
தொடர்புகளுக்கு: 416.315.9397

MARKHAM & SHEPPARD

1 +Den can be used as 2 bedroom. Avail. immediately. Close to bus, stores, school,
தொடர்புகளுக்கு: 416.451.0271

# JOB JOB JOB

OFFICE HELPER

Excel, phone answering, தமிழ், ஆங்கிலம் சரளமாகப் பேசக்கூடிய பெண் ஒருவர் வேலைக்குத் தேவை. தொடர்புகளுக்கு: 416.880.9092

# DRY CLEANING STORE FOR SALE

MCCOWAN & STEELES
HILLCROFT

நல்ல நிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் Dry Cleaning store விற்பனைக்கு உள்ளது. இடம், கட்டிடம் மற்றும் இயந்திரங்களுடன் கூடியது. Net income upto $100,000. குடும்பத் தொழிலுக்கு மிகவும் ஏற்றது.
416.850.2386 / 416.508.5276

# AIR TICKETS

Low fares guarantees
For all your travel needs please call
MORTGAGES
INCOME TAX RETURN WITH BIG REFUND
Arul: 647.831.2943

# பிள்ளை பராமரிப்பாளர்

MARKHAM & SHEPPARD

பகுதியில் அமைந்துள்ள வீட்டில் வைத்து 2 வயது - 4 வயது வரையான உங்கள் பிள்ளைகளை பராமரிக்க வேண்டுமா?
அழையுங்கள் : 416.293.0947

# HOUSE FOR SALE

## MORNINGSIDE & STAINES


5 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. 4 குளியலறைகள். புறம்பான வழியுடன் bsmt அமைக்கப்பட்டுள்ளது.

- 5 bedrooms • 4 bashrooms • 9ft. ceiligs • hardwood floors
- Upper level laundry, • Separate entrance to bsmt. •Steps to school, TTC

Mattamy Staines New Development. • Price $449,000

மேலதிக தகவல்களுக்கு: 416.292.0557




வாழ்க்கை என்பது வாகனமல்ல, அடுத்தவன் வண்டியிலே பழகிய பிறகு சொந்த வண்டி வாங்குவதற்கு.

• திருமணத்தை முறித்து மறுமணம் செய்வது மட்டுமல்ல, காதலை தறித்து மறுகாதல் புரிவதும் 2ஆம் தாரமே!

# தமிழர் நிர்வாகத்தில் ஒரு EMBASSY

விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது

## ஆனால்



- *வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)*
- *இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)*
- *இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)*

416-332-8451
Finch / Middlefield
5200 Finch Ave., Scarborough

சமோசாவிற்கு அழையுங்கள்
416-332-0944

# சினிமா தொலைக்காட்சி சேவை

சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு Cable 640இல் தமிழில் சினிமாவுக்கான 30 நிமிட தொலைக்காட்சி சேவை ஒன்று கடந்த வாரம் முதல் ஒளிபரப்பாகின்றது. Red Winter பட இயக்குனர் நாத் இன் தயாரிப்பில் சினிமாவின் புதிய பரிமாணங்களை, வெளிக்கொணர்வதே இவர்களது நோக்கம். இத்துடன் கனடிய இலங்கை, புலம் பெயர் சினிமா முயற்சிகளை அறிமுகப்படுத்துவதும் இந்நிகழ்வின் நோக்கமாகும்.

விளம்பர கட்டுரையாளர் பரம் ஜி, சுதாசண், வாசன் போன்ற தேர்ந்த கலைஞர்கள் இந்நிகழ்வை மேலும் மெருகூட்டுகிறார்கள். இவர்களது இம்முயற்சி வெற்றி பெற "விளம்பரமும்" வாழ்த்துகின்றது.

# சில திரைப்பட முயற்சிகள்

• கோகுலன் என்ற புலம் பெயர் பிரித்தானிய வாசி, "கூத்தாடி" என்ற படத்தை கூத்துக் கலைஞர்களை கௌரவிக்கும் முகமாக எடுக்கின்றார். தலைவாசல் "விஜய்", ஆதி போன்ற நடிகர்கள் நடிக்கின்றார்கள்.

• "மாற்று" போன்ற குறும் படங்களை இயக்கிய "புதியவன்" (இவரும் புலம் பெயர் பிரித்தானியவாசி") இலங்கையில் 35mm இல் "மண்" என்ற படத்தை தயாரித்து நெறியாள்கை செய்துள்ளார். இதில் பல இந்திய தொழில்நுட்ப கலைஞர்களுடன், இலங்கை நடிகர்களும் பங்குபற்றியுள்ளனர். புத்தளம் பகுதியில் படமாக்கப்பட்ட இப்படம் கிராமிய மணத்தை சிறப்பாக வெளிக்கொணர்ந்துள்ளது" என புதியபார்வை சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது. இப்படம் மிகவிரைவில் கனடாவில் திரையிடப்படவுள்ளது.

மேலும் பல பக்கங்கள் 20, 22

# இலக்கியக்காரனின் இறுதி வார்த்தை

18 ஆம் பக்கத் தொடர்ச்சி

இன்றும் சிலர் இவன் எழுதிவைத்ததை நிராகரிக்கிறார்கள். மார்க்கோ அரைவாசி சரித்திரக்காரன், அரைவாசி கற்பனைக்காரன் என்று குற்றம் சாட்டுகிறார்கள். ஓர் இடத்தில் மார்க்கோ எழுதுகிறான்:

"ஒரு ராட்சதப் பறவை யானையை தன் கால்களில் இடுக்கிக்கொண்டு பறக்கும். நல்ல உயரத்துக்கு எழும்பியதும் தொப்பென்று யானையை கீழே போட்டு அதன் எலும்புகளை உடைக்கும். அதன் பிறகு இறைச்சியை கொத்தி சாப்பிடும்."

இப்படி புளுகுகளைச் சேர்த்ததால் எது உண்மை, எது பொய் என்று தெரியாமல் குழப்பம் ஏற்பட்டது. இன்னும் சில வரலாற்று ஆசிரியர்கள் இவன் சீனாவுக்கு போனதே கிடையாது, தன் பயணங்களில் கேள்விப்பட்டதையும், கற்பனையையும் கலந்து கதை விட்டிருக்கிறான் என்று கூறுகிறார்கள். அதற்கு காரணம் இருக்கிறது. சீனாவின் புகழ் பெற்ற தேநீரைப்பற்றியோ, அவர்கள் குச்சிகளினால் சாப்பிடுவது பற்றியோ ஒரு வார்த்தை அவன் எழுதவில்லை. நீண்ட நெடுஞ்சுவரைப்பற்றி சொல்லவில்லை. சீனப் பெண்கள் கால்களை துணியினால் சுற்றி இறுக்கக்கட்டி சிறுக்க வைப்பது பற்றியும் அவன் கூறவில்லை.

உண்மை சரித்திரத்தை எழுதுபவர்கள் அதில் சிறு பொய் சேர்த்தாலும் உண்மையின் மதிப்பு போய்விடுகிறது. மார்க்கோ போலோ அருமையான பயணச் சித்திரங்களை இலக்கியமாக்கியபோது அவற்றின் சுவையை மேலும் அதிகமாக்க சிறிது புனைவை கலந்திருக்கிறான். அவன் பெரும் பொய்யனோ அல்லது சரித்திரக்காரனோ தெரியாது. ஆனால் அவன் பெரும் பயணி. அதனிலும் சிறந்த இலக்கியக்காரன்.

அவன் இறக்கும்போது அவனுக்கு வயது 70. அந்தக் கடைசி நிமிடங்களிலும் அவன் *இலக்கியக்காரனாகவே வாழ்ந்தான். "நான் பார்த்ததில் பாதியைத்தான் கூறினேன், மீதியை சொல்லவே இல்லை" என்று மர்மமாகச் சொல்லிவிட்டு இறந்து போனான்.*

*அவன் சொல்லாமல் விட்ட பாதி சரித்திர மூட்டைகளா, புளுகு மூட்டைகளா?*

*அவனுக்கு மட்டுமே தெரியும்.*

*நன்றி: தீராநதி*



# ஞானம்ஸ் ஸ்ரூடியோ

1 Hour Photo Lab: 3 x 5 & 8 x 12

*Professional Photographer* - கதிர்- 416-750-8118

2381 Eglinton Ave., E.,

Kennedy / Eglinton, Scarborough





# என்றும் நிலையானது

13 ஆம் பக்கத் தொடர்ச்சி

எம்மிடத்தில் காணப்படும் மிகக் குறைபாடான விடயம் என்னவென்றால் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை நாம் வளர்ப்பதில்லை. நாம் எதிர்பார்த்த மாற்றம் நமக்குக் கிடைக்காமல் மற்றவர்களுக்கு கிடைக்கும் போது அதை மனதார வரவேற்கும் அல்லது பாராட்டும் பக்குவமும் நம்மிடம் குறைவு. மாற்றத்தை முன்கூட்டியே அறிவது கடினமாக இருப்பினும் கடந்த கால நிகழ்கால அனுபவங்கள் நிச்சியமாக ஒரு ஊகத்தை தரும். அந்த ஊகத்தைச் சரியாகப் புரிந்து கொள்வதே சரியான ஒரு மாற்றத்தை ஆரம்பிப்பதற்கான அடிப்படை. உதாரணமாக உங்கள் குழந்தைகளின் உடலியல் உளவியல் மாற்றங்கள் பெற்றோராகிய உங்களுக்கு ஓரளவு புரியும். இங்கு உடலியல் மாற்றங்களை விட உளவியல் மாற்றங்களையே பெரும்பாலும் கவனத்திற்கு எடுத்துக் கொள்வீர்கள். இந்த உளவியல் மாற்றத்திற்குரிய காரணங்களைக் கண்டுபிடிப்பதில் பெரும்பாலான பெற்றோர்கள் தவறிவிடுகிறார்கள். மாறாக பல்வேறு சந்தேகங்களின் அடிப்படையில் முடிவுகளை மேற்கொள்கிறார்கள். மாற்றங்கள் பற்றிய இன்னொரு சுவாரஷ்யமான விடயம் என்னவென்றால் இயற்கை சார்ந்த மாற்றங்களைத் தவிர்ந்த ஏனைய மாற்றங்கள் மனிதனால் உருவாக்கப்படுகின்றன என்பதுதான். புதிது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட, கண்டுபிடிக்கப்படுகின்ற விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் வாழ்வியலில் பல மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. ஒரு பொருளை உற்பத்தி செய்யும் போது அதற்கான தேவை என்ன என்பதை முன்கூட்டியே அறிந்த பின்னர் தான் உற்பத்தி செய்தார்கள். ஆனால் விஞ்ஞானத்தின் அதிவேக வளர்ச்சி இந்த நிலைமையை முற்றாக மாற்றிவிட்டது. இப்போது ஒரு பொருளை உற்பத்தி செய்த பின்பு அதற்கான தேவையை உருவாக்குகிறார்கள். உதாரணமாக நவீன கைத்தொலைபேசிகள், புகைபடக்கருவிகள் போன்றவை சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரே அதன் தேவையை உருவாக்குகின்றார்கள். நவீன தொழில்நுட்ப உத்திகள் இந்த மாற்றத்திற்கான காரணிகளாகின்றன.

மாற்றங்கள் எப்படியிருப்பினும் அந்த மாற்றங்களை அறிவு பூர்வமாகக் கையாள்வது அவசியமாகின்றது. பலமுறை வானொலிகளில் இந்த சமுதாயமாற்றங்கள் பற்றிக் கலந்துரையாடியுள்ளார்கள். நாம் வாழும் நாட்டின் கலாசாரத்திற்கேற்ப நாமும் மாறவேண்டுமா என்றெல்லாம் கலந்துரையாடுகிறார்கள். பெரும்பாலான கலந்துரையாடல்கள் உருவ அமைப்பு உடை அலங்காரம் போன்றவற்றுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன. இவையெல்லாம் இங்குள்ள முதலாவது தலைமுறையை அடிப்படையாகக் கொண்டவை. இந்தக் கலாச்சாரமாற்றங்கள் உடையிலும் உருவத்திலும் மட்டுமல்ல உள்ளத்தளவிலும் இங்குள்ள இரண்டாவது, மூன்றாவது தலைமுறைகள் மாறுவதற்கு வழிவகுக்கலாம். ஏனெனில் ஒரு மொழியைக் கற்கின்றபோது அதுசார்ந்த கலாசாரமும் மறைமுகமாகத் திணிக்கப்படுவது தவிர்க்கமுடியாதது என்பதை தெளிவாக உணர்ந்து கொள்ளுங்கள். மாற்றங்கள் எங்கு நிகழ்ந்தாலும் எப்படி நிகழ்ந்தாலும் நமது பிறப்புரிமைகளாகிய மதம் மொழி கலாசாரம் என்பவற்றையும் வாழ்வுரிமையாகிய அரசியல் பொருளாதாரம் போன்றவற்றையும் பாதிக்காதவகையில் கையாளுதல் நமது பிரதான கடமையாகும். உங்கள் எதிர்காலச் சந்ததிகள் எதிர்நோக்கும் மாற்றங்கள் பற்றிய எதிர்மாறான கருத்துக்களுக்கு இடமளிக்காதீர்கள். ஏனெனில் பிறப்புரிமையும், வாழ்வுரிமையும் நாமாக மாற்றினால் ஒழிய தாமாக மாறுவதில்லை. ஆசியாவிலே வாழ்ந்த யானை ஒன்று அமெரிக்காவில் வாழ்ந்தாலும் அது யானைதான், பூனையல்ல. அதன் குட்டியும் யானைக்குட்டிதான், பூனைக்குட்டி அல்ல. குட்டியின் குட்டியும் யானைக்குட்டியும் தான். பூனைக் குட்டியல்ல. புரிந்து கொள்ளுங்கள்.

# *Coming...* GTA SQUARE




**Exclusive Broker**
**HOMELIFE GTA REALTY INC.**
**416-321-6969**

## For info: 416-412-1445

**E-mail: info@kingedwardinc.com**

# ‘வேறு உள்ள குழுவையெல்லாம் மானிடம் வென்றதம்மா’

‘கம்பன் இசைத்த கவி எல்லாம் நான்’, ‘புகழ் கம்பன் பிறந்த தமிழ்நாடு’, ‘யாம் அறிந்த புலவரிலே கம்பனைப் போல்’ எனப் பல்வேறு விதமாக கம்பனைச் சொன்ன பாரதி கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்--- என்று உருகுகின்றான். இதுவே கம்பனைப் பற்றிச் சொன்னவற்றில் பொருத்தமாகவும் மிகவும் அர்த்தம் உள்ளதாகவும் இருக்கின்றது என்று நினைக்கின்றேன்.

தன்னுடைய காவியத்தின் மூலம் ஒரு கடவுள் புகழை தமிழர்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கமா கம்பனுக்கு? அல்லது இன்னொரு பண்பாட்டை தமிழுக்கு கொண்டுவரும் நோக்கமா?

‘வேறுள்ள குழுவையெல்லாம் மானிடம் வென்றதம்மா.’ இதுவே இந்த கம்ப காப்பியத்தின் நோக்கமாக இருக்க வேண்டும் என்பதற்குப் பல சான்றுகளை அள்ளித்தருகின்றான்.

ஒரு இல், ஒரு வில், ஒரு சொல்- இதுதான் ராமன். இந்த இராமன் கதையை மிகவும் சுருக்கிப் பார்த்தால் கிடைப்பவை. ஒருவன் மனைவியை இன்னொருவன் அபகரித்துக் கொண்டு செல்கின்றான். அவளை மீட்பதே இந்த மாபெரும் காவியத்தின் கதை. யுத்தமும் கண்ணீரும் பிரிவும், மகிழ்வும் கொண்ட இக்காவ-ியத்தில் மானிட மேன்மை, மனிதர்களாக வாழவேண்டும் என்ற துடிப்பு உள்ளன.


## செல்வம் அருளானந்தம்

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அ.ஃது இன்றேல்
மண்புக்கு மாய்வது மண்
என்ற தெய்வக் கவி திருவள்ளுவரின் வாக்கு கதை முழுவதும் கடும் கோடையில் பரவும் இதமான குளிரென மகிழ்வைக் கொடுக்கின்றது. இலைகளையும், மலர்களையும் தடவி வரும் தென்றலின் சுகத்தை வீசி எறிகின்றது. ‘நூலில் மேலும் மேலும் தேடும் பொழுது இராமன் என்ற பெயரை மூலப் பரம் பொருளுக்கு பெயராக இக்கவிஞன் பயன்படுத்துகின்றானே தவிர மும் மூர்த்திகளுக்குள் ஒருவராக கூறப்பெறும் திருமாலுக்கு இப்பெயரை வழங்கவில்லை என அறியமுடிந்தது. ‘நிறுவப்பட்டதும், அக்கால மக்களுள் பெரும்பான்மையோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான வைணவ சமயத்தை தன் காப்பியம் முழுவதிலும் எந்த இடத்திலும் கம்பன் குறிப்பிடவே இல்லை’ எனப் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் கூறுகின்றார்.

நான் அறிந்த கால த்தில் கம் பனை மிக உயர்வாகப் பேசியவர் களும் அவனைக் கற்றவர் களுமாக இருவரைச் சொல்லலாம். நீதியரசர் மு.மு. இஸ் மாயில், பேராசிரியர் யேசுதாசன். இருவரும் சைவ, வைணவ சமயத்தை சார்ந்தவர்கள் அல்ல. தாங்கள் நம்புகின்ற கடவுள்களின் மீது மிக விசுவாசம் உள்ளவர்கள். தமிழ் மீது கொண்ட பற்றும் மானிடம் மீது அதிமானிடம் ஆகவேண்டும் என்ற கனவுமே கம்ப காவித்தின் மீது இவர்களை பற்றுவைக்கச் செய்தவை.

தமிழின் கதி இரண்டென்பார். க - கம்பன், தி - திருவள்ளுவர். கம்பன் மானிடம்தான் பாடினான் என நான் சொல்லப்போகும் தரவுகள் சரியில்லை என்று வைத்துக் கொண்டாலும், எத்தனையோ வாத, பிரதிவாதங்கள் இருந்தாலும், கம்ப காப்பியம் தழுவலானாலும் (தழுவல் இல்லை அது தமிழ்க் கதைதான் என்ற வாதங்களும் உண்டு), மொழியாலும், நடையாலும், பண்பாட்டுக் கூறுகளாலும் இது ஒரு தமிழ் நிலக் காப்பியம் என எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

காலமெனும் ஆழியாலும்
காற்று மழை ஊழியாலும்
சாகாது கம்பனவன் பாட்டு-அது
தலை முறைக்கு எழுதிவைத்த சீட்டு
என்று கவியரசன் கண்ணதாசன் கவிதை பாடுகின்றான்.



இந்தக் கம்பன் யார்?

‘மானுடம் வெல்ல வேண்டும்’ என்ற கவிதை பாட வேண்டும் என்ற சூழல் வந்த காரணம் என்ன என்று பார்ப்பதற்கு முன்


வேதங்கள் அறைகின்ற
உலகெங்கும் விரிந்தன உன்
பாதங்கள் இவை என்னில்
படிவங்கள் எப்படியோ?
என கடவுளின் முடிவிலாத வியாபகத்தை புகழ்கின்ற இக்கவிஞனின் கடவுள் கொள்கையென்ன?

ஒன்றே எனில் ஒன்றேயாம்
பலவென்று உரைக்கின் பலவேயாம்
அன்றே என்னில் அன்றேயாம்
ஆமே என்னில் ஆமேயாம்
இன்றே என்னில் இன்றேயாம்
உளது என்று உரைக்கின் உளதேயாம்
நன்றே நம் குடிவாழ்க்கை
நமக்கு இங்கு என்னோ பிழைப்பு அம்மா!

கடவுள் ஒன்றென்றால் ஒன்று பல என்றால் பல கண்ணில் காணும்
பொருள் எல்லாம் அவனே என்பார்க்கும் அவ்வாறே தோன்றுவான்
கடவுள் ஒருவர் இல்லை என்பார்க்கும் அவ்வாறு சாதிக்குமாறு
நிற்கும் முழுமுதல் கடவுளே உம்மை நம்பி எப்படிக் கடைத்தேறிப் பிழைப்பேன்

(வளரும்)


COMPUTER REPAIRS & UPGRADES



• Virus Removal, Internet Sharing Computer Tune Up மற்றும் அனைத்து Computer திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வைத்தோ அல்லது எடுத்துச் சென்றோ திருத்தித் தரப்படும்.
• உங்கள் வசதிக்கும் தேவைக்கும் ஏற்ப Computer Assembling செய்து கொள்வதற்கும் உதிரிப்பாகங்களை நியாய விலையில் பெற்றுக் கொள்வதற்கும் அழையுங்கள் - RAJ Paramasamy

A+ Certified PC Technician, Microsoft Certified Professional

தொலைபேசி எண் - 416.587.1619 / 416.283.1643

Free Estimate




AIR LINK TRAVEL LTD.

5200 FINCH AVE. E., SCARBOROUGH, ON., FINCH & MIDDLEFIELD

TEL: 416.292.6200 FAX: 416.292.7478

மகிழ்ச்சி தரும் இல்லம்





**Anton Jeeva**, P.Eng.
“Princely”
Sales Representative

HomeLife Ultimate Realty Inc.

Realtor - Member
Office - 416-752.7277
Direct - 416.575.5055
E.mail:antonhomes@yahoo.com
2401 Eglinton Ave. East, Suite 208, Toronto

JAFFNA SUPER STORE




உங்களுக்குத் தேவையான அனைத்து இலங்கை, இந்தியா தானிய வகைகள், உடன் மரக்கறி வகைகள், இறைச்சி வகைகள், கடலுணவு வகைகள், மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் யாவற்றையும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

ஜவ்னா சுப்பர் ஸ்ரோஸ்

416-289-8812

1221 Markham Rd., #14
(Markham / Ellesemere)
குவாலிற்றி பேக்கறிக்கு அருகாமையில்




REGINOS PIZZA.COM

1 Large Pizza
1 Topping + Cheese
1 Free Dipping Sauce
$5.99

Centre Number: 416.321.6666

1 Extra Large Pizza
3 Topping + Cheese
1 Free Dipping Sauce
$10.99

Young & Clark
126 Clark Ave., E
Thornhill
905.709.80.04

Morningside & 401
790 Military Trail
Scarborough
416.284.30.03

Finch & Pharmacy
2535 Pharmacy Ave.
Scarborough
416.495.12.22

Brimely & Finch
135 Montezuma Trail
Scarborough
416.321.54.44